# வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் விரிவாக்கம்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்.**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்றித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரநிநிதகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

மேலதிக விபரங்களுக்கும், பாடத்திட்டங்களும் எழுதவேண்டிய முகவரி:


Harvestime International Institute
14431 Tierra Dr.
Colorado Springs, CO 80921
U.S.A.



© Harvestime International Institute

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கையேட்டை பாவிப்பது எவ்வாறு | | I |
| குழுவாக கற்றலுக்கான ஆலோசனைகள் | | II |
| அறிமுகம் | | 1 |
| பாடத்தின் குறிக்கோள்கள் | | 2 |
| 1. | ஆதியிலே | 3 |
| 2. | பிரிக்கப்பட்ட உலகம் | 12 |
| 3. | தேவன் உலகத்தை பார்க்கும் விதமாக பார்த்தல் | 17 |
| 4. | உலகமானது வார்த்தையிலுள்ளது: பழைய ஏற்பாடு | 24 |
| 5. | உலகமானது வார்த்தையிலுள்ளது: புதிய ஏற்பாடு | 40 |
| 6. | உலகிலுள்ள சபை | 50 |
| 7. | காத்திருக்கும் உலகம் | 63 |
| 8. | உலக கிறிஸ்தவனாகுதல் | 76 |
| 9. | சர்வலோக பரிந்து மன்றாடுதல் | 88 |
| 10. | வேதாகம உலக கண்ணோட்டத்தை பகிர்ந்தளித்தல் | 99 |
| 11. | அப்பொழுது முடிவு வரும் | 116 |
| சுய பரீட்சைக்கான விடைகள். | | 123 |

# கையேட்டை பாவிப்பது எவ்வாறு

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

திறவுகோள் வசனம்: **அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.**

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

### மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

## முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி  என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உஙக்ள பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும்,  உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

## இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள்.  வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள **தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின்** சகல பகுதிகளையும் கலந்துரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருபின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.
மேலதிக படிப்பினைக்கு : இத்திட்டத்தை குருவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.  அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**குறுங்கால பாடத்திட்டம்: பெருகுதல்**
**பாடம் :** வேதாகம உலக கண்ணோட்டத்தின் விரிவாக்கம்.

# அறிமுகம்

இப்பாடமானது சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் மூன்றாவது குறுங்கால பயிற்சியின் முதலாவது பாடத்திட்டமாகும். முதலாவது பாடதிட்டமானது, ஆவிக்குரிய அறுவடையின் தரிசனத்தை கலந்துரையாடும் 'தரிசனங்காணுதல்' புத்தகமாகும். இரண்டாம் பாடதிட்டமானது, இந்த தரிசனத்தை நிறைவேற்றும் முகமாக அடிப்படை பயிற்சியை கொடுக்கும் 'பிரதிநிதி' பாடமாகும். இந்த மூன்றாவது பாடத்திட்டத்திலே, நீங்கள் பெற்றுக்கொண்ட தரிசனத்தை எவ்வாறு விரிவாக்கம் செய்வது என்றும் நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது எவ்வாறு என்றும் கற்றுக்கொள்வீர்கள். ஆவிக்குரிய அறுவடையை செய்யும் வேலையாட்களை எவ்வாறு பயிற்றுவிப்பது என்பதையும் மற்றவர்களை யார் பயிற்றுவிக்க முடியும் என்பதையும் கற்றுக்கொள்வீர்கள்.

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2தீமோத்தேயு 2:2)**

இந்த பயிற்சியளிக்கும் தொடர் சக்கரமானது 'பலுகிப் பெருகுதல்' என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இது ஆவிக்குரிய வேலையாட்களின் சக்தியை பெருக்குகின்றது.

வேதாகம உலக கண்ணோட்டத்தின் விரிவாக்கத்தின் அடிப்படையானது ஆவிக்குரிய பெருகுதலாகும். வேதாகம உலக கண்ணோட்டத்தை உடையவராக இருத்தல் என்பதானது வேதாகமத்திலே வெளிப்படுத்தப்பட்டுள்ளதின்படி உலக காரியங்களை காணுவதாகும். நீங்கள் அரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள், கற்றவர்கள் என்ற ரீதியில் உலகை நோக்கமாட்டீர்கள். உங்கள் சொந்த கலாச்சாரத்தின் அடிப்படையில் உலகை நோக்கமாட்டீர்கள். மாறாக, தேவன் பார்க்கின்ற விதமாகவே உலகத்தைப் பார்ப்பீர்கள். அவரது நோக்கத்தின்படியாகவே உலகை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். 'விரிவாக்கம்' என்பதானது, குறிப்பிட்ட ஒரு பகுதியின் அறிவை விருத்தி செய்தல், கிரகித்துக்கொள்ளுதலாகும். ஆவிக்குரிய வேலையாட்களின் பெருக்கத்தை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் நீங்கள் வாழத்தக்கதாக, இவ் உலகத்தைக் குறித்த அறிவை இப்பாடநெறியானது உங்களுக்கு விரிவாக்கம் செய்கின்றது.

இப்பாடநெறியானது, தேவ வார்த்தையாக எழுதப்பட்டுள்ள வேதாகமம் வெளிப்படுத்தும் 'உலக கண்ணோட்டத்தை' விபரிக்கின்றது. இது ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை பரந்துள்ளது. நாம் 'காலம்' என அழைக்கின்றவிதமாக, ஆரம்பம் முதல் முடிவுவரை உலகத்திற்கும் நாடுகளுக்குமான தேவனுடைய திட்டத்தை இது விளக்குகின்றது. 'உலக கிறிஸ்தவனாகும்' சவாலை, தேசத்திலுள்ள ஒவ்வொரு விசுவாசிக்குமான உத்தரவாதத்தினை, இப்பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய ஆவிக்குரிய நிலைமையையும், உலகத்தில் சந்திக்கப்படாத மக்கள் குழுக்களிடையே சுவிசேஷத்தை பரவசம்செய்ய வேண்டிய அவசர தேவையையும் அதன் பாரத்தையும் இப்பாடநெறியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் உலகத்தில் திருச்சபையின் உத்தரவாதம் என்ன என்பதையும் தேவன் பார்க்கின்றபடி உலகத்தை நீங்கள் எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதன் நோக்கத்தையும் தருகின்றது. கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக்கோபு 2:26). தனிப்பட்ட நபர்களின் ஈடுபாடு இல்லாத உலக வேதாகம கண்ணோட்டமும் அவ்வாறே வலிமையற்றது. இப்பாடமானது, வேதாகம உலக கண்ணோட்டத்தை பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளரைக் காட்டிலும் மேலானவர்களாக உங்களை மாற்றும் சவாலைத் தருகின்றது. இன்றைய உலகத்தில் தேவன் செய்கின்ற காரியம் எதுவோ, அதிலே பங்குடையவராக மாறும்படியாக உங்களை இப்பாடநெறியானது உற்சாகப்படுத்துகின்றது.

# பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

தேவன் காண்கின்றவண்ணமாக உலகை காணவும்,

உலகைப்பற்றி வேதாகமம் கற்பிக்கின்றவற்றை சுருக்கமாக கூறவும்,

தேசங்களைக் குறித்த தேவனுடைய திட்டத்தை விபரித்துக் காண்பிக்கவும்,

உலகத்தில் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைபரப்புவதற்கு உங்களுடைய உத்தரவாதத்தை உணரவும்,

“உலக கிறிஸ்தவனாக” மாறவும்,

ஊழியர் என்ற வகையில் சர்வதேச பரிந்துபேசுபவரராக இருப்பதற்கு,

வேதாகம கண்ணோட்டத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் உங்களால் முடியும்.

அதிகாரம் ஒன்று

# ஆதியிலே

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடித்ததும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ அனைத்து மனித இனத்தையும், உலகையும் சிருஷ்டித்தவரை இணங்காணவும்.
- ☐ இவ்வுலகத்தில் சிருஷ்டிப்பு சம்பந்தமாக மேலதிகமாக கூறப்படும் வித்தியாசமான கதைகளுக்கு இரண்டு காரணங்களை தரவும்.
- ☐ வேதாகமத்தின் சிருஷ்டிப்பை சில மக்கள் ஏன் ஏற்காதுள்ளனர் என்பதை விபரிக்கவும்.
- ☐ வேதாகமத்தின் உலக கண்ணோட்டம் என்ன என்பதை விபரிக்கவும்.
- ☐ தேவனின் ஏழு நாள் சிருஷ்டிப்பின் போது சிருஷ்டிப்பில் நடத்தையை சுருக்கமாக தரவும்.
- ☐ மனிதனுடைய நிலையையும் அவன் சிருஷ்டிக்கப்பட்ட காரணத்தையும் விவரிக்கவும்.
- ☐ மனிதனுடைய விழுகையின் கதையை சுருக்கமாக தரவும்.
- ☐ மனிதனுடைய விழுகையினால் ஏற்பட்ட விளைவை விபரிக்கவும்.
- ☐ தேவன் உலகத்திற்கு வைத்த நோக்கத்தை பற்றி, வேதாகமத்தின் முதலாவது பகுதியில் இணம்காணவும்
- ☐ எல்லா மனிதர்களும் வாழக்கூடிய இரு உலகங்களை இணங்காணவும் உங்களால் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1)**

## அறிமுகம்

உலகத்தை பற்றி வரையறுக்கப்பட்ட கண்ணோட்டமே அநேக மக்களிடம் காணப்படுகின்றது. அவர்கள் தங்களுக்கு சொந்தமான கிராமம், நகரம், தேசம் என்பவற்றைக் குறித்தே கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் தாம் வாழும் இடத்தை அறியாவிட்டாலும் தம் வாழ்க்கையின் சிறு பகுதியை, பெரும் கோளான ''பூமி''யிலேயே வாழுகின்றனர். அவர்கள் நித்திய முழு உலகம், சகல ஜாதிகள், கலாச்சாரங்கள், பாஷைகள் உட்பட தேவனுடைய விஷேச திட்டத்தை அறியாது உள்ளனர்.

இந்த அதிகாரமானது நாம் வாழும் இந்த உலகம், குறித்து அறிமுகப்படுத்துகின்றது. இது உலகம் சிருஷ்டிப்பையும் அதில் வாழ்ந்த மனிதரையும் குறித்து ஆரம்பத்திலேயே விபரிக்கத் தொடங்கி விட்டது. அதிகாரம் இரண்டானது இவ்வதிகார அறிமுகத்தின் விளக்கத்தையே தொடருவதோடு, இவ்வுலகம் எவ்வாறு தேசங்களாகவும் பாஷைகளாகவும் பிரிக்கப்பட்டது என்பதையும் கொண்டுள்ளது.

## சிருஷ்டிப்பைக்குறித்த புராணக்கதைகள்

சகல கலாச்சாரங்களிலும் சிருஷ்டிப்பு பற்றி பல வித்தியாசமான நம்பிக்கைகள் உண்டு. மனிதன் எங்கிருந்து வந்தான், சிருஷ்டிப்புக்கள் யாவும் எவ்விதமாக வந்தன என்பதை குறித்து விபரிக்க மக்கள் தவறிவிட்டார்கள். பல தேசங்களில் வாழும் மக்களும் அவர்களின் கலாச்சாரமும் தங்களுடைய சொந்த ''புராணக்கதை''களையே, சிருஷ்டிப்பை விபரிக்க பயன்படுத்துகின்றன. சிருஷ்டிப்பைப்பற்றி

பல்வேறுப்பட்ட புராண கதைகள் இரண்டு காரணங்களுக்காக முன்வைக்கப்படுகின்றது:

1. சிருஷ்டிப்பை பற்றிய உண்மையான சத்தியத்தை மக்கள் அறியவில்லை.
2. அவர்கள் கேள்விப்பட்ட சிருஷ்டிப்பின் உண்மையான கதையை அவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை.

## தேவனே சிருஷ்டிகர்

வேதாகமத்திலே உலகத்தின் சிருஷ்டிப்பின் உண்மையான கதை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதியாகமம் 1:1 முதலாம் அதிகாரத்தின் சுருக்கமாவது:

> **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1)**

இவ்வசனம் மெய்யான ஒரே தேவனைப்பற்றியே பேசுகிறது. வேதாகமம் அவரது கிரியைகள் எழுதப்பட்ட தேவனுடைய வசனமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ள புத்தகமாயுமுள்ளது. வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை பற்றி நாம் பேசும் போதெல்லாம், தேவனால் உலகத்தைப்பற்றி வெளிப்படுத்தி எழுதப்பட்ட வேதவசனத்தின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வேதாகமத்திலுள்ள சிருஷ்டிப்பின் சத்தியத்தை சிலமக்கள் ஏற்றுக்கொள்ளாமலிருக்க காரணம் அவர்கள் தேவனைப்பற்றிய அறிவு இல்லாதிருப்பதாகும். தேவன் ஒருவர் இருக்கின்றார் என்ற சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் போது, அவர்கள் மேலுள்ள அவரது ஆளுமையையும் அறிந்துக்கொள்வார்கள். அவரது வார்த்தையை விசுவாசித்து அவர்களது ஈனமான வாழ்வில் எதையாவது அவருக்காக செய்வார்கள். தமது வாழ்வின் வழிமுறைகளை மாற்றிக்கொள்ள விரும்பாத மக்கள், வேதாகமத்தின் சிருஷ்டிப்பை பற்றிய காரியங்களையும் தேவன் இருக்கிறார் என்பதையும் மறுதலித்து விடுகின்றார்கள்.

சிலர் உலகத்தை குறித்த விஞ்ஞானிகளின் கண்டுப்பிடிப்பை ஏற்றுக்கொள்ளாமல் வேதாகமத்தின் சிருஷ்டிப்பின் சத்தியத்தை ஏற்றுக்கொள்கின்றனர். வேதாகமமானது விஞ்ஞானிகளின் கூற்றுக்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அக்கூற்றுக்கள் தனிப்பட்ட நம்பிக்கை அல்லது அனுமானங்கள் என்பதும் உண்மைதான். அது நிரூபிக்கப்பட்ட சத்தியமல்ல. விஞ்ஞானிகளால் எழுப்பப்படுகின்ற சகல சவால்களும் அவர்களது கண்டுபிடிப்புகளிலுள்ள படிப்புகளும், வேதாகமம் கூறும் சிருஷ்டிப்பின் கதை உண்மையானது என்றே நிரூபிக்கின்றன.

## உலகத்தின் சிருஷ்டிப்பு

தேவனது முதலாவது சிருஷ்டிப்பின் கிரியையை ஆதியாகமம் கூறுகிறது என்று நாம் அறிவித்தோம்:

> **பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்ததுஞ ஆழத்தின்மேல் இருள் இருந்தது....... (ஆதியாகமம் 1:2)**

தேவனது உலகம் சிருஷ்டிப்பின் கதையை பின்வரும் வசனங்கள் கூறுகின்றது:

| | |
|---|---|
| முதலாவது நாள்: | இருளும் ஒளியும் (வசனம் 3-5). |
| இரண்டாவது நாள்: | ஆகாயத்தை (வானம்) ஜலத்தினின்று பிரித்தல் (வசனம் 6-8). |
| மூன்றாம் நாள்: | வெட்டாந்தரையும், விருட்சங்களையும் (வசனம் 9-13). |

நான்காம் நாள்: வானத்தின் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் (வசனம் 14-19)
ஐந்தாம் நாள்: நீர்வாழ் மச்சங்களும் பறவைகளும் (வசனம் 20-23)
ஆறாம் நாள்: மனிதனும் நாட்டு மிருகங்களும் (வசனம் 24-25)

வேதாகமத்தில் தேவன் சிருஷ்டிப்பை பற்றி வெளிப்படுத்தியதின் சாரம்சம்......

**அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.**

**அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.**

**(கொலோசெயர் 1:16-17)**

## மனிதனின் சிருஷ்டிப்பு

ஆறாம் நாளில் தேவன் சகல பிரதானமான சிருஷ்டியையும் சிருஷ்டித்தார். அவர் தனது சாயலில் முதலாவது மனிதனை சிருஷ்டித்தார்.

**பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாகளூ அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.**

**தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்ளூ ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:26-17)**

தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை பூமியிலுள்ள மண்ணினாலே சிருஷ்டித்து ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் (ஆதியாகமம் 2:17). தேவன் முதல் பெண்ணை ஆதாமிலிருந்து சிருஷ்டித்தார். ஏவாளின் சிருஷ்டிப்பின் கதையை ஆதியாகமம் 2:18-15 வரையிலும் வாசித்துப் பாருங்கள்.

## மனிதனைக் குறித்த தேவனது நோக்கம்

நீண்ட காலங்களுக்கு முன்பு, உலகத்தின் அரசர்கள் தங்களை போன்ற உருவங்களை செய்து, தங்களுடைய பேரரசின் அனைத்து மாகாணங்களிலும் தங்களை பிரதிநிதித்துவம் படுத்தும்படியாக, தாங்கள் இருக்க முடியாத இடங்களில் வைத்தார்கள். தேவன் தனது சாயலாக மனிதனை சிருஷ்டித்து தன்னை பிரதிநிதித்துவப்படுத்த அவனை உலகத்தில் வைத்தார். மனிதன் தேவனை பிரதிநிதித்துவப்படுத்தும்படியாக முழு உலகத்தையும் ஆளுகை செய்யும் அதிகாரமும் அவனுக்கு கொடுக்கப்பட்டது. மனிதன் உலகத்தில் உள்ள மிருகங்கள், தாவரங்கள் யாவற்றையும் ஆளுகை செய்ய அதிகாரம் பெற்றான்.

மனிதனுக்கு விஷேசித்த உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருந்தது. தனது சாயலாக இன்னும் அநேக மனிதர்களையும் மனுஷிகளையும், தேவனை பிரதிபலிக்கத்தக்கதாக, அவன் பலுகிப்பெருகி பூமியை நிரப்பக் கூடியவனாக இருக்கின்றான்.

**பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 1:28)**

தேவனுடைய எல்லா சிருஷ்டிப்பிலும் மனிதனே விஷேசித்தவனாயிருந்தான். மனிதனானவன் தேவனுடைய சாயலிலேயே சிருஷ்டிக்கப்பட்டான். மிருகங்களில் காணப்படாத நித்திய ஆத்துமாவானது அவனிடமிருக்கின்றது. அவனுக்கு ஆவியும், சித்தமும் இருக்கின்றபடியால் அவனால் கற்று தேவனுடன் உறவு வைத்துக் கொள்ள கூடியதாய் உள்ளது. ஆவியாக இருந்த தேவன் அவன் வாழ்ந்து வந்த அழகிய தோட்டத்திற்குள் வந்து அவனுடன் பேசி, நடந்தார். (ஆதியாகமம் 3:8)

ஏனென்றால் அவரது சிருஷ்டிப்பில் அவனுக்கு கொடுக்கப்பட்ட விஷேச நிலையானது, தேவனை பிரதிநிதித்துவப்படுத்தும் அவரது சாயலாகும். தன்னை சிருஷ்டித்த தேவனுடன் உறவுகொள்ளவும், ஆராதிக்கவும் கூடியதாகவே அவன் சிருஷ்டிக்கப்பட்டான்.

**நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.....**

**இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள். (ஏசாயா 43:7,21)**

ஆதாமும் ஏவாளும் தங்களைப்போன்ற மனிதரை மீள் சிருஷ்டித்து உலகத்தை நிரப்பினார்கள்.. மக்கள் பரிசுத்தமுள்ளவர்களாக, தேவனை பிரதிபலிக்கிறவர்களாக, தங்களை சிருஷ்டித்த தேவனுடன் ஆராதித்து தொடர்புகொள்ள கூடியதாக இருந்தனர். ஆனால் இந்த அழகிய திட்டத்தை பாழாக்கும் விதமாக சில விடயங்கள் நடைபெற்றது..

## மனிதனின் வீழ்ச்சி

வேதாகமத்தில் மிக துக்கரமான கதைகள் ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் காணப்படுகின்றது. ‘‘மனிதனின் விழுகை’’ என்று அழைக்கப்படுவதை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனிதன் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் விரும்பியதை தேர்ந்தெடுக்க சுயாதீனமாக இருப்பது போலவே மனிதனும் விரும்பியதை தேர்ந்தெடுக்க சுயாதீனமுள்ளவனாக இருந்தான். தனக்கு சொந்தமான தீர்மானங்களை எடுக்கக்கூடியவனாக இருந்தான்.

ஆதாமும் ஏவாளும் வாழ்ந்த தோட்டத்திலே, பலவகையான மரங்கள் இருந்த போதும் இரண்டு மரங்கள் விஷேசமானவையாக இருந்தது. ஒரு மரம் ‘‘ஜீவவிருட்சம்’’ என அழைக்கப்பட்டது. (ஆதியாகமம் 3:22). ஆதாமும் ஏவாளும் அக்கனியை சாப்பிடலாம், அப்பொழுது மரணமடையாமல் சதாகாலமும் அவர்களால் ஜீவிக்க முடியும்.

ஆனால் அத்தோட்டத்தில் இன்னுமொரு மரமும் இருந்தது. அம்மரம் ‘‘நன்மை தீமை அறியத்தக்க விருட்சம;’’ என அழைக்கப்பட்டது. (ஆதியாகமம் 2:17) இக்கனியை ஆதாமும் ஏவாளும் புசிக்காதபடி தேவன் ஒதுக்கி வைத்தார். எல்லா பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் தீமையான அனுபவத்தில் செல்ல அவர் விடாமல், அவர் அம்மரத்தின் கனியைப் புசித்தால் சாவாய் என எச்சரித்தார்.

தேவனுடைய எச்சரிப்பை மனிதன் கவனிக்கவில்லை. தேவனுக்கு சாத்தான் என்னும் ஓர் விரோதி இருந்தான். சாத்தான் ஒரு காலத்தில் அழகான தேவனுடைய தூதனாக காணப்பட்டான். அதே நேரம் அவன் தேவனைப்போல் மகிமையை அடைய வேண்டும் என அவன் தீர்மானித்தான். சாத்தான் பரலோகத்தில் தேவதூதர்கள் மத்தியில் கலகத்தை உண்டாக்கினான். இதை குறித்து நீங்கள் உங்களுடைய வேதாகமத்தில் ஏசாயா 14:12-17ல் வாசிக்கலாம்.

சாத்தானுக்கு மனிதன் தேவனை தொழுவதை விரும்பவில்லை. சாத்தான் ஏதேன் தோட்டத்திலே முதலாவது பெண்ணிடமும் பின்பு ஆணிடமே வந்தான். அவன் சர்ப்பத்தை போல் வேஷம் தரித்திருந்தான். அவன் பிழையான போதனை செய்வதன் மூலம் அவர்களை சோதித்தான். அவர்கள் அந்த சோதனைக்குட்பட்டு, தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தார்கள்.

மனிதன் பாவத்திற்குள் விழுந்தமையால் முழு உலகிற்குள்ளும் ஓர் மாறுதல் ஏற்பட்டது. மரங்களையும், பிராணிகளையும் அதிக காலம் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. மனிதன் அவைகளை ஆளும் போது அவனுக்கு சங்கடங்கள் ஏற்பட்டது. மிருகங்கள் கொடூரமானவைகளாகவும், பூமியானது நெருஞ்சில்களையும், முட்களையும் முளைப்பிப்பனவாக

மாறினது. கால நிலையும் பயங்கரமாக மாறி வெள்ளங்களையும், இடர்களையும் ஏற்படுத்தினது.

இன்றைய உலகில் இருக்கின்ற சகல கெட்ட காரியங்களும், தொற்று நோய்களும், வேதனைகளும் முதல் மனிதனின் விழுகையாலேயே ஏற்பட்டது. பாவம் உலகில் பிரவேசித்து வேதனையை உருவாக்கியது. தேவன் விரும்பியதை செய்யாதமையால் மனிதன் தண்டனையாக மரணத்தை கொண்டு வந்தான். சகல மனிதரும் கடைசியாக சரீர மரணத்தைதை அனுபவிக்க வேண்டும் என்பது நாம் அறிந்ததே!

பாவத்தின் காரணமாக மனிதன் தேவனைவிட்டு பிரிந்ததுதான் மிகவும் மோசமான காரியம். மனிதனில் பிரதிபலித்த தேவனுடைய சாயல் கெடுக்கப்பட்டுவிட்டது. பாவத்தின் காரணமாக தேவனுடனான உறவையும், தொடர்பையும் மனிதன் இழந்து போனான்.

## மிகப்பெரிதான வாக்குத்தத்தம்

மனித வரலாற்றில், இருளான வேளையில் தேவன் மிகப்பெரிதான வாக்குத்தத்தத்தை கொடுத்தார். தேவன் பிசாசைப் பார்த்து:

> **உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்ளூ அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதியாகமம் 3:15)**

தேவனுடைய விஷேசித்த திட்டத்தின் முதலாவது வெளிப்படுத்தல் இதுவே. நூற்றாண்டு காலமாக மனிதனுக்கும் சாத்தானுக்குமிடையே இருக்கின்ற போராட்டத்தை இது வெளிப்படுத்தினாலும், யாரோ ஒருவரை தேவன் அனுப்பி மனிதனின் எதிரியை நசுக்கி போட்டு, மீண்டும் தேவனுடன் மனிதனின் உறவை புதுப்பிப்பார். அந்த ''யாரோ ஒருவர்'' கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவேயாகும். நீங்கள் மனிதனை பற்றியதான தேவனது இந்த விஷேசித்த திட்டத்தை அறிய இப்பாடத்தை தொடர்ந்து படியுங்கள்.

## இரண்டு உலகங்கள்

ஆதியாகமம் 3:15 இன்னுமொரு சத்தியத்தையும் வெளிப்படுத்துகின்றது. சகல மனிதரும் இரு உலகங்கில் வாழுகின்றார்கள். நாம் இயற்கையான கண்டங்களையும் தேசங்களையும் கொண்ட உலகில் வாழுகின்றோம். எமது சாதாரண கண்களால் நாம் இந்த பௌதீக உலகத்தை காண்கின்றோம். அதே வேளையில் நாம் ஆவிக்குரிய உலகிலும் வாழுகின்றோம். இவ் ஆவிக்குரிய உலகத்தை உங்கள் சாதாரண கண்களால் காண முடியாது. ஆனால் நீங்கள் பௌதீக உலகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

சகல மனிதரும் பௌதீக உலகத்தில் சாதாரண சரீரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றபோதும், நித்தியமான ஆவி, ஆத்துமாவுடனே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 3:15ல் கூறப்பட்டுள்ள ''நசுக்குவார்'' என்ற சொல் ஆவிக்குரிய உலகில் உள்ள பெரிய போராட்டத்தை குறிப்பிடுவதாக உள்ளது. இது மனிதனுடைய இருதயம், சிந்தை, ஆவி, ஆத்துமா என்பவற்றிலுள்ள போராட்டமாகும். இப்போராட்டத்தில் நடுநிலமை இருப்பதில்லை. எல்லா மனிதரும் இரு பிரிவாக விரிக்கப்பட்டுள்ளார்கள். இயேசு சொன்னார்:

> **ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான். (லூக்கா 11:33)**

வேதாகம உலக கண்ணோட்டத்தின் விரிவாக்கலில் நாம் விளங்கிக் கொள்கிற சத்தியமாவது:

1. சகல மனிதரும் இந்த பௌதீக உலகத்தில் மாத்திரமல்ல, ஆவிக்குரிய உலகிலும் வாழ்கின்றோம் என்பதை நாம் அறிய வேண்டும்.

2. ஆவிக்குரிய உலகிலுள்ள முரண்பாடுகள் நாம் வாழும் இந்த பௌதீக உலகத்தையும் பாதிக்கின்றது. ஆவிக்குரிய உலகில் சாத்தான் செயல்படுகின்றான். அதன் விளைவாக தேசங்களும், மனிதர்களும் தீய காரியங்களில் ஈடுபடுவதை நாம் பௌதீக உலகில் காண்கின்றோம்

3. இந்த மகத்துவமுள்ள ஆவிக்குரிய போராட்டத்தில் நடுநிலைமை கிடையாது. நாம் இயேசுவுக்காக அல்லது அவருக்கு எதிரானவர்களாக இருக்க வேண்டும். அவருக்காக என்றால், தேவனுடைய வார்த்தையில் கூறப்பட்டுள்ளவற்றை விசுவாசித்து, ஞானத்தோடு செயல்படவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காதிருந்தால் சுயநலமுள்ளவர்களாக, பாவ வழிகளில் நடந்து அவருக்கு எதிரானவர்களாக இருப்போம்.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. சகல மனித இனத்தையும், உலகத்தையும் சிருஷ்டித்தவர் யார்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இவ்வுலகத்தில் சிருஷ்டிப்பிற்கு அப்பால் அதை பற்றி கூறப்படும் வித்தியாசமான கதைககளுக்கு இரண்டு காரணம் தருக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. வேதாகமத்தின் சிருஷ்டிப்பு பற்றிய உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் சில மக்கள் மறுதலிப்பது ஏன்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. "வேதாகமத்தின் உலக பார்வை" என்றால் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆறு நாள் சிருஷ்டிப்பு நடத்தையை சுருக்கமாக தருக.

முதலாவது நாள்:-----------------------------------------------------------------------------------------------------------------------

இரண்டாவது நாள்:---------------------------------------------------------------------------------------------------------------------

முன்றாவது நாள்:-----------------------------------------------------------------------------------------------------------------------

நான்காவது நாள்:---------------------------------------------------------------------------------------------------------------------

ஐந்தாவது நாள்:------------------------------------------------------------------------------------------------------------------------

ஆறாவது நாள்:-------------------------------------------------------------------------------------------------------------------------

7. தேவனுடைய மற்ற எல்லா சிருஷ்டிப்பிலுமிருந்து மனிதனை வேறுப்படுத்தி காட்டுவது என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. மனிதன் பாவத்தில் வீழ்ந்த கதையை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

9. மனிதன் பாவத்தில் வீழ்ந்தமையால் ஏற்பட்ட விளைவு என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

10. உலகத்திற்கு தேவன் முதலாவது வெளிப்படுத்திய திட்டத்தை குறிக்கும் வேதாகமத்தின் பகுதியை தருக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

11. எல்லா மனிதர்களும் வாழும் இரு உலகத்தின் பெயர்களை தருக.-

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

உலகத்தின் ஆரம்பம் குறித்தும், தேவனே சிருஷ்டிகர் என்றும் கீழ்கண்ட வசனங்களை படிப்பதன் மூலம் மேலதிகமாக அறிந்து கொள்ளுங்கள்.

### உலகத்தை தேவனே சிருஷ்டித்தார்:

ஆதியாகமம் 1:1-32; 2:3-4; 5:1-2;

நெகேமியா 9:6

யோபு 38:1-41

சங்கீதம் 74:17; 89:11; 104:1-35; 115:15; 121:2; 124:8; 134:3; 136:6; 148:5

பிரசங்கி 3:11

ஏசாயா 40:28; 42:5; 43:1,7; 44:24; 45:8,12,18; 48:13; 54:16; 65:17

எரேமியா 10:12; 27:5; 31:22; 32:17; 51:15

எசேக்கியேல் 28:13,15

ஆமோஸ் 4:13

சகரியா 12:1

மல்கியா 2:10

யோவான் 1:3

அப்போஸ்தலர் 4:24; 17:24

ரோமர் 1:20

எபேசியர் 2:10; 3:9; 4:24

வெளிப்படுத்தல் 10:6

### தேவன் தம்முடைய வல்லமையால் உலகத்தை தாங்குகின்றார்:

சங்கீதம் 75:3; 95:4

கொலோசேயர் 1:16-17

எபிரேயு 1:3; 6:7

2 பேதுரு 3:4

வெளிப்படுத்தல் 4:11

அதிகாரம் இரண்டு

# பிரிக்கப்பட்ட உலகம்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ உலகமானது பல்வேறு பாஷைகளாகவும் குழுக்களாகவும் எவ்வாறு பிரிந்தது என விளக்கவும்.
- ☐ இந்த பிரிவானது, எவ்வாறு பல்வேறு மக்கள் குழுக்கள் ஏற்பட வழிசமைத்து என்பதை விளக்கவும்.
- ☐ மக்களுடைய பிரிவுகளானது எவ்வாறு தேசங்களாக மாறியது என்பதை விபரிக்க முடியும். .

**திறவுகோள் வசனம்:**

> **அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்ரூ அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.**
>
> **நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். (ஆதியாகமம் 11:6-7)**

## அறிமுகம்

முதலாவது அதிகாரத்தில் உலகினதும், மனிதர்களினதும் சிருஷ்டிப்பை குறித்து கற்றுக் கொண்டீர்கள். மனிதன் பாவத்தில் விழுந்து போனதைப்பற்றியும் கற்றீர்கள். ஆதாமும் ஏவாளும் பாவத்துன் கூடவே பிள்ளைகள் பெற ஆரம்பித்தார்கள் அதாவது மனித ஜாதியை உருவாக்கினார்கள். தேவன் அவனை சிருஷ்டித்தது போன்று அவன் நல்லவனாக இருக்கவில்லை. அவனது இயற்கையான எண்ணங்களும், கிரியைகளும் கெட்டவைகளாகவே இருந்தது. மனிதனும் மனுஷியும் ஒன்றாக வாழ்ந்து பெரிய குடும்பமாக மாறினர். ஆனாலும் உலகம் பல பாஷைகளையும், மனித இனங்களையும் தேசங்களையும் கொண்டதாக மாறியது.

கடந்த அதிகாரத்தில் இவ்வுலகத்தில் இரு பிரிவுகள் இருந்தது எனவும், அப்பிரிவுகள் பௌதீக, ஆவிக்குரிய உலகங்கள் எனவும் கற்றீர்கள். ஆனால் இன்றைய உலகில் இன்னும் பல பிரிவுகள் காணப்படுகின்றது. வித்தியாசமான தேசங்களும், கலாச்சாரங்களும், பாஷைகளையும் கொண்டு உலகம் பிரிவுபட்டு காணப்படுகிறது. இப்பிரிவுகள் எவ்வாறு ஏற்பட்டது என்பதை வேதாகமம் விபரிக்கின்றது.

## பாவத்தின் மாதிரிகள்

உலகம் முழுவதிலும் பரவியுள்ள பாவத்தின் மாதிரி ஆதியாகமம் 4:1-6:4 வசனங்கள் விளக்குகின்றது. இப்பாடத்தை தொடங்கு முன்பதாக வேதாகமத்திலுள்ள இவ்வதிகாரங்களை வாசிக்கவும். முதற்கொலையைப்பற்றியும், முதற்பொய்யைப்பற்றியும், மனிதனுடைய சிந்தனைகளில் துன்மார்க்கம்

வளர்ந்ததைப்பற்றியும், அதன் பொல்லாத கிரியைகளைப்பற்றியும் இவ்வதிகாரத்தில் நாம் படிக்கலாம். கடைசியாக முழு உலகமும் பாவத்தால் நிறைந்த போது தேவன்.....

> **மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,**
>
> **தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. (ஆதியாகமம் 6:5-6)**

பாவம் பெருகினபடியினாலே தேவன் உலகத்தை வெள்ளப்பெருக்கினால் அழிக்க முடிவு செய்தார். ஆனாலும் அவர் நோவா என்ற நீதிமானையும் அவனது குடும்பத்தினரையும் காப்பாற்றினார். நோவாவினதும், வெள்ளப்பெருக்கின் கதையையும் ஆதியாகமம் 6:8-9:17 வரையிலும் வாசிக்கலாம். வெள்ளப்பெருக்கின் பின்பு நோவாவின் குடும்பம் பெருகியது. அதே வேளையில் உடனடியாக பாவம் மீண்டும் பெருகியது.

## பாபேல் கோபுரம்

இவ்வேளையிலும் முழு உலகத்திலும் ஒரு பெரிய குடும்பமே இருந்தது:

> **பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது. (ஆதியாகமம் 11:1)**

பாஷைகள் அல்லது கலாச்சார பிரிவினைகள் இருக்கவில்லை. தேசங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. சகல மனிதரும் முற்றிலும் ஒரே பாஷையையும், கலாச்சாரத்தையும், சடாங்காச்சாரத்தையும் கொண்டவர்களாக இருந்தமையால் அவர்களால் பெரிய காரியங்களை செய்ய முடிந்தது. இந்த ஐக்கியமுள்ள மக்கள் தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந்த பரலோகத்திற்கு ஏறி செல்லும் அளவிற்கு பெரிதான கோபுரத்தை கட்ட தீர்மானித்தார்கள். அவர்கள் தமக்கு நற்பெயர் உண்டாக்கிக் கொள்ள விரும்பினர். இந்த பாபேல் கோபுரத்தை பற்றி ஆதியாகமம் 11:1-9 வரை வாசிக்கவும்.

ஒரே பாஷையும், கலாச்சாரமும் இல்லாதிருந்தால் இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை தேவன் அறிந்திருந்தார். ஆகவே தேவன் அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்கினார்:

> **அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்ூ அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறதுூ அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள். இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.**
>
> **நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். (ஆதியாகமம் 11:6-7)**

இவ்வுலகத்தின் பல்வேறுப்பட்ட பாஷைகளின் பிரிவுகளுக்கு ஆரம்பம் இதுவே. ஒவ்வொருவரின் பாஷையை மற்றவர்களால் விளங்கிக் கொள்ள முடியாத நிலையினால் பாபேல் கோபுரம் கட்டுவதை நிறுத்திவிட்டார்கள்.

> **அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். (ஆதியாகமம் 11:8)**

ஒரே பாஷைகளை பேசுகின்றவர்கள் என்பதின் அடிப்படையில் ஒன்றாக சேர்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள். ஒரே பாஷைகளின் அடிப்படையில் குழுக்களாக அல்லது ஆதிவாசிகளாக அல்லது கோத்திரங்களாக சேர்ந்து அமைப்புகளாக செயல்பட்டார்கள். இக்குழுக்கள் பெருகிய போது உலகில் பல்வேறு பிரதேசங்களிலும் குடியேற ஆரம்பித்தனர். இந்த "மக்கள் குழுக்கள்" பாஷைகளின் அடிப்படையில் மாத்திரம் பிரிந்தவர்களாக மாத்திரமல்ல பூகோள ரீதியாகவும் பிரிக்கப்பட்டார்கள். பெரிய மலைகளும், கடல்களும் கூட அவர்களை முற்றிலுமாய் பிரித்தது.

இவ்விதமாய் குழுக்களாக பிரிக்கப்பட்ட மக்கள் தங்கள் பலவிதமான செயல்களால் பலவிதங்களில் அபிவிருத்தியடைந்தார்கள். கலாச்சாரங்களையும், சடங்காச்சாரங்களையும் அபிவிருத்தி செய்து கொண்டனர். அதுமாத்திரமல்ல பலவித மதங்களையும் பல தெய்வ வழிபாட்டு முறைகளையும் கூட விரிவாக்கம் செய்து கொண்டனர்.

பல காலங்களின் பின்னர் இந்த குழுக்கள் மிகவும் பெருகி தேசங்கள் கொண்ட அமைப்பாக மாறினர். பூகோள எல்லைகளை அமைத்து, அரசியல், ஆளுகை முறைகளையும் தமது வசிப்பிடங்களிலே ஸ்தாபித்துக் கொண்டனர். இவ்விதமாக உலகத்தில் பல ஜாதிகள், பல பாஷைகள், பல கலாச்சாரங்கள், பல சடங்காச்சாரங்கள் என்ற பிரிவினைகள் ஆரம்பமாகியது.

## இன்றைய உலகம்

இன்றைய உலகம் கடலால் சூழப்பட்ட ஒரு பெரிய நிலப்பரப்ரபை கொண்டதாக இருக்கின்றது. இந்நிலப்பரப்பை நாங்கள் கண்டங்கள் என்று அழைக்கின்றோம். இக்கண்டங்களின் பெயர்களாவன: வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அண்டார்டிகா ஆகும்.

இந்த கண்டங்கள் ஒவ்வொன்றும் பல்வேறுப்பட்ட ஜாதிகளையும், பல வித்தியாசமான மக்கள் குழுக்களையும் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேசங்களும் தமக்கென அரசாங்கங்களையும், நடைமுறைக்காரியங்களையும், எல்லைகளின் கட்டுப்பாடுகளுடன் வைத்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு தேசத்திற்குள்ளேயே பல பிரிவுகள் உண்டு. மாவட்டங்களும், மாகாணங்களும் என தேசம் பிரிவடைந்துள்ளது. தேசத்திற்குள் வாழும் மக்கள் பல்வேறு ஆதிவாசிகள், மக்கள் குழுக்கள் என்று பிரிந்துள்ளனர். உலகில் பிரிக்கப்பட்டுள்ள இந்த மக்களிடையே அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேள்விப்படாதவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் மெய்யான ஒரே தேவனை அறியாதிருக்கிறார்கள். அநேகர் தங்களுடைய சொந்த பாஷையிலே தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையை கொண்டவர்களாக இல்லை.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உலகமானது பல்வேறுப்பட்ட மொழிக் குழுக்களாக எவ்வாறு பிரிக்கப்பட்டது என்பதை விபரிக்கவும் விளக்கவும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இந்த பாஷைகள் பல்வேறுப்பட்ட மக்கள் குழுக்களை எவ்வாறு பிரிவுகளாக்கியது என்பதை விபரிக்கவும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

4. ஜாதிகள் உருவாகுவதற்கு மக்களின் குழுக்கள் எவ்வாறு வழிவகுத்தது என்பதை விபரிக்குக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

கீழ்கண்ட வரைபடமானது நீங்கள் படித்த வேதாகமத்தில் உலக கண்ணோட்டத்தை சுருக்கமாக தருகின்றது.

தேவன் உலகத்தை சிருஷ்டித்தார்

எல்லா மனிதர்களும் இருவேறுப்பட்ட உலகத்தில் வாழுகின்றனர்.
இயற்கையான உலகமும் ஆவிக்குரிய உலகமும்

இயற்கையான உலகம் → மனிதன் ← ஆவிக்குரிய உலகம

இயற்கையான உலகமும் ஆவிக்குரிய உலகமும்
ஒன்றையொன்று பாதிக்கும் அல்லது எதிர்கொள்ளும்

இயற்கையான உலகமானது பாஷைகளாலும், கலாசாரங்களாலும்,
ஜாதிகளாகவும், அரசியலாகவும் எல்லைகளுக்குட்பட்டு பிரிக்கப்பட்டுள்ளது.

ஆவிக்குரிய உலகமானது இரு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது:
கிறிஸ்தவர்களும் அவர்களுக்கு விரோதமானவர்களும்

ஆவிக்குரிய உலகம்

கிறிஸ்தவர்களுக்கு எதிரானவர்கள் | கிறிஸ்துவுக்கானவர்கள்

அதிகாரம் மூன்று

# தேவன் உலகத்தை பார்க்கும் விதமாக பார்த்தல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ வேதாகமத்தில் ‘‘பிரதான திறவுகோளை’’ இணங்காணவும்.
- ☐ வேதாகமத்தில் ‘‘பிரதான திறவுகோளில;’’ கொடுக்கப்பட்டுள்ள இரு காரணிகளை விபரிக்கவும்.
- ☐ தேவனின் உலகத்திற்கான நோக்கத்தை விபரிக்கும் வேதாகம பகுதியை இனங்காணவும்.
- ☐ தேவன் எவ்வாறு ஆவிக்குரியதாக உலகத்தை பார்க்கின்றார் என்பதை, இயற்கையான உதாரணத்தை உபயோகித்து விளக்குக.

**திறவுகோள் வசனம்:**

> **அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி:**
>
> **எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது.**
>
> **அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. (லூக்கா 24:45-47)**

## அறிமுகம்

தேவன் பார்க்கின்றவண்ணமாகவே விசுவாசிகளும் பார்க்க வேண்டும் என்பதை நீங்கள் கற்றீர்கள். தேவன் அவருடைய வசனத்தில் இவ்வுலகத்தை பற்றி சொன்ன காரியங்களை நீங்கள் அதிகமாக படிக்கும்போது மட்டுமே இவ்வுலகத்தின் தரிசனம் குறித்து அதிகம் தெரிந்து கொள்ள முடியும். இந்த அதிகாரமானது வேதாகமத்தில் உலகப் பார்வையை விளங்கம்படியாக ‘‘பிரதான திறவுகோள்’’ தொகுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வுலகத்தில் தேவனுடைய சித்தத்தை குறித்து கருத்தாலோசனை செய்வதும், அவர் இவ்வுலகத்தை எவ்வாறு நோக்குகின்றார் என்பதும் இயற்கையான உதாரணங்களுடன் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. பழைய, புதிய ஏற்பாடாகிய இரண்டிலும் தேவனுடைய வார்த்தையில் கொடுக்கப்பட்டுள்ள இவ்வுலகத்தைப்பற்றிய படிப்பானது அதிகாரம் நான்கிலும் ஐந்திலும் தொடர்ச்சியாக உள்ளது.

## பிரதான திறவுகோள்

வேதாகமமானது 66 தனித்தனியான புத்தகங்களால் தொகுக்கப்பட்டுள்ளது. எல்லா வேதாகமத்தின் புத்தகங்களும் ஒரு ‘‘திறவுகோள்’’ வசனத்தை கொண்டுள்ளது. நாம் அதை ‘‘திறவுகோள்’’ வசனம் என அழைக்கின்றோம் ஏனென்றால் அது பௌதீக உலகத்திற்கு ஒரு திறவுகோளாக செயல்படுவதால் ஆகும். சாதாரண ஒரு சாவியானது கதவை திறப்பது போல, ஒரு திறவுகோள் வசனமானது ஒரு

குறிப்பிட்ட வேதாகமத்தின் புத்தகத்தின் அடக்கத்தையும், பொருளையும் விளங்கப்பண்ணுவதான கதவை திறக்கின்றது.

முழுமையான வேதாகத்திலும் ஒரு பிரதான திறவுகோள் வசனம் காணப்படுகின்றது. அந்த விசேஷித்த பந்தியானது தேவனுடைய எல்லா வார்த்தைகளுக்குமான அர்த்தத்தை திறக்கச் செய்கின்றது. இந்த பிரதான திறவுகோளானது முழுமையான வேதாகமத்தின் அடக்கத்தையும் அதன் பொருளையும் விளங்கிக்கொள்ளும்படியாக அனுமதிக்கின்றது. தேவன் இவ்வுலகத்தை பார்க்கும் விதமாக நாமும் பார்க்கத்தக்கதாக இது அனுமதிக்கின்றது. வேதாகமத்தின் பிரதான திறவுகோள் வசனமானது இங்கே தரப்பட்டுள்ளது:

> **அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி:**
>
> **எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது.**
>
> **அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. (லூக்கா 24:45-47)**

''வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து'' என்னும் வசனத்தை கவனிக்கவும். இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு இரண்டு அடிப்படை காரணிகளான ஒரு பிரதான திறவுகோளை கொடுப்பதாக இவ்வசனம் அர்த்தப்படுகின்றது. இது தேவனுடைய எல்லா வசனங்களையும் அவர்கள் விளங்கிக் கொள்ளும்படியாக உதவுகின்றது. இவ்விரண்டு காரணிகளையும் நீங்கள் விளங்காவிட்டால் நீங்கள் உண்மையாகவே தேவனுடைய வசனத்தை அறிந்துகொள்ள முடியாது. திறவு கோள் வசனமாவது:

**முதலாவது: "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்."**

அது ''எழுதியிருக்கிறபடி,'' கிறிஸ்து பாடுபடவும்.. அவர் பாவமான மனிதனை நீதியான தேவனிடத்தில் கொண்டுவருவதற்காக கண்டிப்பாக அவர் பாடுபட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். இதுவே முழுமையான வேதாகமத்தின் போதனைகளுக்கும் பின்நிற்கக்கூடிய உண்மையான திறவுகோளாகும்.

தேவன் பாவத்தின் சம்பளமானது பௌதீக, ஆவிக்குரிய, நித்திய மரணமாகும் என கூறியுள்ளார்:

> **ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:17)**
>
> **பாவத்தின் சம்பளம் மரணம்ஞ் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)**

இயேசு கிறிஸ்து பாவம் நிறைந்த மனுக்குலத்திற்காக, மாம்சமாக உலகிற்கு வந்து மரித்தார்.

> **அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே (ஆதாம்) அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய (இயேசு) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 5:19)**

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)**

தேவன் உலகை பார்த்தபோது, பாவம் நிறைந்த மனுக்குலத்திற்கு இரட்சகர் தேவை என்பதை கண்டார்.

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...... (ரோமர் 3:23)**

பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்கின்றபோது மனிதனால் தேவனுடன் ஒப்புரவாகவும், நித்திய ஜீவனை தேவனுடைய கொடையாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

**இரண்டாவது: "மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் குறித்து பிரசங்கிக்கப்படல் வேண்டும்."**

சகல ஜாதிகளுக்கும் அவருடைய நாமத்தினால் பாவமன்னிப்பிற்கென்று மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கிக்க வேண்டும் என்பதே வேதவசனத்தின் இரண்டாவது பிரதான திறவுகோளாக உள்ளது. இதற்குகாக விசுவாசிகளுக்கு முக்கியமான பொறுப்பு இருக்கின்றது..

**சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்ஒ அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.**

**நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்ஒ நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். (எசேக்கியேல் 3:18-19)**

இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்காக மரித்தபோதும், ஒருவரும் தானாகவே பாவத்திலிருந்து மீட்படைவதில்லை. ஒவ்வொருவருக்கும் சுயசித்தம் இருக்கின்றபடியால் அவனே தீர்மானித்து, பாவத்தில் இருந்து மனந்திரும்பி இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பை பெறு முன்னர் அவர்கள் அவரைப்பற்றி அறிய வேண்டும்

**ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்? (ரோமர் 10:13-14)**

பாவ மன்னிப்பு பெற மனந்திரும்புதலைக்குறித்து பிரசங்கிப்பதை நாம் நற்செய்தியை அறிவித்தல் அல்லது சுவிசேஷத்தை பரப்புதல் என்கின்றோம். இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்னர், அவரை பின்பற்றினவர்களிடம்ட உலகிற்கு நற்செய்தியை அறிவித்தலைக் குறித்தே உரையாடினார். (யோவான் 20:21, 21:15-17; மத்தேயு 28:18-20; மாற்கு 16:15; லூக்கா 24:44-48 ஆகியவற்றை பார்க்கவும்) நீங்கள் ஒருவருடன் கடைசி நேரத்தில் பேசுவீர்களாயின், நீங்கள் அவரை காப்பாற்றும் படி முக்கியமான காரியத்தை குறித்தே சம்பாஷிப்பீர்கள். இயேசு பரலோகத்திற்கு செல்லும் முன் சொன்ன கடைசி வசனமாவது சுவிஷேசத்தை அறிவிக்கும் படியானதாகும்:

சர்வதேச அறுவடை நிறுவனத்தின் பாடமாகிய "விசுவாசத்தின் அடிப்படை" மனந்திரும்புதலை குறித்தும், பாவ மன்னிப்பை குறித்தும் மேலதிக விபரங்களை தருகின்றது.

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

## உலகை குறித்த தேவனின் கண்ணோட்டம்

வேதாகமத்தின் பிரதான திறவுகோள் வசனத்தில், உலகைக்குறித்த தேவனின் கண்ணோட்டத்தை நாம் கற்கின்றோம். அவர் அரசியல் எல்லைகள், அரசுகள், கலாச்சாரங்கள் என்ற சொற்களின் அடிப்படையில் உலகை பார்க்கமாட்டார். அவர் பாவம் நிறைந்த மனுக்குலம், இயேசுகிறிஸ்துவுக்கூடாக தன்னுடன் ஒப்புரவாகுவதைக் குறித்தே காண்கின்றார். முழு உலகமும் சுவிசேஷசமயமாக்கப்படுதலின் அவசியத்தை காண்கின்றார்.

தேவன் உலகத்தை தெய்வீக நோக்கத்தை மனதில் கொண்டே பார்க்கின்றார். உலகத்தை குறித்த அவரது திட்டமும் நோக்கமும், சிருஷ்டித்தபோது எப்படியிருந்ததோ அப்படியே இருக்கிறது.

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு.. (எபேசியர் 3:11)**

தேவனுடைய நித்திய திட்டம் இயேசுகிறிஸ்துவுக்கூடாக பாவம் நிறைந்த ஜனங்களை கூட்டிச் சேர்ப்பதேயாகும். அநேக வருடங்களுக்கான எழுதப்பட்ட அவரது வார்த்தைக்கூடாக, இந்த நோக்கத்தை பரம இரகசியத்தை எமக்கு வெளிப்படுத்திவிட்டார்.

## உலகை குறித்த தேவனின் பார்வையில் இயற்கையான உதாரணங்கள்

தேவன், வேதாகமத்தில் ஆவிக்குரிய சத்தியத்தை கற்பிக்க இயற்கையான உதாரணங்களை பாவித்துள்ளார். அவற்றில் சில இயற்கையான காரியங்களை எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது. அவைகளை எம்மால் பார்க்கவும், கேட்கவும், ருசிக்கவும், முகர்ந்து பார்க்கவும், தொடவும் முடியும். ஆவிக்குரியவற்றை ஆவிக்குரிய விதத்திலேயே அவதானிக்க முடியும். ஆகவே ஆவிக்குரிய உண்மைகளை கற்றுக் கொடுப்பதற்கு அதில் நெருக்கம் இல்லாவிட்டாலும், தேவன் எமக்கு நெருக்கமான இயற்கையான உண்மைகளை பாவிக்கின்றார்.

தேவன் இவ்வுலகத்தை எவ்விதமாக பார்க்கின்றார் என வேதாகமத்தில் இயற்கையான உதாரணம் ஒன்று விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு தம் சீஷர்களைப் பார்த்து சொன்னார்:

**அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 4:35)**

இயேசுவானவர் இந்த வசனத்தை குறித்து பேசுகையில் அந்த நேரத்தில் அவர்களுக்கு முன்பாக வயலிலே ஓர் இயற்கையான அறுவடையை குறித்து பேசவில்லை. அவர் ஆவிக்குரிய அறுவடையை குறித்தே பேசுகின்றார். இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்கு இவ்வுலகத்தில் ஆவிக்குரிய குறிக்கோளை காட்டுவதற்காக இயற்கையான ஓர் அறுவடையை உதாரணமாக உபயோகித்தார்.

இன்னுமொரு சமயத்தில், இயேசுவானவர் தெளிவாக குறிப்பிட்டார் என்னவென்றால்:

**நிலம் உலகம்...... (மத்தேயு 13:38)**

ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, சமுத்திரத்திலுள்ள தீவுகள் அனைத்தும்...... இவைகள் தான் தேவனால் மாபெரும் அறுவடைக்கான இடமாக பார்க்கப்பட்டது. தேவனானவர் உலகத்திலே அறுவடைக்கான இடங்களை பார்க்கும் அதே வேளை, அவருக்கு இன்னொரு பெரிய தேவையும் காணப்பட்டது.

**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்..... (மத்தேயு 9:37)**

தேவனானவர் மாபெரும் ஆவிக்குரிய அறுவடையானது தயாராக உள்ளது என பார்த்தார். ஆனால் கொஞ்சமாக வேலையாட்களோ வேலைசெய்ய காணப்படுகின்றனர். நீங்கள் இப்பாடத்தின் கடைசியிலே வேலையாட்களின் மாபெரும் தேவையை குறித்து அதிகம் படிப்பீர்கள்.



## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. வேதாகமத்தில் பிரதான திறவுகோள் வசனத்தின் பகுதி என்ன?

--------------------------------------------------------------------------------

3. வேதாகமத்தின் பிரதான திறவுகோள் வசனத்தில் காணப்படும் இரண்டு அடிப்படை காரணிகளை விபரிக்கவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. உலகத்தின் தேவனுடைய நோக்கத்தினை விபரிக்கும் வேதாகமத்தினுடைய பகுதியை தருக.

--------------------------------------------------------------------------------

5. இவ்வசனத்தில் விபரிக்கப்பட்டுள்ளப்படி உலகத்தின் தேவனுடைய நோக்கம் என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. தேவன் உலகத்தை எவ்வாறு பார்க்கின்றார் என்பது குறித்ததான என்ன இயற்கையான உதாரணம் வேதாகமத்தில் தரப்பட்டுள்ளது?

--------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

மாபெரும் ஆவிக்குரிய உண்மையான அறுவடையை அறிவதற்காக இயேசுவானவர் எவ்வாறு இயற்கையான உதாரணத்தை உபயோகித்தார் என இப்பாடத்தில் நீங்கள் கற்றீர்கள். இப்பாடத்தின் படிப்பை தொடருவதற்காக கீழ்கண்ட பகுதிகளை உபயோகப்படுத்துங்கள். அறுவடையைக்குறித்து ஒவ்வொன்றும் போதிப்பது என்ன என்று சுருக்கமாக தருக:

மத்தேயு 9:37-38

--------------------------------------------------------------------------------

மத்தேயு 13:3-39

--------------------------------------------------------------------------------

மாற்கு 4:3-32

--------------------------------------------------------------------------------

லூக்கா 8:5-15

--------------------------------------------------------------------------------

லூக்கா 10:2

--------------------------------------------------------------------------------

யோவான் 4:35

--------------------------------------------------------------------------------

யோவான் 12:24

--------------------------------------------------------------------------------

1கொரிந்தியர் 3:6-8

--------------------------------------------------------------------------------

2கொரிந்தியர் 9:6

--------------------------------------------------------------------------------

கலாத்தியர் 6:7-8

--------------------------------------------------------------------------------

அதிகாரம் நான்கு

# உலகமானது வார்த்தையிலுள்ளது: பழைய ஏற்பாடு

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ தேவனுடைய வசனத்தின் மைய செய்தியை அடையாளம் காணவும்.
- ☐ பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணம் பிரதிபலிக்கும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தினை சுருக்கமாக தரவும்.
- ☐ பழைய ஏற்பாட்டு சரித்திர புத்தகங்கள் பிரதிபலிக்கும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தினை சுருக்கமாக தரவும்.
- ☐ பழைய ஏற்பாட்டு கவிதை புத்தகங்கள் பிரதிபலிக்கும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தினை சுருக்கமாக தரவும்.
- ☐ பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தங்கள் பிரதிபலிக்கும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தினை சுருக்கமாக தரவும் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

> **சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும். எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும். என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 1:11)**

## அறிமுகம்

இவ்வதிகாரத்திலும் ஐந்தாம் அதிகாரத்திலும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை பற்றிய படிப்பை தேவனுடைய வசனத்திலிருந்து குறிப்பிட்ட பகுதிகளுக்கூடாக தொடருவோம். நீங்கள் ஏற்கனவே தேவன் எவ்வாறு உலகத்தை சிருஷ்டித்தார் என்றும், மனுக்குலம் பாவத்தில் விழுந்துபோனதைக் குறித்தும், உலகத்தில் பல்வேறுப்பட்ட ஜாதிகளும் பாஷைகளும் எவ்வாறு உருவானது என்பதை பற்றியும் கற்றுக்கொண்டீர்கள். இந்த அதிகாரத்திலே பழைய ஏற்பாடு உலகத்தை குறித்து வெளிப்படுத்துவதை அதிகமாய் கற்கப்போகின்றீர்கள். அடுத்த அதிகாரம் புதிய ஏற்பாட்டை மையப்படுத்திய பாடத்தை கொண்டதாக அமையும்.

உலகத்தை குறித்த தேவனுடைய திட்டத்தை அநேக விசுவாசிகள் அறியாதிருக்கிறார்கள். தேவன் ‘‘என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.....’’ (ஓசியா 4:6) என்று சொன்னார். தேவனானவர் பாடசாலைக்கு சென்று பெற்றுக்கொள்ளும் அறிவைக் குறித்து இங்கே பேசவில்லை. அவர் ஆவிக்குரிய அறிவைக் குறித்து பேசி உலகை குறித்தான தேவனுடைய திட்டத்தை விளங்கிக் கொள்ளவும், பங்கு கொள்ளவும் எமக்கு உதவி செய்கின்றார்.

### ஓர் செய்தியை கொண்ட ஒரு புத்தகம்

வேதாகமானது தேவனை குறித்தான மனிதனுடைய அபிப்பிராயத்தைக் கொண்ட புத்தகமல்ல. அது மனுக்குலத்தை குறித்த அவரது நோக்கங்களையும் திட்டங்களையும் கொண்டு தேவனிடத்திலிருந்து வந்த செய்தியாகும். தேவனுடைய மக்களைக் குறித்ததான கதைகளையும் வேதாகமம் கொண்டுள்ளது. இம்மக்கள் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டு, உலகை குறித்த அவரது வெளிப்பாட்டை

பெற்றார்கள்.

அநேக வாக்குத்தத்தங்களையும், தீர்க்கதரிசனங்களையும், ஆறுதலின் வசனங்களையும், உணர்வூட்டும் வசனங்களையும், வேதாகமம் கொண்டுள்ளது. ஆனாலும் முழு வேதாகமும் ஆரம்பம் முதல் கடைசிவரையிலும் ஒரு மைய செய்தியையே கொண்டுள்ளது. அந்த மைய செய்தி பாவம் நிறைந்த மனுக்குலத்தைப்பற்றிய தேவனுடைய நோக்கத்தையும் அவர்களது பெறப்போகும் இரட்சிப்பின் செய்தியையும் கொண்டுள்ளது.

ஆரம்பம் முதலே தேவனுடைய திட்டமானது.......

> **காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:10)**

ஆரம்பமுதலே உலக ஜாதிகளைக் குறித்த தேவனுடைய திட்டம், அதாவது பாவம் நிறைந்த மனிதனின் இரட்சிப்பை குறித்த இத்திட்டம், இயேசு கிறிஸ்துவிற்கூடாக காலம் கனிந்தபோது நிறைவேறியது.

### பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடனது 39 புத்தகங்களை கொண்டதாகவும், நான்கு பிரதான பிரிவுகளை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| நியாயப்பிரமாணம் | ஆதியாகமம் முதல் உபாகமம் வரை |
| வரலாறு | யோசுவா முதல் எஸ்தர் வரை |
| கவிதை | யோபு முதல் உன்னதபாட்டு வரை |
| தீர்க்கதரிசனம் | ஏசாயா முதல் மல்கியா வரை |

பழைய ஏற்பாட்டில் உள்ள இந்நான்கு பிரிவுகளிலும், உலகைக்குறித்த தேவனுடைய திட்டத்தை பற்றிய சுருக்கத்தை பின்வரும் பகுதிகளில் காணலாம்.

## நியாயப்பிரமாணப் புத்தகங்கள்

### ஆதியாகமம் முதல் உபாகமம் வரை

ஆதியாகமம் முதல் உபாகமம் வரையான புத்தகங்கள் நியாயப்பிரமாணத்தின் புத்தகங்கள் என்று அழைக்கப்படுகின்றது காரணம் மனிதனுக்காக தேவனுடைய முதல் கட்டளையையும், அக்கட்டளைகளுக்கு மனிதன் காண்பித்த பிரதிபலிப்பும் இவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதியிலே:**
ஆதியாகமம் என்றால் "ஆரம்பங்கள்" என்று அர்த்தம். வேதாமத்தின் முதல் புத்தகத்தில் உலகத்தின், மனிதனின், ஜாதிகளின், பாவத்தின், தேவனின் இரட்சிப்பின் திட்டத்தின் ஆரம்பங்களைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவிக்குரிய ஒழுக்க நெறிகளுடன் மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான் என்பதை நீங்கள் கற்றீர்கள். தேவனுடைய திட்டத்தின்படியே அவனால் புதிய மனிதவர்க்கத்தை பிறப்பிக்க முடியும். ஆனால் அவன் பாவம் செய்த போது ஆவிக்குரிய ஒழுக்க நெறியிலிருந்தும் விழுந்து போனான். உலகிற்கான தேவனுடைய திட்டத்தின் முதல் வெளிப்பாடு ஆதியாகமம் 3:15ல் தரப்பட்டுள்ளது.

**உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதியாகமம் 3:15)**

இவ்வாக்குத்தத்தமானது அடையாள மொழியில் கொடுக்கப்பட்டுள்ளது. “ஸ்திரியின் வித்து” இயேசுவாக இருக்கின்றது. அவர் மனுக்குலத்திற்கு பாவத்தை ஏற்படுத்திய சர்ப்பத்தின் (சாத்தானின்) தலையை நசுக்குவார். இயேசு மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்து தேவனுடன் மனிதனை ஒப்புரவாக்கினார்.

இவ்வசனத்திலிருந்து ஆறு காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

1. தேவனே இரட்சிப்பின் காரணர் (நான்)
2. சாத்தானே சத்துருவாகும் (மனிதனின் “வித்து”க்கும் சாத்தானுக்குமிடையே “பகை”)
3. இரட்சகர் மனித உறவில் இருந்தே வருவார். அவர் மனிதனின் ரூபத்தில், தேவ குமாரன் (“அவள் வித்து”).
4. இரட்சகர் பாடுபடுவார். (“அவர் குதிங்காலை நசுக்குவார்”)
5. சத்துருவை தேவன் சபித்தார். (“அவர் உன் தலையை நசுக்குவார்”)
6. இரட்சிப்பு சகலருக்குமானது (“எல்லா வித்து”) தொடரும் அனைத்து பரம்பரையினருக்கும் உரித்தானது.

முன் உள்ள அத்தியாயத்திலே மனிதனுடைய வீழ்ச்சியையும் அதனால் ஏற்பட்ட பாவத்தின் பெருக்கத்தையும் (ஆதியாகமம் 6) குறித்து பார்த்தோம். தேவன் உலகளாவிய வெள்ளப்பெருக்கை மனிதரின் துன்மார்க்கத்தினிமித்தம் பூமிக்கு அனுப்பியபோதும், இரட்சிப்பிற்கான விஷேச திட்டத்தையும் தேவன் ஏற்படுத்தி கொடுத்தார். (ஆதியாகமம் 8-9)

பேழையால் நோவாவும் அவனது குடும்பத்தாரும் காப்பாற்றப்பட்டது இயேசு கிறிஸ்துவிற்கூடாக வருகின்ற இரட்சிப்பிற்கு அடையாளமாக இருக்கின்றது. பாவத்திற்கான நியாயத்தீர்ப்பிலிருந்து மனிதனானவன் பாதுகாப்பை பெறுவதற்கு, இயேசுவானவரே ஆவிக்குரிய “பேழை”யாக இருக்கின்றார். நோவாவினதும் வெள்ளப்பெருக்கினதும் கதை மூலமாக (ஆதியாகமம் 6-9) தேவன் உலகை பார்க்கின்ற போது, பாவம் நிறைந்த, நியாயத்தீர்ப்புக்கு பாத்திரமான உலகையே கண்டார், எனினும் உலகிற்கு இரக்கம் பாராட்டினார். மனிதன் பாவத்தின் தண்டனைகளிலிருந்து தப்புவதற்காக, அவர் பாதுகாப்பின் வழியையும் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டில் இதே மாதிரிதான் திரும்பவும் திரும்பவும் கொடுக்கப்படுகின்றது. மனிதன் பாவம் செய்கின்றான், தேவன் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பை அனுப்புகின்றார். ஆனாலும் இரக்கத்துடன் தேவன் இரட்சிப்பின் வழியையும் கொடுக்கின்றார்.

## விசேஷித்த ஜாதி:

பாபேலில் தேவனுக்கு எதிரான கலகத்தினால் எவ்வாறு பல பாஷைகள் பிரிந்தது என்பதையும், கடைசியாக ஜாதிகளின் உருவாக்கத்தைப் பற்றியும் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். இவ்வாறு ஜாதிகளால், பிரிக்கப்பட்ட உலகத்திலிருந்து தேவன் “இஸ்ரவேல்” என்ற ஒரு ஜாதியை விசேஷித்த நோக்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்.

ஆபிரகாம் என்னும் பெயருள்ள மனிதனை மேற்சொன்ன ஜாதியிலிருந்து தெர்ந்தெடுத்தார். நீங்கள் ஆபிரகாமைப்பற்றியும், அவனுக்கு தேவன் வாக்குத்தத்தம் கொடுத்ததுப்பற்றியும், அது

நிறைவேறினதுபற்றியும் ஆதியாகமம் 11:27-25:34ல் வாசிக்கலாம். ஆபிரகாம் இஸ்ரவேல் ஜாதியின் "தகப்பனாக" (தலைவனாக) தேர்ந்தெடுக்கப்பட்டான். தேவன் அவனை விசேஷித்த நோக்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்:

**நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.**

**உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். (ஆதியாகமம் 12:2-3)**

**நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (ஆதியாகமம் 22:18) (ஆதியாகமம் 26:4, 28:14 ஆகியவற்றையும் பார்க்கவும்)**

ஆபிரகாமிலிருந்தே இஸ்ரவேல் என்னும் ஜாதி உருவானது. மெய் தேவனை இஸ்ரவேலுக்கூடாக அறிவதன் மூலமாகவே உலகின் மற்ற ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படும். உலகிலுள்ள சகல "குடும்பங்களும்" ஆசிர்வதிக்கப்படும். குடும்பம் என்னும் போது பல வித்தியாசமான ஆதிவாசி குழுக்களையும், பல மக்கள் குழுக்களை குறிக்கும்.

இஸ்ரவேலர் விஷேசித்தவர் என்றோ அல்லது மற்ற ஜாதியாரைப்பார்க்கிலும் நல்லவர்கள் என்பதற்காகவோ தெரிந்தெடுக்கப்படவில்லை. விஷேசித்த நோக்கத்திற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெரும்பான்மையினர் பணிந்துகொள்ளும்படியாக சிறுபான்மையினர் அழைக்கப்பட்டனர். தேவன் தன்னை வெளிப்படுத்தும் படியாகவே இஸ்ரவேலரை தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்துவாகிய இரட்சகர் இஸ்ரவேலரிடமிருந்தே வந்தார். (மத்தேயு 2:2, யோவான் 4:22). உலகிற்காக தேவன் பேசி, எழுதப்பட்ட வார்த்தைகள் இந்த ஜாதியினருக்கூடாக வருகின்றது. (சங்கீதம் 147:19, ரோமர் 3:1,2; 9:4).

ஜாதிகளுக்கு, தேவனுடைய சாட்சிகளாக இஸ்ரவேலர் இருக்கின்றனர்:

**சகல ஜாதிகளும் ஏகமாய்ச்சேர்ந்துகொண்டு, சகல ஜனங்களும் கூடிவரட்டும்ஞூ இதை அறிவித்து, முந்தி சம்பவிப்பவைகளை நமக்குத் தெரிவிக்கிறவன் யார்? கேட்டு மெய்யென்று சொல்லக்கூடும்படிக்கு, அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டுவந்து யதார்த்தவான்களாய் விளங்கட்டும்.**

**நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை. எனக்குப்பின் இருப்பதும் இல்லை.**

**நான், நானே கர்த்தர். என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.**

**நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன். உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன்இல்லைஞூ நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 43:9-12)**

தேவன் இஸ்ரவேலருடன் ஜீவனுள்ள உறவை, உடன்படிக்கை மூலம் ஏற்படுத்தினார். அவர் இவர்களுடைய தேவன் எனவும், இவர்கள் அவருடைய ஜனம் என்பதே இவ்வுடன்படிக்கையின் ஒப்பந்தமாகும். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய உடன்படிக்கையானது இஸ்ரவேலுடன் செய்யப்பட்டது.

**உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்.**

**உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்... (யாத்திராகமம் 6:7)**

புதிய ஏற்பாட்டில், தேவனானவர் அனைத்து உண்மையான விசுவாசிகளுக்கும் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

**போஜனம்பண்ணினபின்பு, அவர் (இயேசு) அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (1 கொரிந்தியர் 11:25)**

## ஆபிரகாமின் சந்ததி:

புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் எவ்வாறு ஆபிரகாமின் சந்ததி என அழைக்கப்படுகின்றனர் என பின்னர் படிப்பீர்கள். ஒரு சந்ததிக்குரியவைகள் மற்ற சந்ததிகளுக்கும் உரிமையாகின்றது. ஆபிரகாமைப்போல் நாமும் உலகத்தை ஆசீர்வதிக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் உலகிலுள்ள ஜாதிகளும், குடும்பங்களும் நாம் சுவிசேஷத்தை கொண்டு சென்றாலே ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

தேவன் ஆபிரகாமை அழைத்த போது, ஊர் என்னும் நகரத்தை விட்டு “நான் உனக்குக் காண்பிக்கும்” (அப்போஸ்தலர் 7:2-3) தேசத்திற்கு போ என்று அவனிடம் கூறினார். ஆபிரகாம் தனது குடும்பத்தாரை அழைத்துக்கொண்டு, ஊர் என்ற நகரை விட்டுவிட்டு ஆரானுக்கு வந்து குடியேறினான். (ஆதியாகமம் 11:31)

சகல விசுவாசிகளும் தேவனுடைய நோக்கத்தை தடைசெய்யும் சகல ஆவிக்குரிய நிலத்தையும் இடத்தையும் விட்டுவிட்டு வரும்படி அழைக்கப்படுகின்றார்கள். சில விசுவாசிகள் மற்ற ஜாதிகளை ஆதாயப்படுத்தும்படி தங்களுடைய நிலத்தையும், பிறப்பிடத்தையும் விட்டுவிட்டு வரும்படி அழைக்கப்படுகின்றார்கள். சகல விசுவாசிகளும் சில வேளை “ஆரானுக்கு” முகம்கொடுத்தே ஆக வேண்டும். தேவனுடைய திட்டத்தில் பங்கு கொள்ள அவருக்கு கீழ்படிந்து நிதானமாய் முன்னேற வேண்டும், அல்லது வசதியான இடத்திலிருப்பேன் எனக்கூறுவதும் உங்கள் தேர்ந்தெடுப்பாகும். ஆபிரகாம் ஆரானுக்கு கடந்து சென்றான். கடந்து வந்த பின்னர் திரும்பி பார்க்கவில்லை.

## ஜாதி அபிவிருத்தியடைதல்:

பின்வரும் ஆபிரகாமின் கதை ஆதியாகமத்திலுள்ளது, இஸ்ரவேல் தேசத்தின் வளர்ச்சியின் சரித்திரமும் அபிவிருத்தியும் நியாயப்பிரமாணப் புத்தகங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவன் உலகிற்கு தனது திட்டத்தை வெளிப்படுத்த இஸ்ரவேலை உபயோகித்தார்.

ஆதியாகமம் 50:20: எகிப்திலே ஜாதிகளை பாதுகாக்கும்படியாக தேவன் யோசேப்பை எழுப்பினார்.

யாத்திராகமம் 8:22: உலகத்தை ஆளுகிற தேவன் என்பதை காண்பிக்க இஸ்ரவேலை எகிப்திலிருந்து கொணர்ந்தார்.

யாத்திராகமம் 9:29: தேவனுடைய வல்லமைகளை வெளிப்படுத்த எகிப்திற்கு வாதைகளை அனுப்பினார்.

யாத்திராகமம் 33:16: ஜாதிகளை ஆளுகின்றவர் என்பதை காண்பிக்க இஸ்ரவேலோடு தேவனுடைய

பிரசன்னம் இருந்தது.

யாத்திராகமம் 34:10: சகல ஜனங்களும் கர்த்தருடைய கிரியையை காணும்படியாக தேவன் இஸ்ரவேலிலே தொடர்ந்து கிரியை செய்தார்.

லேவியராகமம் 20:23: ஜாதிகள் தங்களுடைய பொல்லாத வழிகளை பின்பற்றாமல் இருக்க இஸ்ரவேல் முன்மாதிரிகளாக வைக்கப்பட்டார்கள்.

லேவியராகமம் 19:24: இஸ்ரவேல் ஜாதியானது தேவனுடைய அன்பை மற்ற ஜாதிகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

எண்ணாகமம் 14:21: பூமியானது அவருடைய மகிமையால் நிறைய வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாகும்.

உபாகமம் 4:27; 7:6; 14:2; 26:19: தனக்கு சாட்சியாக இருக்கும்படி தேவன் இஸ்ரவேலை தெரிந்தெடுத்தார், ஆனால் அவர்களுடைய பாவத்தினிமித்தம் அவர்கள் சிதறடிக்கப்பட்டு அவர்களுடைய எதிரிகளால் துன்பப்பட்டனர்.

உபாகமம் 18:9; 30:19: தேவன் இஸ்ரவேல் ஜாதிகள் மற்ற ஜாதிகளின் வழிகளை பின்பற்றாமல், ஜீவவழியை தேர்ந்தெடுக்க வேண்டும் என அவர் விரும்பினார்.

உபாகமம் 28:9-10: இஸ்ரவேலருக்கூடாக உலகிலுள்ள சகல ஜனத்தாரும் தேவனுடைய வல்லமையை கண்டு கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாக இருந்தது.

## சரித்திர புஸ்தகங்கள்

### யோசுவா முதல் எஸ்தர் வரை

உலகத்திற்கு இஸ்ரவேலர் முக்கியமில்லாத மக்கள். ஆனால் வேதாகமத்தின் பார்வையில் இஸ்ரவேலர் வித்தியாசமானவர்கள். இந்த உலகத்திற்கு தேவன், அந்த ஜனத்தாருக்கூடாகவே தனது கிரியைகளை செய்து தனது திட்டத்தை வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் இஸ்ரவேலரின் ஆற்றல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரவேல் தேவனுக்கு கீழ்ப்படிகின்ற போதெல்லாம், அவள் சத்துருக்களின் கைகளினின்று விடுவிக்கப்பட்டாள். தேவனுடைய விடுவிக்கும் வல்லமைக்கு இது சாட்சியாக இருந்தது. (சங்கீதம் 66:1-7; ஏசாயா 52:10 ஆகியவற்றை பார்க்கவும்). எப்பொழுதெல்லாம் இஸ்ரவேலர் தேவனுக்கு கீழ்ப்படியவில்லையோ, அவர் நியாயத்தீர்ப்புக்களை அனுப்பி தனது வழிகளில் நீதியுள்ளவர் என்பதை காண்பித்தார். (சங்கீதம் 145:17). நியாயத்தீர்ப்புடன் கிரியை செய்தாலும், தன்னை அவர்களுக்கூடாகவே உலகின் ஜாதிகளுக்கு வெளிப்படுத்தினார்.

சரித்திர புஸ்தகங்களிலிருந்து சில வசனங்கள் உலகத்தை குறித்த தேவனுடைய சித்தத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள கொடுக்கப்படுகிறது.

யோசுவா 2:11; 3:11: தேவனாகிய கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர்.

யோசுவா 4:23-24: தேவன் யோர்தான் நதியை வற்றிப்போகப்பண்ணி பூமியின் சகல ஜனங்களுக்கும்

கர்த்தருடைய கரம் பலித்தது என காண்பித்தார்.

யோசுவா 23:3,9,12,13: இஸ்ரவேல் ழககள் மற்ற உலகங்களிடமிருந்து பிரிந்து அவருக்கு சாட்சியாக அவர்களுக்குள்ளே வாழ வேண்டுமென தேவன் விரும்பினார்.

நியாயாதிபதிகள் 2:21-22: அவரது கட்டளைகளின் படி இஸ்ரவேலர் செய்கின்றார்களா என்பதை சோதித்தார். நியாயாதிபதிகளின் புத்தகம் அவர்களுடைய தோல்விகளை பதிவு செய்துள்ளது.

ரூத் 1:16: யூதர்களின் தேவன் புறஜாதிகளின் தேவனாகவும் இருக்கின்றார்.

1 சாமுவேல் 17:46: தாவீது கோலியாத்தை சந்தித்து வெற்றி பெற்றபோது இஸ்ரவேலில் தேவன் இருக்கின்றார் என்பதை உலகம் அறியக் கூடியதாக இருந்தது.

2 சாமுவேல்22:50-51: தாவீது தேவனை துதித்தபோது சகல ஜனங்களும் அவரை மகிமைப்படுத்தினார்கள்.

1 ராஜாக்கள் 8:23,43: இஸ்ரவேல் என்னும் ஓர் ராஜ்யம் உருவான பின், சாலமோன் ராஜா “பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும” என்று கேட்டுக்கொண்டான்.

1 ராஜாக்கள் 8:43,53,60: இந்த வசனங்களானது உலகமானது தொடர்ந்து தேவனின் சித்தத்தை அறிகிற அறிவினால் வளரவேண்டும் என்னும் அவரது வாஞ்சையை பிரதிபலிப்பனவையாகும்.

2 ராஜாக்கள் 19:15-19: உலகம் மெய்யான தேவனை அறிந்து அவரது மீட்பை பிரசித்தம் செய்ய வேண்டும்.

1 நாளாகமம் 16:23-24,31: ஜாதிகளிடையே தேவனுடைய மகிமை பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

1 நாளாகமம் 16:35: ஜாதிகளுக்குள்ளிருந்து மீட்பை பெறும்போது தேவன் மகிமைப்படுத்தப்படுவார்.

2 நாளாகமம் 6:32-33: உலகிலுள்ள சகல மக்களுக்கும் தேவனை அறிகிற சந்தர்ப்பம் உண்டு.

2 நாளாகமம் 6:14; 20:6; 32:13: தேவன் ஒருவரே உலகத்தில் உன்னத, மெய்யான தேவன்.

2 நாளாகமம் 16:9: தேவனுடைய கண்ணோட்டத்தில் உலகத்தை குறித்து அவரது இருதயத்தில் விஷேட வாஞ்சையுண்டு.

எஸ்றா 1:2; 5:11: தீரு ராஜா எருசலேமில் ஆலயத்தை கட்டி, உலகத்தாருக்கு முன்பாக தேவனை கௌரவப்படுத்தினான்.

நெகேமியா 6:16: மதிலை கட்டுவதைப்பார்க்கிலும் நெகேமியாவின் திட்டத்தின் நோக்கம் பெரியதாயிருந்தது. மெய்யான தேவனுடைய ஆளுகையின் வல்லமையை காண்பிப்பதே அவனது நோக்கம்.

நெகேமியா 9:6-7: தேவனே கர்த்தர் என்று உலகத்தாருக்கு பிரகடனப்படுத்தப்படுகின்றார்.

எஸ்தர் 4:14: இஸ்ரவேலரை பாதுகாக்கும் விஷேச நோக்கத்திற்காக எஸ்தர் எழுப்பப்படுகின்றாள். அதை சாத்தான் அழிக்க திட்டமிடுகின்றான்.

## கவிதை நூல்கள்
### யோபு முதல் உன்னதப்பாட்டு வரை

யோபு, சங்கீதங்கள், நீதிமொழிகள், பிரசங்கி, சாலமோனின் உன்னதப்பாட்டு ஆகிய புத்தகங்கள் கவிதை நடையில் எழுதப்பட்டபடியால் அப்புத்தகங்கள் கவிதை நூல்கள் என அறியப்படுகின்றது. இந்த கவிதை நூல்களின் மிகமுக்கிய மையப்பொருளானது உலகம் என்பதாகும்.

சங்கீத புத்தகத்தில் ஜாதிகள், குடிகள் என 200 தடவைகளுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. "முழு உலகமும்", "சகல மக்கள்", "சகல குடிகளும்", "சகல மாம்சமும்", "சுவாசமுள்ள யாவும்", "பூமியின் எல்லா முடிவுபரியந்தமும்", "சகல பூமியின் குடிகளும", "சகல கண்களும்", "புறஜாதிகளும்" போன்ற சொற்கள் திரும்பவும் திரும்பவும் இப்புத்தகத்தில் கூறப்படுகின்றது.

சங்கீத புத்தகமானது பூமி கர்த்தருக்கு சொந்தமானது எனவும், சகலதும் அவரது கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது எனவும் கூறுகின்றது (சங்கீதம் 24:1). பூமியிலுள்ள சகலவற்றிலும் பார்க்க தேவனே உயர்ந்தவர் என தேவனை உயர்த்துகின்றது. (சங்கீதம் 38:10, 97:9). பூமியின் நியாயாதிபதி என அவரை முன்வைக்கின்றது. (சங்கீதம் 149:7), பூமி இரட்சிப்பின் கிருபையினால் நிறைந்துள்ளது என கூறுகின்றது. (சங்கீதம்119:64). பாவமுள்ள ஜாதிகளின் நிலையை சங்கீதம் 2 பறைசாற்றுகின்றது. 67ம் சங்கீதத்திலே இரட்சிப்பின் நம்பிக்கையானது சகல ஜாதிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது என கூறுகின்றது.

இந்த அதிகாரத்தின் "மேலதிக படிப்பினைக்கு" என்ற பகுதி, சங்கீதப் புத்தகத்தில் உள்ள இப்பாடத்தின் பட்டிலலை உங்களுக்கு தரும்.

கவிதை நூலிலுள்ள மற்ற பிரதான திறவுகோள் வசனங்கள்:

யோபு 1,2: மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கிடையேயுள்ள போராட்டத்தை வர்ணிக்கின்றது.

யோபு 9:24; 12:23; 38:1-41: தற்போது உலகத்தில் அசுத்த நிலைமை காணப்பட்டாலும், தேவன் சர்வலோகத்தையும் கட்டுப்படுத்துவதை இழந்து போகவில்லை என்பதையும் காட்டுகின்றது.

நீதிமொழிகள் 2:22; 10:30; 11:31: தற்போது பூமியிலுள்ள துன்மார்க்க நிலையை வர்ணிக்கிறது.

நீதிமொழிகள் 14:34: நீதியுள்ள ஜாதியும், பாவமுள்ள ஜாதியும் வித்தயாசமானவர்கள்.

நீதிமொழிகள் 3:19; 8:23-31: தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் என்று அவரை உயர்த்துகின்றது.

பிரசங்கி 1:4; 3:11: தற்போதும் கர்த்தரே சிருஷ்டிகராகவும், பூமிக்கு ஆண்டவராகவும் இருக்கின்றார்.

பிரசங்கி 7:20; 8:14; 10:7: மனிதனினதும், உலகத்தினதும் தற்போதைய நிலையை படம்பிடித்து காட்டுகின்றது.

பிரசங்கி 12:7: ஆவிக்குரிய மனிதனின் நித்திய தன்மையை வெளிப்படுத்துகிறது.

பிரசங்கி 3:14 தேவனுடைய திட்டத்தை அழுத்தமாக கூறுகின்றது.

இவ்வசனங்களானது இப்புத்தகத்தில் உலகை குறித்த தேவதிட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு சில உதாரணங்களாக உள்ளது. கவிதை நூல்களில் உலகைக் குறித்தான மேலதிக வசனங்களை “மேலதிக படிப்பிற்கு” என்று இவ்வதிகாரத்திலுள்ள பகுதியில் காண்க.

## தீர்க்கதரிசன புத்தகங்கள்
### ஏசாயா முதல் மல்கியா வரை

ஏசாயா முதல் மல்கியா வரையான புத்தகங்களை தீர்க்கதரிசன புத்தகங்கள் என்று அழைக்கப்படுகின்றது. தேவனால், இஸ்ரவேலில் அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ மனிதருக்கூடாக கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களே இவைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தீர்க்கதரிசனங்கள் எதிர்காலத்தில் நடைபெறப் போகின்றவைகளைக் குறித்தும் தேவனுடைய திட்டத்தையும் விளங்கப்படுத்துகிறது. இப்புத்தகங்களினூடாக உலகளாவிய இரட்சகரின் கிரியைகள் அழுத்திக் கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் மக்களுக்காக மாத்திரமல்ல, உலகின் முழு மனுக்குலத்திற்காகவும் வந்தார்.

**பல்லின கலாச்சார ஊழியங்கள்:**

தீர்க்கதரிசிகளான தானியேலும், யோனாவும் பல்லின கலாச்சார மக்களிடையே ஊழியம் செய்தார்கள்.

பாபிலோனிலுள்ள அரசவையில் ஆலோசகனாக இருந்த தானியேல் தேவனை சேவித்து அவருக்கு சாட்சியாகவும் ஜீவித்தான். தேவன் தானியேலை மரணத்திலிருந்தும் காப்பாற்றி, உலகமனைத்திற்கும் தானே தேவன் என்று அவனுக்கு வெளிப்படுத்தினார். (தானியேல் 6:27) தானியேலின் புத்தகம் கடைசிகாலத்தை குறித்த ஏராளமான வெளிப்பாடுகளை பதித்து வைத்துள்ளது. இப்புத்தகம் புதிய ஏற்பாட்டிலுள்ள வெளிப்படுத்தின விசேஷத்துடன் சம்பந்தமுள்ளதாக இருக்கின்றமு மாத்திரமல்ல, அப்புத்தகம் ஜாதிகளுக்கான தேவனுடைய திட்டத்தை, மேலதிகமாக எமக்கு தருகின்றது.

தானியேல் புத்தகத்திலுள்ள வசனங்களில் தேவனுடைய திட்டத்தின் நோக்கங்களை சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

> **சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டதுரூ அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். (தானியேல் 7:14)**

யோனா ஒரு யூத தூதுப்பணியாளனாக இருந்தபோதும், பொல்லாத புறஜாதியாரான நினிவே பட்டணத்தாருக்கு மீட்பை குறித்து பிரசங்கிக்க அழைக்கப்பட்டான். விருப்பமின்றியே அப்பணியை செய்து முடித்தான். இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல முழு உலகிற்கும் தேவனுடைய இரட்சிப்பை கொண்டு செல்லும், தேவ திட்டத்தை வெளிப்படுத்துவதில் யோனா புத்தகம் முக்கியமானது.

இஸ்ரவேலர் நினிவே மக்களை வெறுத்தனர். முதலாவதாவ அவர்களுக்கு பிரசங்கிப்பதை யோனாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் தேவனுடைய இடைபடுதலின் காரணமாக மனந்திரும்புதலைப்பற்றி பிரசங்கித்தான், எனினும் எவ்விதமாக மனந்திரும்ப வேண்டும் என்ற வழிநடத்துதலை அவன் கொடுக்கவில்லை. என்ன செய்ய வேண்டும் என்று அரசன் அறிவித்தப்படி செய்தார்கள். (யோனா 3:8-9).

கடைசியாக அவர்களின் மனந்திரும்புதலைக் குறித்து சந்தோஷப்படாமல் தேவனிடத்தில் கோபம் கொண்டு முறையிட்டான் (யோனா 4:2). வேதாகமத்தில் யோனாவின் புத்தகம் அவனது கடைசி

வசனத்தை “நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லது” (யோனா 4:9) என பதிவு செய்து வைத்துவிட்டார். யோனா புத்தகத்தில் முடிவுரையில்லை. கடைசிக் கேள்விக்கான (யோனா 4:9-11) பதிலும் இல்லை. நாம் யோனாவை விட்டு விடுவோம், தேவன் அவரைப்போன்று சிந்திக்கிற மனிதரை தேடிவருகிறார். தேவன் காத்திருக்கின்ற போதும் யோனாவை போன்ற மனிதரே அநேகமாயிருக்கின்றார்கள். அவர்கள் தமக்கு வசதியான வீடுகளில், யோனா துக்கத்தோடு அமர்ந்திருந்து ஆசனத்தில் இருந்ததைப் போன்று இருக்கிறார்கள். அவர்கள் உலகத்தைக் குறித்தான தேவதிட்டத்தில் பங்குதாரராய் இருப்பதை விளங்கிக் கொள்ளவில்லை.

## ஏசாயாவின் புத்தகம்:

தீர்க்கதரிசிகளின் புத்தகங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய திட்டத்திற்கு மிகச்சிறந்த உதாரணமாக ஏசாயா இருக்கின்றார்.

ஏசாயா 17:12-13; 24:5-6: தேவனுக்கு முன்பதாக உள்ள உலகத்தின் நிலையை விளக்குகின்றது.

ஏசாயா 40:12; 42:5; 44:24; 45:8,12,18; 48:13: வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனை உயர்த்துகின்றார்.

ஏசாயா 14:12 ஜாதிகளின் சத்துரு சாத்தானே என்பதை வெளிப்படுத்துகின்றார்.

ஏசாயா 37:20, 64:4: உலகைக்குறித்த தேவனின் மாபெரும் திட்டத்தைற்கும் நோக்கத்திற்கும முக்கியத்துவம் அளிக்கின்றார்.

ஏசாயா 65:17; 66:22: உலகைக்குறித்த தேவனின் எதிர்காலத்திட்டத்தை வெளிப்படுத்துகின்றார்.

ஏசாயா 40:15: ஜாதிகளை குறித்த தேவனுடைய கண்ணோட்டம்.

ஏசாயா 45:22; 51:6: தேவனே இரட்சகர் என்று பார்க்கும் படியாக ஜாதிகளுக்கு தீர்ப்பு செல்கின்றது.

ஏசாயா 43:8-12: ஜாதிகளுக்கு மத்தியில் இஸ்ரவேலே தேவனுடைய சாட்சி.

ஏசாயா 52:13-15: இப்பகுதியில் ஊழியக்காரர் இயேசுவைப்பற்றியே குறிப்பிடுகின்றார். அவர் உலகின் மீட்பிற்காக பாடுபடுவார். புறஜாதிகளின் அரசர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் சுவிஷேசத்தை கேள்விப்படுவார்கள். கிறிஸ்துவின் மரணம் உலகிலுள்ள சகல மக்களுக்குமானது. அவருடைய சுவிசேஷம் உலகிலுள்ள சகல தேசங்களிலும் பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

ஏசாயா 54:1-5: “வித்து” என்பதின் அர்த்தம், இஸ்ரவேலின் ஆவிக்குரிய வித்தாகும், அந்நிய ஜாதி விசுவாசிகளும் இயேசுவைப்பற்றி அறிந்து ஆராதிப்பார்கள். “உன்னுடைய இடத்தை விசாலமாக்கு” என்பது, புறஜாதிகலிலிருந்தும் தேவனுடைய பிள்ளை பெற்றுக்கொள் என்ற அர்த்தத்தின் முக்கியத்துவத்தை கொடுக்கின்றது.

ஏசாயா 42:1-10: தேவன் ஜாதிகளிடையே இரக்கமுள்ளவராக இடைப்படுகின்றார். அவர்கள் பதிலளிப்பதற்கு எவ்வளவு காலம் எடுத்தாலும் அல்லது எந்த முயற்சி செய்தாலும் அவர் தனது

மகிமையை விட்டு கொடுக்க போவதில்லை. ஏசாயாவினுடைய அநேக “பந்தி”களானது அவருடைய நியாயப்பிரமாணத்திற்கு காத்திருக்கும்படியாக கூறுகின்றது. வசனம் ஆறானது ஒவ்வொரு ஜாதிகளிலிருந்தும், இரட்சகருக்கூடாக விடுவிக்கப்பட்டவர்கள் ஒன்றுசேருவார்கள் என்பதைக்குறித்து பேசுகின்றது.

ஏசாயா 49:6-12: இஸ்ரவேலை புதுப்பித்தல் என்பது தேவனுடைய இவ்வுலகத்தின் மாபெரும் திட்டங்களோடு ஒப்பிடும் போது ஒரு சாதாரண சிறு காரியம் ஆகும். அவரது நோக்கமானது முழு உலகமும் அவரை அறிந்து அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதே ஆகும்.

ஏசாயா 56:7: தேவனுடைய வீடானது சகல ஜாதிகளுக்கு ஜெப வீடு எனப்படும்.

ஏசாயா 59:16-60:5: இப்பந்தியானது பாவத்தின் காரணமாக உலகமானது ஆவிக்குரிய இருளில் இருந்தாலும், இயேசுவானரே ஒளியோடும், சுகமாக்குதலோடும் எழும்புவார் என்பதை அறியும் படி செய்கின்றது. இப்பரிசுத்த வெளிச்சம் உலகம் முழுவதையும் பிரகாசிக்கச் செய்யும். உலகில் பின்தங்கிய பகுதிகளில் வாழும் புறஜாதிமக்களும் இவ்வொளியினிடத்தில் சேருவார்கள்.

ஏசாயா 2:4,19,21; 5:26; 11:4; 13:11; 24:1,19,21; 25:7; 26:21; 34:2; 64:2: இவ்வசனங்கள் யாவும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை முன்கூட்டியே அறிவிக்கின்றன.

ஏசாயா 2:2; 6:3; 11:9; 52:10; 55:5; 60:2; 61:11; 66:1,18: இவ்வசனங்கள் யாவும் பூமி முழுவதும் தேவனை அறிகின்ற அறிவில் நிறைந்திருக்கும் காலத்தை பற்றி கூறுகின்றது.

## மற்றைய தீர்க்கதரிசிகள்:

மற்ற தீர்க்கதரிசன புத்தகங்களிலுள்ள பிரதான வனனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஏரேமியா 1:5: ஜாதிகளின் தீர்க்கதரிசி என எரேமியா அழைக்கப்பட்டான்.

எரேமியா 9:24: தேவன் உலகத்திற்கு அவரது அன்பையும், இரக்கத்தையும், நியாயத்தீர்ப்பையும், நீதியையும் காண்பிக்கின்றார்.

எரேமியா 23:5: இயேசு கிறிஸ்துவால் உலகம் நீதியுடன் நியாயம் தீர்க்கப்படும் என முன் கூட்டியே தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது.

எரேமியா 18:7-10: சகல ஜாதிகளுக்கும் தேர்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

எரேமியா 27:5; 32:17; 51:15: உலகத்தின் சிருஷ்டிகராகிய கர்த்தரை உயர்த்துகிறது.

எரேமியா 31:7: தேவன் சகல ஜாதிகளாலும் பிரசித்தமாய் துதிக்கப்படுவார்.

எரேமியா 42:2; 33:9: ஜாதிகள் கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும்.

எரேமியா 5:9; 6:19; 7:28; 9:9; 10:10,11,25; 12:17; 23:5; 25:14,31; 51:25: சகல வசனங்களும் உலகின்

பொல்லாத ஜாதிகள் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்டு என பேசுகின்றன.

எரேமியா 16:19-21: தேவனுடைய நோக்கம் சகல ஜாதிகளுக்குள்ளும் இஸ்ரவேலருக்கூடாகவே நிறைவேறும்.

எரேமியா 33:9: எல்லா உலகத்தின் ஜாதிகளும் தேவனை பற்றி கேட்பார்கள்.

புலம்பல் 3:37-39: தேவன் மனிதனை அவனின் பாவத்திற்காக தண்டிப்பார்.

புலம்பல் 4:20: நாம் யாவரும் உலகத்தாரின் மத்தியில் ஜீவித்தாலும், நாம் தேவனுடைய நிழலின் கீழேயே இருக்கின்றோம்.

எசேக்கியேல் 20:41; 36:23; 38:23; 39:7,21: ஆகிய சகல வசனங்களும் உலகிலுள்ள சகல ஜனங்களும் அவருடைய நாமத்தை அறிய வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சையென வெளிப்படுத்துகின்றன.

ஓசியா 1:10; 2:23: தேவனை அறியாத இடங்களிலும் அவர் தன்னை வெளிப்படுத்துவார்.

யோவேல் 1:15: “கர்த்தருடைய நாளை குறித்தும்” சகல ஜாதிகளின் நியாயத்தீர்ப்பின் நேரத்தை குறித்தும் யோவேல் எச்சரிக்கின்றார். உலகத்தின் மனந்திரும்புதலுக்காக அவர் அழைப்பு விடுக்கின்றார்.

யோவேல் 2:28-32; 3:9-12: தேவனுடைய நியாயத்தீர்ப்பையும், பரிசுத்தாவியானவரின் வரங்களையும், சமாதானத்தையும் சகல ஜாதிகளும் அனுபவிக்கும்.

யோவேல் 3:14: தேவனுக்காக இன்னும் உலகின் திரளான மக்கள் சந்திக்கப்படவில்லை என்பதையும் விபரிக்கின்றது.

ஆமோஸ் 4:13: தேவனின் கர்த்தத்துவத்தை ஆமோஸ் மற்ற தீர்க்கதரிசிகளுடன் இணைத்தே பிரகடனப்படுத்துகின்றார்.

ஆமோஸ் 9:11-12: சகல ஜாதிகளும் தேவனின் நாமத்தை கூப்பிடும்போது அவர் எழுந்தருளுவார்.

ஒபதியா 1:1: தேவன் ஜாதிகளுக்குள்ளே தமது தூதனை அனுப்புவார்.

ஒபதியா 1:15: புறஜாதிகளின் மேல் நியாயத்தீர்ப்பின் நாள் வரும்.

மீகா 4:1-3; 5:15; 7:16: தேவன் ஜாதிகளை நியாயம் தீர்ப்பார்.

நாகூம் 1:5: சகல ஜாதிகளும் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வரும்.

ஆபகூக் 15; 3:12: தேவன் பெரிய அற்புதங்களை செய்து புறஜாதிகளுக்கு தம்மை வெளிப்படுத்துவார்.

ஆபகூக் 2:4: விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற கொள்ளை ஸ்தாபிக்கப்படும்.

ஆபகூக் 2:14; 3:3: பூமியானது கர்த்தருடைய மகிமையில் ஒரு நாள் நிறைந்து காணப்படும் என்று முன்னறிவிக்கின்றது.

செப்பனியா 3:6,8: தேவன் துன்மார்க்கமான ஜாதியை நியாயம் தீர்ப்பார்.

ஆகாய் 2:7,21,22: தேவன் ஜாதிகளை அசைத்து அவர்களை தனக்காக இழுத்துக் கொள்வார்.

சகரியா 12:1: மனிதனுடைய ஆவியை உண்டாக்கினவர் என்று தேவன் முன்வைக்கப்பட்டார்.

சகரியா 4:10: தேவன் முழு உலகையும் கவனிக்கின்றார்.

சகரியா 12:10; 13:1,6,7: பாவ உலகிற்காக இயேசு மரணமானார் என முன்னறிவிக்கின்றது.

சகரியா 14:8-9: தேவன் முழு உலகத்திற்கும் ராஜாவாக வருவார்.

மல்கியா 1:11: சகல ஜாதிகளுக்குள்ளும் தேவனுடைய பெயர் மகிகைப்படும்.

இப்பகுதிகளில் நடக்கமுடியாதவை என்று நீங்கள் எண்ணுகின்ற காரியங்கள், தீர்க்கதரிசிகள், உலகை குறித்த தேவசித்தம் இதுவே என்றும் உலகம் எல்லைக்குட்பட்டது என்றும் கற்றுத் தருகின்றார்கள். இப்பாடத்தினை தொடருவதற்காக இவ்வதிகாரத்தின் "மேலதிக படிப்பிற்கு" என்னும் பகுதியில் உலகத்தைப்பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளிடமிருந்து எல்லா பகுதிகளையும நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

## புதிய ஏற்பாட்டிற்கு மாற்றமடைதல்

பழைய ஏற்பாடு மல்கியாவின் புத்தகத்தோடு முடிவடைகின்றது. புதிய ஏற்பாடு மத்தேயுவின் புத்தகத்தோடு ஆரம்பமாகின்றது. அடுத்த அதிகாரத்தில் வேதாகமத்தின் உலக கண்ணோட்டம் எவ்வாறு புதிய ஏற்பாட்டில் பிரதிபலிக்கின்றது என்பதை கற்பீர்கள்.

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலருக்கூடாக சகல ஜனங்களையும் தன் பக்கமாக இழுத்துக் கொள்வது தேவனுடைய திட்டமாக இருந்தது. தேவனுக்கு பயந்து ஜீவிப்பதனால், எருசலேமிற்கு பெரிய காந்தத்தைபோல புறஜாதிகள் இழுக்கப்பட்டு கர்த்தரிடத்தில் வருவார்கள்.

புதிய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் இயேசுவை புறம்பே தள்ளியமையால், புதிய ஒரு மக்கள் குழு எழுப்பப்படுகின்றார்கள். அவர்கள் அவர்கள் சபை என்று அழைக்கப்படுகின்றனர், மறுபடியும் பிறந்த விசுவாசிகளே அவர்கள். இன்றைக்கு சபைக்கூடாக கிரியை செய்து தேவன் தன்னை உலகத்திற்கு வெளிப்படுத்துகிறார்.

ஆனால் மாதிரிகள் வித்தியாசமானது. பழைய ஏற்பாட்டில் ஜாதிகள் எருசலேமிற்கு வந்து கர்த்தரைக்குறித்து கற்றார்கள். புதிய ஏற்பாட்டில் சபையானது எருசலேமிலிருந்து ஜாதிகளுக்குள் அனுப்பப்படுகின்றது.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. வேத வசனத்தின் மைய செய்தி என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் புஸ்தகங்களில் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. பழைய ஏற்பாட்டு வரலாற்று புஸ்தகங்களில் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

5. பழைய ஏற்பாட்டு கவிதை புஸ்தகங்களில் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புஸ்தகங்களில் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் உலக கண்ணோட்டத்தை படிக்க பின்வரும் வேதவசனங்களின் பட்டியலை பாவிக்கவும். இப்பட்டியல் உலகம், தேவனற்றவர்கள், ஜாதிகள், புறஜாதிகள் (இஸ்ரவேல் ஜாதிகளை தவிர்ந்த அனைத்து ஜாதிகளையும்) என்பனவற்றை உள்ளடக்கமாக கொண்டுள்ளது.

ஆதியாகமம்: 6:5-7,1113,17; 8:17,22; 9:1-2,11-17; 10:32; 11:1,8,9; 12:2,3; 13:16; 14:19,22; 17:4-6,16,20; 18:18; 21:13,18; 22:18; 26:4; 28:14; 46:3

யாத்திராகமம்: 8:22; 9:14,16,29; 19:5,6; 32:10; 33:16; 34:10

லேவியராகமம்: 20:23

எண்ணாகமம்: 14:21

உபாகமம்: 3:24; 4:27,39; 7:6; 9:4; 10:14; 14:2; 15:6; 18:9; 26:19; 28:1,10; 30:19

யோசுவா: 2:11; 3:11; 4:24; 23:3,9,12,23

நியாயாதிபதிகள்: 2:21-23

1 சாமுவேல்: 8:5

2 சாமுவேல்: 7:23; 22:50

1 ராஜாக்கள்: 8:23,43,53,60; 11:2

2 ராஜாக்கள்: 5:15; 17:11,15; 19:15,19

1 நாளாகமம்: 16:14,23,24,30,31,35; 17:21; 29:11

2 நாளாகமம்: 6:14,33; 16:9; 20:6; 32:13

நெகேமியா: 1:8; 5:9; 6:16; 9:6

யோபு: 9:24, 12:23; 19:25; 37:6,12; 38:4

சங்கீதம்: 2:1,2,8; 8:1,9; 9:5,8,15,17,19,20; 10:16,18; 18:7,43,49; 19:4; 22:27-29; 24:1; 25:13; 33:5,8,10,12,14; 34:16; 37:9,11,22; 44:2,11,14; 46:2,6,8-10; 47:2,3,7-9; 48:2,10; 49:1; 50:1,4,12; 57:5,9,11; 58:11; 59:5,8,13; 65:5,9; 66:4,7; 67,2,4,6,7; 68:8,32; 69:34; 72:8,11,17,19; 73:12,25; 93:1; 94:10; 95:4; 96:1; 99:1; 102:15,19,25; 104:5,9,13,14,24,30,32,35; 105:7; 106:27,34,35,41,47; 108:3,5; 110:6; 112:2; 113:4; 114:7; 115:2,15,16; 117:1; 119:64,90,119; 121:2; 124:8; 126:2; 134:3; 135:6,7,10,15; 136:6; 138:4; 146:6; 147:8,15; 148:11,13; 149:7

நீதிமொழிகள் 2:22; 3:19; 8:23,26,29,31; 10:30; 11:31; 14:34

பிரசங்கி: 1:4; 3:11; 5:2,9; 7:20; 8:14,16; 10:7; 11:2; 12:7

ஏசாயா: 2:2,4,19,21; 5:26; 6:3; 11:4,9,12; 12:5; 13:11,13; 14:12,26; 17:12,13; 23:9; 24:1,4-6,19-21; 25:7,8; 26:2,9,21; 34:2; 37:16,20; 40:12,15,17,21,28; 41:9; 42:4,5,10; 44:24; 45:8,12,18,22; 48:13; 19:6; 51:6,13,16; 52:10; 54:5; 55:5,9; 60:2; 61:11; 64:2,4; 65:1,17; 66:1,18,22

எரேமியா: 1:5; 4:2; 5:9; 6:19; 7:28; 9:9,24; 10:2,10-12,25; 12:17; 16:19; 18:7-9; 22:29; 23:5,24; 25:14,15,17,31,32; 27:5; 29:14; 31:7,10; 32:17; 33:9; 36:2; 46:28; 49:14; 51:15,20,25

புலம்பல்: 4:20

எசேக்கியேல்: 5:5-8; 16:14; 20:41; 36:24; 38:23; 39:7,21; 43:2

தானியேல்: 4:35; 6:27

ஓசியா: 2:23; 6:3; 9:17

யோவேல்: 2:17,19,30; 3:2,11,12

ஆமோஸ்: 4:13; 9:8,9,12

ஒபதியா: 1:1,15

மீகா: 1:2,3; 4:2,3,7; 5:4,15; 6:2; 7:16

நாகூம்: 1:5

ஆபகூக்: 1:5; 2:14,20; 3:3,6,12

செப்பனியா: 2:3,11; 3:6,8,20

ஆகாய்: 2:7,14,21,22

சகரியா: 1:10,11,15; 2:8,11; 4:10; 12:1,3,9; 14:2,3,9,16

மல்கியா: 1:11

அதிகாரம் ஐந்து

# உலகமானது வார்த்தையிலுள்ளது: புதிய ஏற்பாடு

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடித்ததும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்த அறிவித்தலில் வெளிப்படுத்தப்படும் உலகம் குறித்த தேவனின் திட்டம் என்ன என்பதை விளக்கவும்.
- ☐ இயேசுவின் அணுகுமுறை மூலம், அவருக்கு உலகம் மீதான பார்வை எவ்வாறிருந்தது என்பதை சுருக்கமாக தரவும்.
- ☐ உலகத்தை குறித்தும், அவருடைய தரிசனத்தை குறித்தும், இயேசுவின் போதனையை சுருக்கமாக தரவும்.
- ☐ தேவனுடைய திட்டத்தில், உலகத்திற்கான இயேசுவின் சிலுவைப்பலியின் முக்கியத்துவத்தை பற்றி விளக்கவும் முடியும். .

**திறவுகோள் வசனம்:**

> **பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)**

## அறிமுகம்

இந்த அதிகாரத்திலும், தேவனுடைய வார்த்தையில் முன்வைக்கப்பட்டுள்ள உலகத்தை பற்றியே தொடர்ந்து கற்போம். வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தைக் குறித்தும் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு, இயேசுவின் பிறப்பைப்பற்றிய அறிவித்தலையும், அவரது வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றைப் பற்றியும் உலகைக் குறித்தும் அழுத்திக் கூறுபவற்றையும் கவனிப்போம்.

இயேசு கிறிஸ்து மறுபடியுமாக பரத்திலிருந்து உலகத்திற்கு வரும்வரையும் சபை சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்றும் அழுத்தமாக தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. இதைகுறித்து "உலகத்தில் இருக்கும் சபை" என்று, தொடர்ந்து வரும் அதிகாரங்களில் கற்பீர்கள்.

### இயேசுவின் பிறப்பை குறித்த அறிவித்தல்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த முதல் அறிவித்தல், தேவதூதனால் கன்னி மரியாள் என்ற பெண்ணுக்கு கொடுக்கப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. லூக்கா முதலாம் அதிகாரத்தை வாசிக்கவும்.

இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வரவேண்டும் என்பது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி என்பதை பழைய ஏற்பாடு வெளிப்படுத்துகின்றது. இரட்சகர் வருகின்றார் என்பதை மரியாள் கூறும் போது....

> **நம்முடைய பிதாக்களுக்கு (தேவன்) அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள். (லூக்கா 1:55)**

தேவதூதனால் கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் பிறப்பைப்பற்றிய அறிவித்தலை லூக்கா 2:10-14ல் வாசிக்கவும். “இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன” (வசனம் 10), “பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக” (வசனம் 14) ஆகிய வினைமுற்றா சொல்லை கவனியுங்கள். “எல்லா ஜனங்களுக்கும்” என்பதன் அர்த்தம், உலகிலுள்ள சகல ஜனத்தையும் குறிப்பதாக இருக்கின்றது. இயேசுவின் பிறப்பைக் குறித்த அறிவித்தல் உலகிலுள்ள சகல மக்களுக்காகவும் அவர் வந்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றது.

உலகமக்கள் அனைவருக்கும் சுவிசேஷத்தை பரப்புவது நிச்சயிக்கப்பட்டது என்பதற்கு இதைத்தவிர புதிய ஏற்பாட்டில் வேறு எவ்வாக்கியமும் இல்லை, இந்த அறிவித்தலே போதுமானதாகும்.

## இயேசுவின் பிரதிஷ்டை

யூதருடைய சடங்காச்சாரத்தின்படி இயேசு, பிரதிஸ்டை செய்யப்படுவதற்கு தேவாலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டார், அப்பொழுது சிமியோன் இவரே வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகர் என்பதை அடையாளங்கண்டு கொண்டார். இச்சம்பவத்தை லூக்கா 2:-25-32ல் வாசிக்கவும். சிமியோன் மனிதரையும் தேவனையும் ஒப்புரவாக்கவே இயேசு வந்துள்ளார் என்று பிரசித்தம் செய்தார். அவர் சொன்னார்:

> **‘தேவரீர் சகல ஜனங்களுக்கும்...... முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை.... என் கண்கள் கண்டது என்றான்’ (லூக்கா 2:31-32).**

இன்னுமொரு புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனமும், இயேசுவின் இவ்வுலக ஊழியத்ப் பற்றி, கடைசியாக யூதவிசுவாசத்தின் படி பிரதான ஆசாரியனாக இருந்த காய்ப்பாவினால் சொல்லப்படுகின்றது.

> **ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்.**
>
> **இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும்,**
>
> **அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான். (யோவான் 11:50-52)**

## யோவான் ஸ்நானகன்

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் மக்களை ஆயத்தப்படுத்த தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மனிதனே யோனான் ஸ்நானகன். அவனது பிறப்பு, வாழ்க்கை, தேவனுடைய திட்டம் என்பவற்றை லூக்கா 1ல் வாசிக்கவும்.

யோவான் மக்களுக்கு இயேசுவை அறிமுகம் செய்யும் போது “மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பை காண்பார்கள” என்றான். இயேசு கிறிஸ்து சகல மக்களுக்கும் இரட்சிப்பை கொண்டு வந்தார். (லூக்கா 3:3-6)

“உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி” என்றும் யோவான் இயேசுவை சுட்டிக்காட்டி கூறினான்:

> **மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. (யோவான் 1:29)**

பழைய ஏற்பாட்டில் ஆட்டுக்குட்டிகள் பாவத்திற்காக பலியிடப்பட்டன. இயேசுவே பாவத்திற்கான தேவனுடைய பலியானார். அவரே பரிபூரணமான இறுதி பலி ஆவார். பாவ மன்னிப்புக்காக மிருகங்களின் இரத்தத்தை சிந்தும் பழைய ஏற்பாட்டு பலி தொடர்ந்து அவசியமில்லை.

யோவான் இயேசுவை "உலகத்தின் ஒளி" என்று அழைத்தார்.

**உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.**

**அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. (யோவான் 1:9-10)**

## இயேசுவின் வழிகாட்டல்

இயேசு அவரது ஊழியகாலத்தில், தனது மாபெரும் அன்பை உலகத்திற்கு வெளிப்படுத்தினார். 5000 பேரை போஷித்தமை பற்றி மத்தேயு 14:13-21ல் வாசிக்கவும். சீஷர்கள் ஜனக்கூட்டத்தையும், வசதியின்மைகளையும் கண்டார்கள். தேவனின் அன்பை அவர்களுக்கு காண்பிக்கும் சந்தர்ப்பமாக இயேசு கண்டார்.

**உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள். (யோவான் 4:42)**

இந்நேரத்தில் உலகளாவிய ஆவிக்குரிய அறுவடையைக்குறித்து பெரிதான தரிசனத்தை இயேசு தனது சீடர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவர் சொன்னார்:

**அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான் 4:35)**

அவர் தமது சீஷர்களிடம்:

**தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்ஞூ**

**ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். (மத்தேயு 9:37-38)**

மரியாள் இயேசுவை அபிஷேகிப்பதை பற்றி கூறுவதான மாற்கு 14:1-9 வசனங்களை வாசிக்கவும். சிலர் விலையுயர்ந்த தைலத்தை அவரின் தலைமேல் ஊற்றியமைக்காக அவளை விமர்சித்தனர். ஆனால் இயேசு சொன்னார்.....

**இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மாற்கு 14:9)**

இக்கூற்றில், இயேசு சுவிசேஷம் உலகம் முழுவதும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற தனது திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

தேவாலயத்தை சுத்தகரித்த சம்பவத்தை மாற்கு 11:15-17ல் வாசிக்கவும். உலகைப்பற்றி அவர் மீண்டும் அழுத்திக்கூறுகின்றார்:

> **என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். (மாற்கு 11:17)**

இன்று எமது ஆராதனைக் கூடங்களில் பல தேவனுடைய நோக்கத்தை விட்டு விலகியுள்ளது. அவரது திட்டத்தை நிறைவேற்றும்படிக்கு, இயேசு எம்மை பரிசுத்தப்படுத்துவது அவசியமாகவுள்ளது....

> **என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் (சகல ஜாதிகளுக்கும்) ஜெபவீடு என்னப்படும். (ஏசாயா 56:7)**

## இயேசுவின் போதனை

இயேசு தனது போதனைகளிலும் தமது நடத்தையிலும் உலகைக்குறித்த தேவனுடைய திட்டத்தை அழுத்தமாக சொன்னார்.

வேதாகமத்தில் பின்வரும் பகுதிகளை படிக்கவும்.

மத்தேயு 5:13-16: இயேசுவை பின்பற்றுவோர் உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருக்கின்றார்கள்.

மத்தேயு 6:10: தேவனின் சித்தமும் திட்டமும் பூமியிலே நிறைவேறும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

மத்தேயு 6:19; 16:26; மாற்கு 8:36; லூக்கா 12:22-32; யோவான் 12:25: எமது அவதானம் பூமிக்குரியதாயிராமல் நித்தியத்திற்கு உரியதாய் இருக்க வேண்டும்.

மத்தேயு 9:6; மாற்கு 2:10; லூக்கா 5:24: பாவத்தை மன்னிக்க இயேசுவுக்கு வல்லமையுண்டு.

மத்தேயு 13:35: பூமி அத்திபாரப்பட்டது முதலே உலகைக்குறித்து இருந்த தேவனுடய திட்டத்தை இயேசு வெளிப்படுத்தினார்.

மத்தேயு 21:43: புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும் என்பதை இயேசு முன்னறிவித்தார்.

லூக்கா 4:18-19: உலகத்தின் தேவையோடு இருந்த மக்கள் மேல் இயேசு கரிசனையாயிருந்ததை கவனிக்கவும்.

லூக்கா 12:49-51; யோவான் 9:39; 12:31: இயேசு “அக்கினி”யையும் (நியாயத்தீர்ப்பை), நீதியையும் பாவத்தையும் பிரிக்க வந்தார்.

லூக்கா 13:28-29: சகல ஜனங்களும் கடைசி நேரத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள் என்று இயேசு போதித்தார்.

யோவான் 3:16-18; 12:47; 17:6; 18:37: அவர் உலகத்திற்கு வந்த நோக்கத்தை இவ்வசனங்கள் அடையாளப்படுத்தி காட்டுகின்றது.

யோவான் 6:33-51: “எந்த மனிதனுக்கும“ ஜீவ அப்பம் நானே என்றும், தனது சரீரத்தை “உலகிற்காக“ கொடுத்தார்.

யோவான் 7:7: உலகத்தின் பாவ நிலைமையை பற்றி இயேசு பேசினார்.

யோவான் 8:12: உலகிற்கு ஒளி என்று தன்னைக்குறித்து இயேசு சொன்னார். (9:5, 12:46 ஆகியவற்றையும் பார்க்கவும்)

யோவான் 8:23,26: தான் உலகத்தான் அல்லவென்றும் தேவனுடைய செய்தியை பேசும்படியாக உலகத்திற்கு அனுப்பப்பட்டேன் எனவும் இயேசு கூறினார்.

யோவான் 12:47: உலகத்தை இரட்சிக்கவே வந்தேன் என்று இயேசு கூறினார்.

யோவான் 10:1-16: இப்பகுதி புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிப்பதை முன்னறிவிக்கிறது. “ஆடுகள்” என்பது இஸ்ரவேலரை குறிக்கவில்லை. பிரிவினையாகிய கோடுகள் அகற்றப்பட்டு, சகல மக்களும் “ஒரே மந்தையின் ஆடுகள்” ஆகிவிட்டனர்.

யோவான் 12:20-36: உலகத்தின் பாவங்களை சுமந்து மரித்து சகல மக்களையும் தன்னோடு இழுத்துக்கொள்வேன் என்றார் இயேசு. உலகத்தின் சகல பகுதிகளிலிலுமிருந்து ஆண்களையும் பெண்களையும் தேவன் இழுத்துக்கொள்வார்.

யோவான் 15:18-19; 16:33; 17:14-16: இயேசு புறக்கணிக்கப்பட்டதைப் போல், அவரை பின்பற்றுவோரும் உலகத்தால் புறக்கணிப்பப்படுதலின் அனுபவத்தை பெறுவார்கள்.

யோவான் 16:8: பரிசுத்த ஆவியானவர் வரும்போது, உலகின் பாவத்தைக் குறித்து கண்டித்துணர்த்துவார்.

## இயேசுவின் உவமைகள்

இயேசு தனது உலக ஊழியத்தின் போது அநேக உவமைகளைச் சொன்னார். உவமைகள் இயற்கை காரியங்களாக இருந்தன, அவைகள் ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்த பாவிக்கப்பட்டன. அவைகள் “பரலோக அர்த்தத்தை கொடுக்கும் இவ்வுலக கதைகள்” என அழைக்கப்படுகின்றன. உவமைகளினாலே தேவனுடைய சித்தத்தை அதிகமாக இயேசு வெளிப்படுத்தினார்.

**நல்ல சமாரியன்: (லூக்கா 10)**

சமாரியருடன் இஸ்ரவேலருக்கு நல்ல உறவு இருக்கவில்லை. “எனது அயலான் யார்?” என்பதைக் குறித்த கேள்வி சமயத்தலைவர்களிடையே நீண்டகாலமாகவே இருந்தது. இக்கதை மற்றவர்களின் கலாச்சாரத்தைக்குறித்து சரியான மனப்பான்மையைப் பற்றி பேசுகிறது.

**கெட்டகுமாரன்: (லூக்கா 15)**

இக்கதையிலுள்ள மூத்த சகோதரனுடைய மனப்பான்மை இஸ்ரவேலரின் சமய தலைவர்களுக்கும் இயேசுவின் காலத்தின் இருந்தது. தேவன் மற்ற ஜாதியாரை நேசிப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மற்ற ஜாதிமக்கள் தேவனுடைய இரட்சிப்பை பற்றி அறிந்து கொள்ளும் போது அவர்கள் ஆத்திரமடைந்தனர்.

நாம் இஸ்ரவேலை விமர்சித்தாலும், நவீன கால சபைகள் பலவும் இதே மனோபாவத்துடனே இருக்கின்றது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் சுவிசேஷத்தின் ஆசிர்வாதத்தை பெற்று ஓய்வாயிருக்கின்றோம், எனினும் இன்னும் அந்தகாரத்தில் இயேசுவின்றி வாழுகின்ற தேவனற்ற ஜனங்களைப்பற்றி நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

**பெரிய விருந்து: (லூக்கா 14:16-24)**

தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை இஸ்ரவேல் மக்கள் முதலில் பெற்ற போதும் அவர்கள் அதை தள்ளிவிட்டார்கள் என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது. தற்போது இந்த அழைப்பு “தெருக்களிலும் வீதிகளிலும்” இருக்கின்ற உலக மக்களுக்குச் சென்றுவிட்டது.

**தோட்டக்காரன்: (மத்தேயு 21:34-44)**

தேவனுடைய திராட்சைத்தோட்டத்தின் காவலாளிகள் இஸ்ரவேலர் என இயேசு வெளிப்படுத்தினார், ஆனால் அவர்கள் இவ்வுத்தரவாதத்திலிருந்து தவறிவிட்டார்கள்.

**கோதுமையும் களையும்: மத்தேயு 13:36-43)**

வயல் நிலம் உலகிற்கு அடையாளம். தேவனுடைய வார்த்தை முழு உலகிலும் விதைக்கப்படல் வேண்டும். உலக முடிவிலே உற்பத்தியான ஆவிக்குரிய அறுவடையை தேவனே தேர்ந்தெடுப்பார்.

**விதைக்கிறவன்: (மாற்கு 4)**

விதை தேவனுடைய வசனம், அது உலகமாகிய வயலில் விதைக்கப்படுகிறது. எனினும் அவை விதவிதமான ஆவிக்குரிய நிலங்களில் விழுகின்றமையால், வித்தியாசமான அறுவடையைக் கொடுக்கின்றது.

**இராஜ்ஜியத்தின் விரிவாக்கல் (மத்தேயு 13)**

இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் பரவும் என்பதை விளக்க இயேசு கிறிஸ்து பலவிதமான உவமைகளை பாவித்தார். மத்தேயு 13ல் கடுகுவிதையின் உவமை, புளித்தமா, மெழுகுவர்த்தி, வலை, மறைத்து வைக்கப்பட்ட பொக்கிஷம், விலையேறப்பட்ட முத்து, வீட்டெஜமான் போன்ற கதைகளையும் வாசிக்கவும்.

## இயேசு புறக்கணிக்கப்படுதல்

இயேசு கிறிஸ்துவிற்கூடாக கொண்டுவரப்பட்ட செய்தியை இஸ்ரவேலர் தள்ளிவிட்டபடியால், ஆண்டவர் பல உதாரணங்களை பாவித்து அவர்களின் தள்ளிவிடுதலின் பயங்கரத்தை காண்பித்தார்.

**பத்து குஷ்டரோகிகள்: (லூக்கா 17:12-19)**

இச்சம்பவத்தில் ஒரு சமாரிய குஷ்டரோகி நன்றி செலுத்தினான், மற்ற ஒன்பது இஸ்ரவேலரும் அப்படிச் செய்யவில்லை. கிருபை பெற்றிருந்த இஸ்ரவேலர் அப்படிச் செய்யாதிருந்த போதும் சமாரியன் நன்றி செலுத்துவதில் கவனம் செலுத்தினார். யூதரும், புறஜாதியாரும் சுவிஷேசத்திற்கு பிரதிபலிப்பின் வித்தியாசத்தை இது காண்பிக்கின்றது.

**தீரு சீதோன் பட்டணத்து பெண்: (மத்தேயு 15:21-28)**

மிக முக்கியமான நோக்கத்திற்காக முதன்முறையாக இயேசு கடினமான பிரதிபலிப்பை கண்டார். இயேசு திட்டமிட்டபடி அவளுடைய பெரிதான விசுவாசம் வெளிப்பட்டது. அது முன்மாதிரியாயிருந்தது. இஸ்ரவேலரை கடிந்தும் கொண்டார். அவளுடைய வேண்டுதலுக்கு பதிலளிக்கும் வகையில், தேவன் இரக்கம் காட்டினார், அவர் தேசிய எல்லைகளுக்குள் கட்டுப்பட்டிருக்கவில்லை.

**நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்: (மத்தேயு 8:5-12)**

இவன் ரோமப்போர் வீரன், தேவனது இரக்கம் அவனது வேலைக்காரனை குணமாக்க உதவியது. இயேசு அவனிடம் கூறினார்:

> **இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 8:10)**

11ம் வசனத்திலுள்ள கூற்றானது இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் சகல மனிதருக்குமானது என வெளிப்படுத்தப்படுகின்றது.

**அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். (மத்தேயு 8:11)**

## சிலுவையும் உலகமும்

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் இவ்வுலகத்திற்குரிய தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும். உலக இரட்சிப்பிற்கு அவரது சிலுவை மரணமே அடிப்படையாக உள்ளது. முழு வேதாகமத்தின் மைய செய்தி அதுவே. இயேசு கிறிஸ்து உலகளாவிய கவனத்தை சிலுவையினூடாகவே இழுத்துக் கொண்டார்.

மத்தேயு 20:28: “அநேகருக்காக ஜீவனை கொடுக்க” வந்தார். “அநேகர்” என்பதன் பொருள், முழு உலகிலுமுள்ள அநேக மக்கள் என்பதாகும்.

மத்தேயு 26:28: இயேசு கிறிஸ்து தனது இரத்தம் “பாவமன்னிப்பிற்காக அநேகருக்காக சிந்தப்படுகிறது” என்றார்.

யோவான் 3:14-17: தேவன் தனது அன்பை, ஒரே பேறான குமாரனை உலக மக்களின் பாவத்திற்காக மரிக்க அனுப்பி வெளிப்படுத்தினார் என இயேசு சொன்னார். “சகலரும்” என்பது எல்லா தேசத்து சகல மனிதரையும் குறிப்பிடுகின்றது.

யோவான் 6:51: உலகத்திற்காக தனது ஜீவனைக் கொடுப்பேன் என அவர் குறிப்பிடுகின்றார்.

யோவான் 12:32: சகல மனிதனின் இரட்சிப்புக்காகவும் தன்னை கொடுப்பதாக இயேசு சொன்னார்.
பவுலின் எழுத்துக்களிலும் சிலுவையே மைய கருவாக இருக்கின்றது. அதை அவர் உலகளாவிய நோக்கத்திற்காக வெளிப்படுத்துகிறார்.

ரோமர் 5:12-21: ஆதாமின் பாவத்திற்கூடாக, சகல மனிதருக்கும் நியாயத்தீர்ப்பு வந்தது. இயேசுவினுடைய சிலுவை மரணத்திற்கூடாக, நீதியானது சகலருக்கும் வந்தது.

2 கொரிந்தியர் 5:14-19: இயேசு “சகலருக்கும” மரித்தார், தேவன் இயேசுவுக்கூடாக உலகத்தை தம்முடன் ஒப்புரவாக்கினார்.

கலாத்தியர் 1:4: தேவனுடைய சித்தத்தின்படி இயேசு தன்னையே நமது பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்தார்.

எபேசியர் 3:6-11: தேவனற்ற ஜாதிகளும் இயேசுவின் பாவ நிவாரண பலியினாலே ஆசீர்வாதங்களை பெறுகின்றனர்.

கொலோசேயர் 1:20: இயேசுவின் சிலுவைமரணத்திற்கூடாக தேவனுடன் சமாதானமும் ஒப்புரவாடுதலும் ஏற்பட்டது.

1 தீமோத்தேயு 1:15: பாவிகளை இரட்சிக்க இயேசு வந்தார்.

1 தீமோத்தேயு 2:5-6: சகல ஜாதியினரும், மெய்யான தேவனுடன் சேருவதற்கு இயேசு கிறிஸ்து மாத்திரமே ஒரேயொரு மத்தியஸ்தர்.

எபிரேயர் 9:11-12: சகல மனிதருடைய பாவத்திற்காகவும் இயேசு ஒரேதரம் பாடுபட்டார்.

1 யோவான் 4:9,14: யோவானும் சிலுவைமரணத்திற்கு ஊடாக உலகளாவிய கவனத்தை செலுத்துகின்றார். இயேசு உலகின் இரட்சகராகவே உலகத்திற்கு அனுப்பப்பட்டார்.

## முடிவற்ற வேலை

இயேசு சிலுவையில் மரணத்திற்கு முகங்கொடுக்கிறபோது கூறினதாவது:

> **நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்ளூ சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். (யோவான் 18:37)**

அவருடைய சிலுவை மரணத்திற்கூடாக, உலகத்தை தேவனுடன் ஒப்புரவாக்கும் திட்டம் முடிந்தது என்று இயேசு பிரகடனப்படுத்தினார். இயேசு சொன்னார்:

> **பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்ளூ நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)**

## இயேசுவின பிரதான கட்டளை

இயேசு மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (மத்தேயு 28). அவர் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு செல்லும் முன்பதாக தன்னை பின்பற்றிய சீடர்களுக்கு பலமுறை காட்சியளித்தார். ஒவ்வொரு தடவையும், அவர் அவர்களை சந்தித்தபோது சுவிசேஷத்தை அறிவித்து உலகை ஆதாயப்படுத்துவது பற்றியே பேசினார். சவாலுடன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இது “பெரிதான கட்டளை” எனப்படுகிறது. அடுத்து வருகின்ற அதிகாரத்தில் அவருடைய சீடர்கள் இச்சவாலை எவ்வாறு நிறைவேற்றினர் என்பதை கற்பீர்கள்.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. இயேசுவினுடைய பிறப்பின் அறிவித்தலின் மூலம் இவ்வுலகத்தின் தேவனது திட்டமானது எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது என்பதை விபரிக்கவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. கிறிஸ்துவினுடைய நடத்தையின் மூலம் இவ்வுலகத்தின் வேதாக கண்ணோட்டமானது எவ்வாறு நிருபிக்கப்படுகின்றது என்பதை விபரிக்கவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. தன்னுடைய இலக்குகளையும், உலகத்தையும் குறித்த இயேசுவினுடைய போதனைகளை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

5. இவ்வுலகத்தில் தேவனுடைய திட்டத்தில் இயேசுவினுடைய சிலுவை குறித்தான முக்கியத்துவத்தை விபரிக்க.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. தான் தேவனுடைய வேலையை முடித்து விட்டதாக இயேசு கூறியதன் அர்த்தம் என்ன?

--------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

# மேலதிக படிப்பிற்கு

கீழ்வரும் பகுதிகளை தொடர்ந்து படிப்பதன் மூலம் உலகம் குறித்தான காரியங்களை கற்றுக்கொள்வீர்கள். இவைகள் அனைத்தும் "உலகம்" பற்றியதும் சுவிசேஷம் பற்றியதுமான பகுதிகளாகும்.

மத்தேயு: 5:5,13,14; 6:19; 9:6; 10:34; 13:35,38-40,49; 16:19,26; 18:18,19; 21:43; 24:3,7,9,14,30,35; 25:32,34; 28:18-20

மாற்கு: 2:10; 4:5,19; 8:36; 10:30; 11:17; 13:8,10,27,31; 14:9; 16:15

லூக்கா: 1:70;5:24; 11:50; 12:30,49,51; 18:30; 21:10,25,26,33,35; 24:47

யோவான்: 1:9,10,29; 3:16,17,19,31; 4:42; 6:33,51; 7:7; 8:12,23,26; 9:5,39; 11:51,52; 12:19,25,31,32,46,47; 14:17,19,31; 15:18,19; 16:11,21,28,33; 17:4,6,11,14-16,18,21,23; 18:20,36,37; 21:25

அதிகாரம் ஆறு

# உலகிலுள்ள திருச்சபை

**குறிக்கோள்கள்:**

☐ இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:
☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதுதவும்.
☐ “பெரிதான கட்டளையை” விபரிக்கவும்.
☐ “பெரிதான கட்டளை” குறித்தான வசனங்களை தரவும்.
☐ “சபை” என்பதின் வரைவிலக்கணத்தை கூறவும்
☐ சபை எவ்வாறு ஆரம்பமானது என்பதை விபரிக்கவும்
☐ சபைக்கு பின்னாலுள்ள ஆவிக்குரிய வல்லமையை அடையாளம் காட்டவும்
☐ சபையை தேவன் ஸ்தாபித்ததின் திட்டத்தை சுருக்கமாக தரவும்
☐ சபையின் நோக்கத்தை குறிப்பிடவும் “இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்” என்பதின் அடிப்படையை விளக்கவும் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

## அறிமுகம்

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரை எழுப்பி, அவர்களுக்கூடாக உலகிற்கான இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்தினார். இஸ்ரவேலர் இயேசுவை புறக்கணித்ததின் பின்னர், தனது கிரியையை உலகத்திற்குள் நடப்பிப்பதற்கு, தேவன் புதியதொரு மக்கள் கூட்டத்தை எழுப்பினார். அக்குழுவே சபை எனப்படுகின்றது. சபையானது விசேஷநிலையில், ஜாதிகளுக்கான தேவ திட்டத்தில் இருக்கின்றது. உலகத்தின் சபையின் அமைப்பை இப்பாடம் விளக்கப்படுத்தும்.

## பெரிதான கட்டளை

இயேசு மரணமடைந்து உயிர்த்தபின்னர், தன்னை பின்பற்றியோருக்கு பலமுறை காட்சியளித்தார். அவ்வேளையில் ஒவ்வொரு முறையும் அவசர தேவையைக் குறித்து சவால்விட்டார். முழு உலகையும் சுவிசேஷ செய்தியால் ஆதாயப்படுத்த வேண்டும் என்பதே அச்சவாலுக்கான, அவர்களுடைய உத்தரவாதமாய் இருந்தது. இக்கட்டளை இயேசுவால் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்டது. இது “பெரிதான கட்டளை” என யாவராலும் அறியப்படுகிறது. இப்பெரிதான கட்டளை மனிதருக்கே கொடுக்கப்படுகிறது. சகல சிருஷ்டிகளையும் சுவிசேஷத்தால் ஆதாயப்படுத்த வேண்டும் என்பதே உத்தரவாதம்.
இயேசுவை பின்பற்றியோருக்கு, இயேசுவால் கொடுக்கப்பட்ட பெரிதான கட்டளைகள் பின்வரும் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**யோவான் 20:21-23:**
இயேசு தன்னை பின்பற்றியவர்களை பார்த்து “பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை

அனுப்புகிறேன்” என்றார். பெரிதான கட்டளையானது தேவனுடனே ஆரம்பமானது. பல வருடகாலமாக, தேவன் மீண்டும் மீண்டும், தனது தூதர்களையும், தீர்க்கதரிசிகளையும், பாவமக்களை தம்முடன் சேர்த்துக் கொள்ளும்படியாகவே அனுப்பினார். இச்செய்தியாளர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். கடைசியாக, தேவன் தனது ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை அனுப்பினார்.
இயேசுவை ஒரு நற்செய்தியாளராகவே தேவன் அனுப்பினார். அவ்விதமாக பிதா அவரை அனுப்பியது “போல” அவரும் எம்மை அனுப்புகின்றார். இயேசுவின் எதிர்ப்பார்ப்பு என்ன?

-தெய்வீக ஊழியத்திற்காகவே உலகிற்கு வந்தார்.
-சகலவற்றையும் விட்டுவிட்டு வந்தார்.
-விழுந்துபோன மனுக்குலத்திற்கு தன்னை அடையாளம் காட்ட வந்தார்.
-ஊழியத்திற்காக பாடுபடவும் மரிக்கவும் விருப்புடன் இருந்தார்.
-பிரகடனப்படுத்தியும், நிரூபித்தும் தனது ஊழியத்தை நிறைவேற்றினார்.
-தேவன் செய்யும்படி அனுப்பிய வேலையை செய்து முடித்தார்.

## லூக்கா 24:45-59

இப்பகுதியை கடந்த அதிகாரத்திலும் வேதாகம திறவுகோள் வசனமாக கற்றோம். இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல் என்பவற்றில் தேவனுடைய நோக்கத்தை இது வெளிப்படுத்துகிறது. மீட்பின் செய்தியை உலக ஜாதிகளுக்கு பகிர்ந்து கொள்ளல் என இது அழைக்கப்படுகின்றது.
மனிதனுடைய பாவத்திற்காக இயேசு மரித்தது மட்டும் போதாது. இழந்து போன மனிதர்கள் தானாகவே இரட்சிக்கப்படமாட்டார்கள். நாமே நற்செய்தியை அவர்களுக்கு அறிவித்து அவர்களை தேவனிடம் கொண்டு செல்ல வேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). பாவத்தினால் மனிதரும் மனுஷிகளும் நரகத்திற்கு நேராய் சென்று கொண்டு இருக்கின்றார்கள். யார்யாரெல்லாம் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களோ அவர்களே பாவத்திற்கான மன்னிப்பை பெற்று இரட்சிக்கப்படுவார்கள்.
ஒருவரும் கெட்டுப்போவதை தேவன் விரும்பவில்லை:

> **தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)**

ஒவ்வொருவரும் இரட்சிப்படைய வேண்டும் என்பது தேவனது வாஞ்சை என்பதில், எவ்விதமான கேள்விக்கும் இடமில்லை.

> **ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். (ரோமர் 10:13)**

ஆனால்.....

> **அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்? (ரோமர் 10:14)**

ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை தேவன் விரும்புகின்றார், ஆனால் யாராவது ஒருவர் இந்த நற்செய்தியை சொல்ல வேண்டும்.

### மாற்கு 16:14-16:

“போ” என்பதே கட்டளை. “உலகம் எங்கும்” என்பதே எல்லை. சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். இவ்வேளையை செய்பவர்களோடிருந்து அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வதாக இயேசு வாக்குபண்ணியுள்ளார். அவருடைய கட்டளையை நிறைவேற்றாமலேயே சிலமக்கள் அடையாளங்களை தேடுகின்றமையால் அற்புதமும் வல்லமையும் இருப்பதில்லை.

### யோவான் 15:16:

ஆவிக்குரிய நற்கனிகளை கொடுப்பதற்காக இயேசு எங்களை தேர்ந்தெடுத்து அபிஷேகித்துள்ளார். இக்கடைசி முழு அதிகாரத்திலும் ஆவிக்குரிய கனி கொடுப்பதை பற்றி வாசியுங்கள். இயேசு திராட்சை செடியாகவும், நாம் கிளைகளாயும் இருக்கிறோம் என்பதை நீங்கள் கற்பீர்கள். ஜீவனின் ஊற்றாகிய இயேசு எம்முடன் இருப்பதால் ஆவிக்குரிய அறுவடையை அது கொண்டுவரும்.

### மத்தேயு 28:16-20:

“சகல அதிகாரமும்” அவருக்கு தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது என்றார் இயேசு. இதனால் முழு உலகிற்கும் சுவிசேஷத்தை, அவரை பின்பற்றுவோர் கொண்டு செல்ல, இயேசு அதிகாரமுள்ளவராய் அபிஷேகிக்கிறார். இப்பகுதியை கவனியுங்கள்:

**ஊழியக்காரர்:** ஓர் குறிக்கோளுக்காக இயேசு மக்களை அழைப்பதையே ஊழியக்காரர் எனலாம். “நாம” (சகல விசுவாசிகளும்) நற்செய்தியாளர்கள்.

**வல்லமை:** “சகல வல்லமை” நற்செய்தியாளன் முன்னோக்கிச் செல்ல வல்லமையுள்ள தேவனுடைய நோக்கத்தினால் முடிகின்றது.

**சலுகை:** “போ” என்ற கட்டளையே பெரிதான கட்டளையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே எமது வாழ்விற்கான சலுகை. இது தேர்ந்தெடுத்தல் அல்ல.

**திட்டம்:** கற்றுக்கொடுத்தலும், போதிப்பதும்தான் பாவிக்கப்படவேண்டிய மாதிரிகள்.

**நோக்கம்:** சகல ஜாதிகளையும் சீஷராக்குவதே நோக்கம். இதுவே அறுவடையை பெருக்கும்.

**மக்கள்:** “சகல ஜாதிகளிலிருந்தும்” ஆதாயப்படுத்தப்பட வேண்டியவர்களே மக்கள். இதுவே கட்டளையின் நோக்கம். இது அகில உலகத்தையும் உள்ளடக்கும்.

**சமூகம்:** இயேசு எம்முடன் பேசுவார், அவரே இத்திட்டத்தின் உயர் அதிகாரி. அவரே பரிசுத்த ஆவியானவருக்கூடாக பாதுகாத்து வழிநடத்தி, பெரிதான கட்டளையை நிறைவேற்றுவார்.

**கட்டளை:** அவரது செய்தியே கட்டளை. இச்செய்தியை ராஜ்ஜியத்தின் சுவிசேஷமாக உலகிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

> **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.... (மத்தேயு 24:14)**

சுவிசேஷமானது தேவனுடைய சுவிசேஷம் எனவும் (1 தெசலோனிக்கேயர் 2:9), கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் எனவும் (1 தெசலோனிக்கேயர் 3:2), பவுலுடைய சுவிசேஷம் எனவும் (ரோமர் 2:16) அழைக்கப்படுகின்றது. இங்கே எவ்வித முரண்பாடுகளும் இல்லை. தேவனே சிருஷ்டிகளின் ஆரம்ப

கர்த்தா. தேவதிட்டத்தை இயேசு நிறைவேற்றினார். பவுலைப்போன்ற மனிதர் சுவிசேஷத்தின் தூதுவர்களாக இருக்கின்றனர்.

சுவிசேஷம் தேவனுடைய வெளிப்பாட்டினாலே கிடைத்தது. அது மனிதன் உருவாக்கிய உபதேசமல்ல:

**சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.**

**நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை., மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். (கலாத்தியர் 1:11-12)**

1 கொரிந்தியர் 15:1-11ல், சுவிசேஷத்தின் சத்தியமானது சாரம்சமாகவுள்ளது. அடிப்படை போதனையானது இயேசு, அவருடைய ஊழியம், பாவத்திற்கான மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் என்பனவாகும். சுவிசேஷமானது கிருபை, விசுவாசம் என்பவற்றை அடித்தளமாக கொண்டது.

சுவிசேஷம் என்பதின் அர்த்தம் யோவான் 3:16, யோவான் 14:1, மத்தேயு 11:28, ரோமர் 10:9 போன்ற வசனங்களில் இரட்சிப்பின் திட்டமாக முன் வைக்கப்படுகின்றது. இது இராஜ்ஜியத்தை பற்றி இயேசு பேசியவற்றை உள்ளடக்கிய பரந்த அர்த்தத்தை கொண்டது.

சுவிசேஷம் தேவ சத்தியம்:

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். (கொலோசெயர் 1:5)**

சுவிசேஷம் வல்லமையுள்ள தேவனுடைய இரட்சிப்பின் பலனாக உள்ளது.

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்ளூ முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16)**

# திருச்சபை

சபைக்கு இயேசு கிறிஸ்துவால் பெரிதான கட்டளை சலாவாக முன்வைக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மக்களே சபையாக ஆராதிப்பதற்கு அழைக்கப்பட்டார்கள். உலக ஜாதிகளுக்கு தேவன் தன்னை இக்குழுவிற்காகவே வெளிப்படுத்தினார். “சபை” என்று நாம் பேசுகின்ற போது நாம் அர்த்தப்படுத்துவது என்ன என்பது முக்கியமானதாகும். தேவனுடைய வார்த்தையில் “சபை” என்பது கட்டிடத்தை குறிக்கவில்லை. இது சமயமோ அல்லது ஒரு மத பிரிவோ அல்ல. இரண்டு படிமுறைகளில் சபை விபரிக்கப்படுகிறது:

### உலகளாவிய ரீதியில்:

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற சகல மக்களும் இச்சபையில் அடங்குவர். இது தேவனுக்கூடாக மறுபடியும் பிறந்து, அவருக்கு கீழ்ப்படிந்து வாழுகின்ற விசுவாசிகளின் ஐக்கியமேயாகும்.

“சபை” என்னும் சொல்லின் அர்த்தமானது “அழைக்கப்பட்டவர்கள” அல்லது “வேறுபிரிக்கப்பட்டவர்கள்” என்பதாகும். சாத்தானின் ராஜ்ஜியத்திலிருந்து, தேவ ராஜ்ஜியத்திற்கு அழைக்கப்பட்ட கூட்டமே சபை.

இதில் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட சகல ஜாதியினரும், ஆதிவாசிகளும், பலபாஷைபேசுவோரும், பல கலாச்சாரத்தை சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்படுவர்.

சபையானது "கிறிஸ்துவின் சரீரம்", "கிறிஸ்தவர்கள்" "விசுவாசிகள்" என்று அழைக்கப்படுகின்றது. இவ்வசனங்கள் சிலவேளைகளில் பரந்தளவில் பாவிக்கப்படுகின்ற போதும், தேவனுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கின்ற, இயேசு கிறிஸ்துவுக்கூடாக மறுபடியும் பிறந்தவர்கள் என்பதே இச்சொற்களுக்கான உண்மையான வரைவிலக்கணம் ஆகும்.

**உள்ளூர் ரீதியாக:**

ஊழிய நோக்கத்திற்காக, ஸ்தாபனம், ஐக்கியம், விசுவாசிகளின் கூட்டம் என்று ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்ட சாதாரண ஐக்கியங்களாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டு காலத்தில் சபை சாதாரண விதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

## சபையின் தன்மை

வேதாகமம் சபையின் செயல்பாட்டையும், உறவையும், நிலையையும், பல்வேறுப்பட்ட அடையாளங்களுடன் ஒப்பிட்டு விபரிக்கின்றது.

கீழ்வரும் வசனங்களின் மூலம் சபை அழைக்கப்படுவதானது:

**புதிய மனிதன்:** எபேசியர் 2:14-15

**கிறிஸ்துவின் சரீரம்:** எபேசியர் 1:21-23; 5:30; 1கொரிந்தியர் 12:27

**தேவனுடைய ஆலயம்:** எபேசியர் 2:21-22; 1 கொரிந்தியர் 3:9,16; 1 தீமோத்தேயு 3:15; 1பேதுரு 5

**இராஜரீக ஆசாரியக்கூட்டம்:** 1பேதுரு 2:5,9; வெளிப்படுத்தல் 1:6; 5:10

**கிறிஸ்துவினுடைய மணவாட்டி:** 2 கொரிந்தியர் 11:2

**தேவனுடைய வீடு:** எபேசியர் 2:19

**தேவனுடைய மந்தை:** யோவான் 10:1-29; 1பேதுரு 5:3-4; எபிரேயர் 13:20; அப்போஸ்தலர் 20:28

**தேவனுடை சபை:** அப்போஸ்தலர் 20:28; 1கொரிந்தியர் 1:2; 10:32; 11:22; 15:9; 1 தீமோத்தேயு 3:5; 2 தெசலோனிக்கேயர் 2:14

**ஜீவனுடைய தேவனுடைய ஆலயம்:** 1 தீமோத்தேயு 3:15

**கிறிஸ்துவினுடைய சபை:** ரோமன் 16:16

**முதற்பேறானவர்களின் சர்வஅங்கமாகிய சபை:** எபிரேயர் 12:23

**பரிசுத்தவான்களின் சபை:** 1கொரிந்தியர் 14:33

## திருச்சபையின் நோக்கம்

ஆராதனை, ஐக்கியம், மனிதரின் தேவைகளை சந்தித்தல் என்பனவற்றுடன் பலவிதமான முக்கிய பணிகள் சபைக்கு இருக்கின்றது. சுவிசேஷத்தை விரிவாக பரப்புவதே சபையின் முக்கிய நோக்கமாகும். பெரிதான கட்டளையை நிறைவேற்றுவதே சபையின் முக்கிய நோக்கமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆதிச்சபை ஊழியர்களை சாத்தான் பலவிதங்களில் தாக்கினான். உபத்திரவங்களின் மூலமும், பிழையான உபதேசங்களின் மூலமும், பாவத்தின் மூலமும், சுவிசேஷம் பரவுவதை தந்திரமாக தடுக்க முயன்றான். இவைகள் இன்றும் காணப்படுகின்ற அவனது தந்திரமாகும். ஆனாலும் இதைத்தவிர இன்னுமொரு ஆபத்தும் சபையின் நோக்கத்தில் உண்டு. முன்னனுபவமற்ற அதன் தலைவர்கள் கிறிஸ்துவை மையப்படுத்துவதை தவறவிட்டு வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்தை வாசிக்கவும். அங்கே பலவிதமான நற்காரியங்கள் நடைபெற்றபோதும், தலைவர்கள் தேவனுடைய வசனத்தை பிரஸ்தாபிப்பதையும், ஜெபிப்பதையும் தவறவிடவில்லை.

மனிதரின் தேவைகள் அதிகமானதே. தேவையுள்ளவர்கள் எப்பொழுதும் எம்முடன் இருக்கிறார்கள் என இயேசுவும் கூறினார். புதிய ஏற்பாட்டு காலத்தில் மக்களின் தேவைகளையும், சமூகத்தின் காரியங்களிலும் சபை கரிசனையை கொண்டிருந்தது. ஆனாலும் சரீர, சமூக, பௌதீக தேவைகளை சந்திப்பது மட்டும் தான் சபையின் நோக்கமல்ல. சுவிசேஷத்தை பரப்புவதே அதன் முக்கிய கடமை. மற்றவர்களின் தேவைகளை சபை சந்திக்கலாம். ஆனாலும் வல்லமையுள்ள சுவிசேஷச் செய்தியை போன்று தாக்கத்துடன் அதை ஒப்பிட முடியாது.

ரோமர் 9,10ம் அதிகாரங்களில் சிறந்த உதாரணமுண்டு. அப்போஸ்தலராகிய பவுல் யூதர்களின் பொருளாதார தேவைகளை அறிந்திருந்தார். மக்கள் மேல் இருந்த ரோமருடைய அரசியல் மேலாதிக்கத்தினிமித்தம் பவுல் எச்சரிக்கையாயிருந்தார் ஆனாலும் அவருடைய முக்கியமான நோக்கமானது மக்களுடைய ஆவிக்குரிய நிலையை சரிப்படுத்துவதே. இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. (ரோமர் 10:1). சுவிசேஷத்தை அறிவிக்கின்ற வேலையை நாம் செய்கின்ற போது மனிதரை பராமரிக்க தேவன் உண்மை உள்ளவராக இருக்கின்றார்.

## அனுப்பும் பிரதிநிதித்துவ ஸ்தாபனம்

அனுப்புவது தேவனுடைய செயல் முறையாகும். பிதா எம்மை நேசித்ததினால், அவருடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார்.

> **தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**
>
> **உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)**

இயேசு சுவிசேஷத்தை எடுத்துக்கொண்டு செல்லும் படியாகவே எம்மை நியமித்துள்ளார். ஒவ்வொரு ஸ்தல சபையும் அனுப்பும் சபையாக மாற வேண்டும், மரிக்கும் உலகை நேசித்து செல்ல வேண்டும்.

அவர் சபையை அதனது குறிக்கோள்களை நிறைவேற்ற எழுப்பவில்லை. சபை சலுகைகளுக்காக அல்ல, ஒரு நோக்கத்திற்காக அழைக்கப்பட்டுள்ளது. நாம் ஒற்றுமையடையவே ஊழியம் செய்கின்றோம். நாம் தேவனாலும், இயேசுவினாலும் ஏற்படுத்தப்பட்ட மாதிரியையே பின்பற்ற வேண்டும். நாம் சுவிசேஷத்துடன் முன் செல்ல வேண்டும்.

ஒவ்வொரு சபையை சுற்றிலும், தேவனின்றியும், நம்பிக்கையின்றியும், திரளானவர்கள்

ஜீவிக்கின்றார்கள். இது எமக்கு முதலாவது முக்கிய சவாலாக காணப்படுகிறதாக பவுல் பிலிப்பு சபைக்கு கூறினார் (பிலிப்பியர் 2:12-16). இதே நிலையே கொரிந்து, எபேசு, தெசலோனிக்கேயா, கொலோசேய சபைகளுக்கு இருப்பதாக பேசப்பட்டது. இதே செய்தியே இன்றும் ஒலிக்கின்றது.

எபேசியரில் பவுல் சபையின் நோக்கத்தை சுருக்கமாக தருகின்றார்.

> **தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே,**
>
> **உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,**
>
> **இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர் 3:9-11)**

## வல்லமையால் பிறந்த திருச்சபை

இயேசு தன்னை பின்பற்றுவோருக்கு பெரிதான பொறுப்பை கொடுத்தார். அவர்கள் முழு உலகத்திற்கும் சுவிசேஷசெய்தியை கொண்டுசெல்ல வேண்டும். ஆனாலும் அவர் அவர்களுக்கு அதிகாரத்தை கொடுக்காமல் அவர்களுக்கு உத்தரவாதத்தை கொடுக்கவில்லை. இப்பொறுப்பை நிறைவேற்ற விசேஷவல்லமையை வாக்குப்பண்ணினார்.

இயேசு தன்னை பின்பற்றியோரிடம் பரிசுத்த ஆவியானவர் வருகின்ற போது வல்லமையை பெறுவீர்கள் என்றார்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

பதினொரு மனிதருக்கு செய்து முடிக்க முடியுமான பொறுப்பே கொடுக்கப்பட்டது. இவர்கள் ஒரு செயற்குழுவை அமைத்து, யார் எங்கே போவது என்று தீர்மானிக்கவில்லை. எவ்வளவு தூரப்பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என பார்த்து காணிக்கையையும் எடுக்கவில்லை. தேர்தல் வைத்து பெரும்பான்மையோரின் தீர்மானத்தையும் பின்பற்றவில்லை. இம்மனிதர்கள் மேலறைக்குச் சென்று ஒரு மனமாய் ஜெபித்தார்கள். இப்படியே திருச்சபை வல்லமையால் ஆரம்பமானது.

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் வருகையை குறித்து பதிவுசெய்யப்பட்டுள்ளது. விசேட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இப்பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் வழிநடத்துதல் கொடுக்கப்பட்டது. ஜாதிகளை சுவிசேஷம் ஆதாயப்படுத்துவதே அதன் நோக்கமாகும் (அப்போஸ்தலர் 1:8). அப்போஸ்தலர் 2ம் அதிகாரமும் சபை ஆரம்பத்தின் (தொடக்கம்) பதிவை கொண்டுள்ளது. இப்புதிய வெளிப்பாட்டுடன் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்ட போது, பேதுரு பிரசங்கிக்க சுவிசேஷத்திற்கு 3000 பேர் பிரதிபலிப்பை காண்பித்தனர். இவர்களே முதல் சபையை ஸ்தாபித்தனர். இவர்களது பெருக்கத்தையும், ஊழிய விரிவாக்கத்தையும் அப்போஸ்தலர் நடபடிக்கையிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

## திருச்சபை ஸ்தாபனம்

சபையின் இந்த ஊழியத்தை நிறைவேற்ற, தேவன் சில ஊழிய ஸ்தாபனம் என்னும் ஓர் அடிப்படை நிலையை உருவாக்கினார். சபையிலுள்ள சகல விசுவாசிகளும் ஆவிக்குரிய சகோதர, சகோதரிகள் என்ற உறவை கொண்டுள்ளனர். அவர்கள் “கிறிஸ்துவின் சரீரம்” என அழைக்கப்படுகின்றனர், தலை இயேசுவாக இருக்கின்றார். சபையானது மனித சரீரத்தைப் போன்று ஒன்றுக்கொன்று இசைவாக

வேலை செய்தல் வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் செயல்படவேண்டும்.

தேவன் சபையில் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் ஏற்படுத்தியுள்ளார். தேவன் ஆவியில் நிறைந்த விசுவாசிகளையும், ஆவிக்குரிய வரங்களையும் தனது ஊழியத்திற்கு பாவிக்கும்படி தேவன் கொடுத்துள்ளார்.

சபையின் இந்த அரிய வாய்ப்பை இந்த தலைமைத்துவத்தையும் ஆவிக்குரிய வரத்தையும் எவ்வாறு அதன் ஊழியத்தில் பாவிக்கலாம் என்பதைப்பற்றி இப்பாடத்தில் கற்போம். சர்வதேச அறுவடையின் நேர நிறுவனத்தில் இப்பாடம் “பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்” என்ற தலைப்பில் கற்றுக்கொடுக்கப்படும்.

## ஆதித்திருச்சபையின் சாட்சி

புதிய ஏற்பாட்டிலுள்ள அப்போஸ்தல நடபடிகள் புத்தகம், சபையின் ஆரம்பம் பற்றியும், பெரிதான கட்டளையை நிறைவேற்ற உலகெங்கும் சுவிசேஷத்தைப் பரப்புவது பற்றிய கதையையும் கொண்டுள்ளது. ஆயிரக்கணக்கானோர் சில வாரங்களுக்குள் இரட்சிக்கப்படுவதைக் குறித்த சம்பவங்கள் அப்போஸ்தலர் 2ம் ஆதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலங்கள் கடந்த போது எருசலேமில் விசுவாசிகள் ஏராளமாக பெருகியிருந்தனர்.

எருசலேமிலிருந்து விசுவாசிகள் சிதறியோடும்படிக்கு தேவன் உபத்திரவத்தை அனுமதித்தார். அவர்கள் யூதேயா சமாரியாவிற்கு சிதறி ஓடினார்கள்.

> **அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.**
>
> **சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 8:1,4)**

சமாரியாவிற்கு சென்று பிரசங்கித்த விசுவாசியின் பெயர் பிலிப்பு. இதுவே பல்லின கலாச்சாரத்தில் செய்யப்பட்ட முதல் ஊழியம் என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் பதிவு செய்துள்ளது. (அப்போஸ்தலர் 8). உலகிலுள்ள புறஜாதிகளின் அப்போஸ்தலனாக பவுல் எழுப்பப்படுவதை குறித்து அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் 9ம் அதிகாரத்தில் கூறப்படுகின்றது.

அப்போஸ்தலர் 10ல் கொர்நேலியு என்ற மனிதனின் மனந்திரும்புதலின் கதையுள்ளது. புறஜாதியாரிடத்திற்கு சுவிசேஷத்தை கொண்டு போகும்படியாக தரிசனத்தை தேவன் பேதுருவுக்கு கொடுத்தார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் முக்கியமானது என்பதை அப்போஸ்தலர் 11 கூறுகின்றது.

“பூமியின் கடைசி பரியந்தமும்” சுவிசேஷத்தை பரவச் செய்தலின் செயன் முறை அப்போஸ்தலர் 13ல் இருக்கின்றது. பவுலும் பர்னபாவும் பல்லின கலாச்சாரத்தாரிடையே சுவிசேஷம் அறிவிக்க அழைக்கப்பட்டனர். இவர்கள் இஸ்ரவேலை தவிர்ந்த மற்றவர்களிடத்திற்கு சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர்:

> **புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.**
>
> **கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று. (அப்போஸ்தலர் 13:48,49)**

இந்த முதலாவது தூதுப்பணி மகாநாடு அந்தியோகியாவிலுள்ள வீட்டு சபையில் நடைபெற்றதை அப்போஸ்தலர் 14:26-27ல் நீங்கள் வாசிக்கலாம், அவர்களது முதலாவது ஊழிய அறிக்கை எருசலேம் தலைமையகத்திற்கு கொடுக்கப்பட்டது அப்போஸ்தலர் 15:2-4.

உலக ஜாதிகளைக் குறித்த தேவனுடைய நோக்கத்தை பவுல் நிச்சயப்படுத்திக் கொண்டவராக பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும், மாகாணங்களுக்கும், கற்றவர்களுக்கும், கல்லாதவர்களுக்கும், அடிமைகளுக்கும், சுயாதீனருக்கும் சுவிசேஷத்தை கொண்டு சென்றார்.

> **நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். (அப்போஸ்தலர் 13:47)**

ஆதிசபை ஊழியத்தை நிறைவேற்றியபோது தேவனுக்காக "உலகத்தை கலக்குகிறவர்கள்" என்றழைக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 17:6) இயேசுவின் இரத்தத்திற்கூடாக சகல ஜனத்தாரையும் ஒன்றாக்குவதே தேவனுடைய நோக்கம்.

> **அவர் ஓரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்..... (அப்போஸ்தலர் 17:26)**
>
> **எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். (அப்போஸ்தலர் 10:35)**

## புதிய ஏற்பாட்டு பதிவுளை ஞாபகமூட்டல்

இப்பாடம் அப்போஸ்தல நடபடிக்கை புத்தகத்திலுள்ள உலகிலுள்ள சபையை மையப்படுத்தும். புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் யாவும், ஆதி சபையின் அங்கத்தவர்களால் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப்பட்டது. அதில் அடங்கியுள்ள பல வசனங்கள் உலகை குறித்த தேவனுடைய திட்டத்தை கொண்டுள்ளது.

இவ்வதிகாரத்திலுள்ள "மேலதிக படிப்பினைக்கு" என்ற பகுதி, உலகைக் குறித்தான புதிய ஏற்பாட்டின் சகல வசனங்களையும் படிக்க உங்களுக்கு சர்ந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தருகிறது. நீங்கள் கற்று முடித்தீர்களாயின், வேதாகமத்தில் உலக கண்ணோட்டத்தை பற்றிய பாடத்தை முடித்து விடுவீர்கள்.

"மேலதிக படிப்பினைக்கு" என்ற பகுதியை கற்கும் போது பழைய ஏற்பாட்டுக்கும் சம்பந்தமுள்ள முக்கிய குறிப்புகளைக் காண்பீர்கள். ரோமர் 4ம் அதிகாரத்தில் பவுல், ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை குறிப்பிடுகின்றார். வாக்குத்தத்தத்திற்கூடாக உலக ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுவதை இது அடக்கியுள்ளது. புதிய ஏற்பாட்டின் விசுவாசிகள் யாவரும் ஆபிரகாமின் சந்ததியார் என அழைக்கப்படுகின்றனர் (கலாத்தியர் 3). ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு நாமும் உரிமையாளர் என்பதே இதன் அர்த்தம். உலகிலுள்ள ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படுவதையும் இது உள்ளடக்கும்.

### உலகிலுள்ள சபை

புதிய ஏற்பாட்டை கற்கின்றபோது, சபைக்கு உலகோடுள்ள உறவை சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்:

1. சபையானது இயேசுகிறிஸ்துவை உலக இரட்சகர், முழு உலகையும் ஆளுகைசெய்கின்ற கர்த்தர், மனுக்குலத்தை நியாயந்தீர்க்க வருகின்ற நியாதிபதி என அறிவிக்க வேண்டும்.

2. சபையானது மக்களை, இயேசு கிறிஸ்துடன் சரியான உறவை பேணி, ஒருவருக்கொருவர் குற்றங்களை மன்னித்து புதிய ஜீவனை அவருக்குள் பெற்று அனுபவித்து வழிநடத்த வேண்டும்.

3. தண்ணீர் ஞானஸ்நானம், போதனை பிரசங்கம் என்பவற்றிற்கூடாக சபை ஸ்தாபிக்கப்பட்டு, அதன் விசுவாசிகளுக்கு உபதேசங்களையும் கொள்கைகளையும் நாளாந்த கிறிஸ்தவ ஜீவியத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

4. சபையானது அதனுடைய திறமையுள்ள விசுவாசிகள் ஒன்று திரட்டி, உலகில் அதன் பணியை நிறைவேற்ற வேண்டும்.

5. புதிய ஐக்கியங்கள் யாவும் பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிலுள்ளவற்றை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும். இப்படிமுறையினால் புதிதாக விசுவாசிகளை ஆதாயப்படுத்தவும், புதிய ஐக்கியங்களை தொடர்ந்து தேர்ச்சியாக உருவாக்கவும் முடியும்.

சபையானது "முழு உலகிற்கும்" சுவிசேஷத்துடன் செல்ல வேண்டும். அடுத்த அதிகாரம் சபையின் ஊழியத்திற்காக "காத்திருக்கும் உலகைப்" பற்றி விபரிக்கும்.

## சுய பரீட்சை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. “பெரிதான கட்டளை” என்பதின் அர்த்தத்தை விளக்குக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. “பெரிதான கட்டளை” என்பதற்கான ஆவிக்குரிய வசனங்களை எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. “சபை” என்பதற்கு வேதாகம ரீதியான வரைவிலக்கணத்தை எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. சபை எவ்வாறு ஆரம்பமாகியது?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. தூதுப்பணியை சபை நிறைவேற்றுவதற்கு, செயல்படும் ஆவிக்குரிய வல்லமை எது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7. சபைக்கான தேவனுடைய நிறுவன அமைப்பை சுருக்கமாக விபரிக்க.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

8. தேவனுடைய திட்டத்தில் சபைக்கான நோக்கத்தை சுருக்கமாக விபரிக்க.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

9. சுவிசேஷத்திற்கு அடிப்படை ஆதாரங்களை என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

# மேலதிக படிப்பிற்கு

1. தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டதின் பின்பாக சுவிசேஷமானது எவ்விதமாக பரவ ஆரம்பித்தது என்பதை தொடர்ந்து கற்க விரும்பினால் Ruth Tucker எழுதிய "From Jerusalem to Iryian Jaya" என்ற புத்தகத்தை வாசிக்கவும். இது Zondervan Publishing House, Grand Rapids, Michigan, U.S.A நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது.

   புதிய ஏற்பாட்டு காலத்தில் உலகம் மூன்று தசாப்தங்களாக பிரிக்கப்பட்டு ஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

   **முதலாவது சகாப்தம்:**

   உலகின் கரையோரப் பகுதிகளில் சுவிசேஷம் பரவியது. வில்லியம் கேரி என்ற மனிதரால் இத்தாக்கம் ஆரம்பமானது.

   **இரண்டாவது சகாப்தம்:**

   ஜெ. ஹட்சன் டெய்லர் என்பவரால் தீவுப்பகுதிகளில் சுவிசேஷம் பரப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

   **மூன்றாவது சகாப்தம்:**

   டபிள்யு. கெமிரோன் டௌன்சன்ட்டால் நிறுவப்பட்டு தற்கால காலம் வரை தொடருகின்றது. இதுவானது இன்னும் மீதமுள்ள சுவிசேஷம் அறிவிக்கப்படாத மக்களுக்கு சுவிசேஷம் சேரும்படியாக முற்படுகின்றது.

2. கடைசி அதிகாரத்திலே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புதிய ஏற்பாட்டு புத்தகத்திலுள்ள உலகம் குறித்ததான காரியங்களின் வேதபகுதிகளை படிப்பீர்கள். கீழே தரப்பட்டுள்ள வசனங்களானது உலகம் குறித்ததான புதிய ஏற்பாட்டிலுள்ள அப்போஸ்தலர் தொடக்கம் யுதா வரையாக வேத பகுதிகளாகும்.

அப்போஸ்தலர்: 1:8; 2:5; 3:25; 4:24,26; 10:28,35; 13:47; 14:15,16; 15:18; 17:6,24,26,31

ரோமர்: 1:5,8,20; 3:19; 4:13,17,18; 5:12,13; 9:17,28; 10:18; 11:12,15; 12:2; 16:24,26

1 கொரிந்தியர் 1:20,21,27,28; 2:6-8,12; 3:18,19; 8:4,5; 10:11,26,28; 11:32; 15:47-49

2 கொரிந்தியர்: 4:4; 5:19; 7:10

கலாத்தியர்: 1:4,16; 2:9; 3:8; 4:3

எபேசியர்: 1:4,10,21; 2:2,12; 3:9,21; 6:12

பிலிப்பியர்: 2:10,15; 3:19

கொலோசேயர்: 1:16,20; 2:8,20; 3:2,5

1 தீமோத்தேயு 1:15; 3:16; 6:7,17 2 தீமோத்தேயு; 1:9; 4:10

தீத்து: 1:2; 2:12

எபிரேயர்: 6:7; 9:26; 11:7; 12:25,26

யாக்கோபு: 2:5

1 பேதுரு: 1:20 2பேதுரு: 2:5; 3:6,7

1 யோவான்: 2:2,15-17; 3:1; 4:3,4,9,14,17; 5:4,5,19 2யோவான் 1:7

அதிகாரம் ஏழு

# காத்திருக்கும் உலகம்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்
- ☐ உலகத்திற்கு சுவிசேஷம் பரவுதல் தொடர்பான தற்போதைய நிலையினை சுருக்கமாக தரவும்.
- ☐ "மக்கள் குழுக்கள்" என்னும் பதத்தை வரையறுக்கவும
- ☐ "சந்திக்கப்படாக மக்கள் குழுக்கள்" என்னும் பதத்தை வரையறுக்கவும்.
- ☐ "சந்திக்கப்பட்ட மக்கள் குழுக்கள்" என்னும் பதத்தை வரையறுக்கவும்.
- ☐ ஐந்து வகையான சந்திக்கப்படாத மக்கள் குழுக்களை இணங்காணவும்.
- ☐ "மூடப்பட்ட தேசம்" என்பதின் அர்த்தத்தை விளக்கவும் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

> **அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்..... (மத்தேயு 9:37)**

## அறிமுகம்

இவ்வதிகாரத்தில் நீங்கள் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்திற்காக உலகம் காத்துக் கொண்டிருக்கும், தற்போதைய ஆவிக்குரிய உலகின் நிலையை பற்றி கற்கப் போகின்றீர்கள். அறுவடை மிகுதியாயுள்ள இடம் தொடர்பில், இயேசு உலகத்தின் ஆவிக்குரிய அவசியத்தை இயற்கையான உதாரணங்களின் மூலம் காண்பித்தது ஞாபகத்தில் உள்ளதா? இவ்வதிகாரத்தை பூரணமாய் கற்று முடிக்கின்றபோது இயேசு கீழ்கண்டவற்றை ஏன் கூறினார் என்பதை விளங்கிக் கொள்வீர்கள்.

> **அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்..... (மத்தேயு 9:37)**

## முழு உலகம்

இயேசு தன்னை பின்பற்றியோருக்கு கூறினார்:

> **புறப்பட்டுப்போய்.... சகல ஜாதிகளையும் சீஷராக்கி.... (மத்தேயு 28:19)**
> **நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.... (மாற்கு 16:15)**
> **அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது...... (லூக்கா 24:47)**
> **நீங்கள் பூமியின் கடைசிபரியந்தமும்........ எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்......... (அப்போஸ்தலர் 1:8)**

உலகம் எங்கும் செல்லுங்கள் என்பதின் அர்த்தம் என்ன? இப்பூமியில் ஒவ்வொரு தேசங்களிலும்

நிதானமான கிறிஸ்தவ சாட்சிக்காரர்கள் இருப்பதுடன் மிஷனரிமார்களும் ஒவ்வொரு ஜாதிக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனாலும், நாங்கள் முழு உலகத்திற்கும் ஒவ்வொரு மனுஷரண்டைக்கும் சென்றிருக்கின்றோமா?

## புவியியல் ரீதியாக

உலகத்தில் மில்லியன் கணக்கான கிராமங்கள் இன்னும் மிஷனரிமார்களின் வலுவை உணரவில்லை. இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இரட்சிப்பின் செய்தியை கேட்பதற்கும் இன்னும் தருணம் வாய்க்கவில்லை. அவர்கள் உலகத்தில் வாழும் ஒரு பகுதி மக்களாக இருக்கிறார்கள். புவியியல் ரீதியாக முழு உலகமும் சுவிஷேசத்தால் இன்னும் சந்திக்கப்படவில்லை.

## மொழி ரீதியாக

மொழிரீதியாக சுவிசேஷம் பரப்பப்படுவது என்பது மொழிபெயர்க்கப்பட்ட செய்தியை வெவ்வேறான பாஷைகளில் தருவதேயாகும். வேதாகமம் முழு மனுதவர்க்கத்திற்கும் கொடுக்கும் தேவ செய்தி. எந்தக் கலாச்சாரத்திலும் மிகப் பலன்தரக்கூடிய தொடர்பாடல் பொதுவாக பேசப்படும் அவர்கள் சொந்த மொழியேயாகும்

இன்றைய உலகத்தில் 5,445 பாஷைகள் பேசப்படுகின்றன. இம்முழு தொகையிலும் ஏறக்குறைய 3,000 பாஷைகளில் வேதாகமம் மொழிபெயர்க்க வேண்டியதாக இருக்கின்றது. தேவ செய்தியை எழுதப்பட்ட வார்த்தைகளில் வாசிப்பதற்கு மக்களுக்கு தருணம் கிடைக்கவில்லை. வெவ்வேறு மொழிகள் என்ற ரீதியிலும் நாம் இன்னும் உலகமக்களை சந்திக்கவில்லை .

## ஜனத்தொகை

நாம் இன்றும் முழு உலகத்தையும் புவியியல் ரீதியாகவே, மொழிகள் ரீதியாகவோ சந்திக்காதது மட்டுமல்ல, இன்று முழு ஜனத்தொகையையும் சந்திக்காமலிருக்கின்றோம்.

இப்பூமியில் நமது கர்த்தரின் சரீரபிரசன்னம் இருக்கும் பொழுது உலகத்தின் ஜனத்தொகை 250 மில்லியனாக மதிப்பிடப்பட்டது. 1600ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை இருமடங்கானது. ஆதாமின் காலமுதல் 1500 ஆண்டு இயேசுவின் பிறப்பிற்கு பின் ஜனத்தொகை 500 மில்லியனுக்கு அதிகரித்தது. 1500 முதல் 1850 வரை ஜனத்தொகையானது ஒரு பில்லியனாக அதிகரித்தது. 1850ல் மீண்டும் ஜனத்தொகை இரட்டிப்பானது. இன்று இப்பூமியில் பில்லியன் கணக்கான மக்கள் வாழ்கின்றார்கள்.

மாநகரங்களில் அநேக தேவாலயங்கள் இருந்தாலும் இன்னும் இயேசுவை குறித்து அறியாத மக்கள் அநேகர் இருக்கின்றார்கள். இன்று மில்லியன் கணக்கான மக்கள் சுவிசேஷத்தை அறியாமலிருக்கிறபடியால் ஜனத்தொகை ரீதியிலும் இன்னும் உலகமக்களை நாம் சுவிஷேசத்தால் சந்தியாமலிருக்கின்றோம்.

## மக்கள் குழுக்கள்

இவ்வுலகத்தை நாம் ஜாதிகள் ரீதியில் பார்க்கும் பொழுது, முழு உலகத்தையும் நாம் சந்தித்துள்ளோம் என கூற முடியும், ஏனெனில் ஒவ்வொரு ஜாதியிலும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் மக்கள் இருக்கின்றார்கள். இப்பூமியில் ஒவ்வொரு தேசங்களிலும் புதிக விசுவாசிகளும் நிர்வகிக்கப்பட்ட சபைகளும் காணப்படுகின்றன. ஆனாலும் இதுவானது வெளிப்படுத்தல் 5:19ல் கூறப்படுகின்றது போல “சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரலும், ஜனங்களிலும், ஜாதிகளிலும்” போல அல்ல.

முழு உலகமும் என்று இயேசு கூறின பொழுது, அவர் ஜாதிகள் என்ற ரீதியில் குறிப்பிடவில்லை. இயேசு உலகம் என்று பாவித்த வார்த்தையானது கிரேக்க மொழியில் “எத்தேன” எனப்படுகின்றது. இந்த வார்த்தையின் அர்த்தமானது “இனம்” அல்லது :மக்களை கொண்ட குழு: என்று அர்த்தமாம். இயேசு உலகம் என்று கூறும் பொழுது “சகல மக்கள” அல்லது “மக்கள் குழுக்கள்” என்று குறிப்பிடுகின்றார்.

சுவிசேஷத்தை பரப்புவதில் உலகப் பார்வையில், மக்கள் குழுவாக கணிக்கும் பொழுது தற்காலிக நிலவரத்தை அறிய இலகுவாகக் காணப்படுகின்றது. மக்கள் குழுக்கள் என்பதை இவ்விதமாக விளக்கலாம்........

> “ஒரு குறிப்பிடத்தக்க தனிப்பட்ட ரீதியிலே ஒருவரோடு ஒருவர் பொது பிணைப்புடன் காணும் பெரிய குழு. இவ்விதமான பிணைப்பானது மொழிகளையும், கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும், புவியியல் ரீதியான ஸ்தாபனங்களும் உள்ளடக்கியதாக காணப்படும்.”

“மக்கள் குழு” என்பது மிகப்பெரிதான குழுவானாலும், இங்கு சுவிசேஷத்தை பரப்பும்போது தேவனை அறிந்து கொள்ளுதலிலும், ஏற்றுக் கொள்ளுதலிலும் பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிவரும். ஏனெனில் “மக்கள் குழுக்கள்” பொது மொழி பேசுவதாலும், பொது கலாச்சாரமும் காணப்படுவதாலும், சுவிசேஷத்தை எடுத்துச்செல்வதற்குள்ள கலாச்சார தடைகள் யாவும் நீக்கப்பட்டுள்ளது.

உலகத்தில் 19,000 வித்தியாசமான மக்களைக் கொண்ட குழுக்கள் இருப்பதாக கணக்கெடுப்பின்படி அடையாளம் கண்டிருக்கிறார்கள். சில குழுக்கள் மிக சிறிய தொகையான 3,000 அங்கத்தவர்களையும், இன்னும் சில பெரிய தொகையான 30 மில்லியன் அங்கத்தவர்களையும் கொண்டதாகவும் உள்ளது. உலகத்தின் ஒவ்வொரு கண்டங்களும் வெவ்வேறு ஜாதிகளாக மட்டுமல்ல, வெவ்வேறு மக்கள் குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஆபிரிக்கா கண்டத்தில் 1,000 மொழிகளையும், நூற்றுக்கணக்கான மக்களையும் கொண்ட குழுக்கள் காணப்படுகின்றது.

ஒவ்வொரு தேசத்திலும் அநேக மக்களைக் கொண்ட குழுக்களட காணப்படுகின்றன. நைஜீரியா போன்ற ஒரு தேசம் 500 கோத்திர குழுக்களை கொண்டுள்ளது, என்று உணரும் பொழுது மனுஷவித்தியாசங்கள் தேசத்தின் பிரிவுகளைவிட விசாலமானது என்று காண முடிகின்றது.

ஆபிரிக்காவிலுள்ள கென்யா தேசத்தில், சோமாலி மக்களை தனிப்பட்ட ரீதியில் மக்கள் குழு என உதாரணமாக கொள்ளலாம். அவர்களுக்கு பொதுவாக பாவிக்கப்படும் மொழி, சரித்திரம், பரம்பரை பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள் உண்டு. ஓர் இடத்தில் ஸ்திரமாக வாழாத இந்த மக்கள், தற்போது இஸ்லாம் சமயத்தில் உறுதியானவர்களாகிய,தொலைதூரத்திலுள்ள வட மாகாணங்களில் வாழுகின்றார்கள். அவர்கள் கென்யாவில் ஒரு குழுவில் நூறு மக்கள் வீதம் கொண்ட குழுவாக வாழுகின்றார்கள்.

இன்னும் நாங்கள் நன்றாக அறிந்த இரு குறிப்புக்கள் உண்டு:

**சுவிசேஷம் சந்திக்கப்படாத மக்கள் குழுவினரிடையே** பூர்வீக குடிமக்களில் இதுகாலவரையும் விசுவாசிகள் இல்லாதிருக்கின்றமையால், இவர்கள் சுவிஷேசத்தால் சந்திப்பட வெளியாரின் தொடர்பும் உதவியும் அவசியமாக இருக்கின்றது.

**சந்திக்கப்பட்ட மக்கள் குழுவினரிடையே** பல விசுவாசிகள் இருக்கின்றமையால், இவர்கள் தமது சொந்த மக்களிடையே வெளியாரின் தலையீடு இன்றி சுவிசேஷத்தை அறிவிக்க முடியும்.

## சந்திக்கப்படாத மக்கள் இனங்கள்

தற்போது சந்திக்கப்படாத மக்கள் குழுக்கள் 17,000க்கு மேலுண்டு, இவர்களுக்கு சாட்சியிட சுவிசேஷசபைகளுமில்லை. இவ்வினக்குழுவினரிடையே மில்லியன் கணக்கான மக்கள் இருக்கின்றனர். இச்சந்திக்கப்படாத மக்கள் குழுவினரை ஐந்து பிரதான பிரிவுகளாக பிரிக்கலாம்.

### ஆதிவாசி (பூர்வீக குடிகள்) மக்கள்:

பல்வேறுப்பட்ட கலாச்சாரத்தையும், மொழிகளையும் கொண்ட ஆயிரக்கணக்கான குழுக்கள் இருக்கின்றார்கள். அநேகமான இவர்களை "அனிமிஸ்ட்" என்று அழைக்கப்படுகின்றனர், இவர்கள் மெய் தேவனை விட்டுவிட்டு அநேக ஆவிகளை வழிபடுகின்றனர் இந்த ஆவிகளோடு பிசாசுகளையும், பொய்யான தேவர்களையும், மரத்தினாலும், உலோகங்களினாலும் வேறுபொருட்களினாலும் செய்யப்பட்ட சொரூபங்களையும் வணங்குகின்றனர்.

### இஸ்லாமியர்:

முஸ்லிம் மக்கள் குரானின் போதனையையும் இஸ்லாம் மதத்தையும் பின்பற்றுகின்றனர். இவர்கள் மத்திய ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் அதிகமாக ஜீவிக்கின்றனர். இஸ்லாமிய உலகில் மில்லியன் கணக்கானோர், பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

#### இந்துக்கள்:

இந்துக்கள் அதிகளவில் இந்தியாவிலேயே ஜீவிக்கின்றனர், எனினும் உலகம் முழுவதிலும் இந்துக்கள் சிதறடிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த இந்து மக்கள் அவர்களின் கோவில்களினாலும், சடங்காச்சாரங்களினாலும், விக்கிரக ஆராதனையினாலும், பல பொய்யான தேவர்களினாலும் ஆயிரக்கணக்கான ஆவிக்குரிய அடிமைத்தனத்தினாலும் கட்டப்பட்டு இருக்கின்றனர்.

### சீனர்கள்:

சந்திக்கப்படாத மக்கள் குழுவினரிடையே மிகப் பெரிய ஜனத்தொகையை கொண்ட பிரிவினராக இவர்கள் இருக்கின்றார்கள். உலக முழுவதிலும் சீனமக்கள் சிதறடிக்கப்பட்டவர்களாக இருப்பதுடன், சந்திக்கப்படாத பல மில்லியன் கணக்கான குழுக்கள் சீனாவில் வாழ்கின்றனர்.

### பௌத்தர்கள்:

பௌத்த மக்களே சந்திக்கப்படாத பிரதான மக்கள் குழுவினரிடையே ஐந்தாவது இடத்தை பிடிக்கின்றனர். கிழக்காசியாவில் அதிகளவில் சிதறடிக்கப்பட்டு வாழும் இவர்களில் பல வித்தியாசமான குழுவினர் இருக்கின்றனர். எனினும் விக்கிரக ஆராதனையிலும், ஆவிகள் வணக்கம், பேய் வணக்கத்திலும் ஒன்றாய் இணைக்கப்பட்டு இருக்கின்றனர்.

## வேலையாட்கள் எங்கே?

ஏன் இந்த மக்கள் இன்னும் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாதவர்களாக இருக்கின்றார்கள்? வேலையாட்கள் எங்கே? அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் சகல வசதிகளுடனும், தேவையான சகலவற்றையும் பெற்றுக்கொண்டு நிதி உதவியுடன் பெரிய சபைகளில் வேலை செய்ய விரும்புகின்றார்கள். இன்னும் சிலர் தங்கள் வீட்டையும், குடும்பத்தாரையும் விட்டுவிட்டு, வேறு கலாச்சாரத்துடன் கஷ்டப்பட்டு வேலை செய்ய விரும்புவதில்லை. இன்னும் சிலர் வேதாகம உலக தரிசனத்தை பெறாமல் இருக்கின்றார்கள்.

தேவன் உலகத்தை நோக்கும் போது, ஒரு பெரும் பிளவைக் காண்கின்றார். அந்த பிளவானது

பாவியான மனிதனுக்கும் நீதியுள்ள தேவனுக்கும் இடையிலுள்ள பிளவாக உள்ளது. ஆனாலும் தேவன் இன்னுமொரு பிளவையும் காண்கின்றார். அது உலகத்தின் அறுவடைக்கான பிளவாக உள்ளது. அறுவடை மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்.
மில்லியன் கணக்கான மக்கள் இப்பிளவில் இருக்கின்றார்கள். சுவிசேஷசெய்திக்காகவும் தேவனுக்காகவும் அறுவடை செய்யப்பட அநேகர் காத்துக்கிடக்கின்றனர். தேவன் கூறுகின்றதாவது:

> **நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். (எசேக்கியேல் 22:30)**

நீங்கள் வேதாகமத்தின் உலக பார்வையை முற்றாக அறிந்திருந்தால், பிளவில் நிற்கும்படியாகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை உணருவீர்கள். இந்த அழைப்பு சகல உண்மையான விசுவாசிகளுக்கும் உரியதாகும்.

## கதவடைக்கப்பட்டுள்ள தேசங்கள்

அண்மைக்காலங்களில் 60மூ நாடுகளில் சுவிசேஷம் பரவுவதற்கு தடையாக உள்ளதற்கான காரணம் பரம்பரை பழக்க வழக்கங்கள் என்று நாம் கண்டறிந்துள்ளோம். ஒரு தேசம் சுவிசேஷத்திற்கு அடைக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் போது, வெளிநாட்டு தூதுப்பணியாளர்கள் அங்கு செல்ல முடியாதுள்ளனர் என்பதே இதன் அர்த்தம், சில சமயங்களில் அவர்கள் மற்ற சமய மக்களையும், அவர்களின் சட்டங்களையும் தாண்டி செல்ல வேண்டும். சில நாடுகளில் தம் மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வது தடைசெய்யப்பட்டு, அரச சட்டமாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

ஏன் சில நாடுகள் சுவிசேஷத்திற்காக அதன் கதவை மூடி வைத்துள்ளது? ஏனென்றால்
பிசாசானவன் தேசத்து தலைவர்களை

> -தேவன் இருக்கிறார் என்பதை மறுதலித்துவிட்டு, தேவன் இல்லை என்ற நாஸ்தீக தத்துவக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வைத்துள்ளான். இந்நாடுகளின் தலைவர்கள் ஒருபோதும் ஜீவனுள்ள தேவனைக்குறித்து மக்கள் கற்றுக்கொள்ள இடம் கொடுக்க மாட்டார்கள்.
>
> -பலமுள்ள தேசீய சமயத்தை ஸ்தாபிக்க வைக்கின்றான். இதனால் இத்தேசத்தின் அரசாங்கத் தலைவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மக்கள் மாறுவதை அனுமதிப்பதில்லை. அவர்கள் தேசிய சமயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக சுவிசேஷம் அறிவிப்பதையும், தூதுப்பணியாளர்கள் அங்குள்ள ஜாதிகளிடத்தில் பிரவேசிப்பதையும் சட்டம் இயற்றி தடைசெய்துள்ளார்கள்.
>
> -அரசியல் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு சுவிசேஷத்தைப் பரப்புகின்ற மற்ற ஜாதிகளிடத்திலிருந்து இவர்களை தனிமைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். பிசாசானவன் அவர்களின் எல்லைகளுக்குள் தூதுப்பணியாளர்கள் பிரவேசிக்க முடியாதபடிக்கும் வைத்திருக்கின்றான்.

## திறந்த வாசல்கள்

60மூ மான நாடுகளில் சுவிசேஷத்தின் பாரம்பரியத்தை யோசியாமல் கதவை அடைத்தே வைத்துள்ளன, ஆனால் உண்மையில் சகல கதவுகளும் அடைக்கப்பட்டிருப்பதாக இல்லை. இயேசு சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு வரும் என அறிந்திருந்தார். அவர் சொன்னார், “ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்” (மத்தேயு 10:23)

அடைக்கப்பட்ட கதவுகளைக் குறித்து அநேக விசுவாசிகள் பிரதிநிதிகளாயிருக்க தவறிவிடுகின்றனர். ஒரு கதவு அடைக்கப்பட்டால் இன்னுமொரு கதவு திறந்திருக்கும் என்று இயேசு குறிப்பிட்டுள்ளார். சில வேளைகளில் சில கதவுகளை அடைத்து, தேவன் ஆவிக்குரிய அறுவடை மிகுந்த பகுதிகளுக்கு வழிநடத்த அதைப் பாவிக்கின்றார். இந்நிலை பவுலுக்கும் அவனது சுவிசேஷகுழுவுக்கும் ஏற்பட்டது:

> **அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,**
> **மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள், ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.**
> **அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள். (அப்போஸ்தலர் 16:6-8)**

துரோவாவில் இருக்கின்றபோது பவுல் தேவனுக்காக அறுவடைக்கு ஆயத்தமாக இருந்த மக்கதோனியாவுக்கு செல்லும்படியான அழைப்பை பெற்றார். கடைசியாக பவுல் ஆசியாவிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டார். கடைசியாக பவுல் ஆசியாவிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டார். சிலவேளைகளில் அறுப்புக்கு விளைச்சல் விளைந்து முடியாதபடியால் கதவுகள் மூடப்பட்டிருக்கலாம். இதனால் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்தலை பின்பற்ற வேண்டும்.

நாஸ்திகனாலும், பிற சமயங்களினாலும், அரசியல் தத்துவ ஞானத்தினாலும் மூடப்பட்டுள்ள ஜாதிகளைக் குறித்து என்ன கூறலாம்? சபையானது அதிவேகமாக மூடப்பட்டுள்ள கதவுகளை தோல்வியடையச் செய்ய வேண்டும். இவ்விதமாக தேசங்களுக்கு செல்ல பாரம்பரிய முறையான சுவிசேஷகரை அல்லது தூதுப்பணியாளரை அனுப்புவது சாத்தியமானதல்ல என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், தேவன் சுவிசேஷத்தை கொண்டு செல்ல வேறெதாவது வழியை வெளிப்படுத்துவார்.

சில நாடுகளுக்கு ஊழியக்காரர்கள் அல்லது தூதுப்பணியாளர் செல்ல முடியாது ஆனால் கல்விமான்களாக, நிர்வாகிகளாக, தொழிலாளர்களாக விசுவாசிகள் அங்கு செல்ல முடியும். இவர்கள் அங்குள்ள மக்கள் மத்தியில் ஏதாவது தொழில்களைச் செய்து வாழலாம், ஆனால் அவர்களுடைய முக்கிய நோக்கம் சுவிசேஷத்தை அறிவிப்பதாக இருக்க வேண்டும்.

இக்கொள்கைக்கு வேதாகமம் பல உதாரணங்களை தருகின்றது. பவுல் கூடாரப் தொழில் செய்து பல தேசங்களில் சுவிசேஷப்பணி நடைபெற உதவினார். யோசேப்பும், தானியேலும் கூட முக்கிய உலக பதவிகளில் இருந்து கொண்டு, ஜாதிகளுக்கு தேவனைக்குறித்து போதித்தார்கள்.

சில நாடுகளுக்குள் உட்பிரவேசிக்க வழியே இல்லை என்பதுபோல காணப்பட்டாலும், சுவிசேஷம் செல்ல முடியாதபடி அவைகள் அடைக்கப்பட்டதாயும் இல்லை. எந்தவொரு நாடும் பரிசுத்தாவியின் வல்லமையின் ஜெபத்திற்கூடாகவும் மூடப்பட்டதாகவும் இல்லை. ஜெபத்தாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் சகல நாடுகளையும் ஊடுருவிச் செல்ல முடியும், சுவிசேஷசம் பரவுவதை மூடப்பட்ட எல்லைகளாலும், சட்டங்களாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

## கடமையை எவ்வாறு நிறைவேற்றுவது?

சுவிசேஷசெய்திக்காக உலகம் காத்திருப்பதை நாம் கண்ணோக்கினால், நாம் எண்ணற்ற காரியங்களுக்கு முகங்கொடுத்தாலும் அதை அடக்கி வைத்துக்கொண்டிருக்க மாட்டோம்.

-மில்லியன் கணக்கானோர் இன்னும் இயேசு இன்றி இருக்கின்றார்கள்.
-நூற்றுக்கணக்கான பாஷைகளில் இன்னும் தேவனுடைய வசனமில்லை.
-நூற்றுக்கணக்கான மக்கள் குழுக்களிடையே ஒரு சுவிசேஷசாட்சியும் இல்லை.

டோக்கியோ, சா பவுலோ, கல்கத்தா, ஹொங்கொங் போன்ற நாடுகளில் கடற்கரை மணலைப் போன்று இருக்கின்ற திரளான ஜனங்களை நாம் கண்டால் அடங்கியிருக்க முடியாது. கணக்கிடப்படாத ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொரு தனிப்பட்டவர்களும் சுவிசேஷசெய்தியை கேட்டும் விளங்கிக் கொண்டு பிரதிபலனை காண்பிக்கும் சர்ந்தர்ப்பமும் கிடைக்க வேண்டும்.
நாம் உலகத்தை பார்த்தால், ஏராளமான மக்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்படவில்லை, எமது வாஞ்சை அப்போஸ்தல பவுலுக்கு இருந்தது போல இருக்க வேண்டும்:

> **மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே,**
>
> **நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். (ரோமர் 15:20-21)**

இச்சவால் ஒவ்வொரு விசுவாசியும் உலக கிறிஸ்தவர்களாக மாறும்போதே சந்திக்கப்படும். அடுத்து அதிகாரத்தில் இதைக்குறித்து அதிகமாக கற்பீர்கள்.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. புவியியல் ரீதியாக, பாஷைரீதியாக, ஜனத்தொகையை சந்திக்கப்படும் ரீதியாக உலகத்திற்கு சுவிசேஷம் பரவுதலைக் குறித்த தற்போதைய நிலையை சுருக்கமாக தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. “மக்கள் குழுக்கள்” என்பதை வரையறுக்க.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. “சந்திக்கப்படாத மக்கள் குழுக்கள்” என்பதை வரையறுக்க.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. “சந்திக்கப்பட்ட மக்கள் குழுக்கள்” என்பதை வரையறுக்க.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. சந்திக்கப்படாத மக்கள் குழுவினரின் ஐந்து பிரதான பிரிவுகளை தருக.

---------------------------------------- ---------------------------------------- ----------------------------------------

---------------------------------------- ----------------------------------------

7. “கதவடைக்கப்பட்டுள்ள தேசங்கள்” என்பதின் அர்த்தத்தை விபரிக்க.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. சரியா, பிழையா? உண்மையிலேயே, கதவடைக்கப்பட்ட தேசங்கள் என்று இல்லை.

----------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

# மேலதிக படிப்பிற்கு

1. உலகில் சந்திக்கப்படாத மக்களை காட்டும் அட்டவணையை தயாரிக்க. இதை பெறக்கூடிய இடம் U.S. Center for the World Mission, 1605 Elizabeth Street, Pasadena, California, 91104, U.S.A.

2. உலக நாடுகளில் சுவிசேஷம் சென்றடைந்த தற்போதைய நிலையை காட்டும் முழுமையான தகவல், உலக கிறிஸ்தவ எண்ணக்கோட்டின் The World Christian Encyclopedia by David B. Barrett.

3. “சந்திக்கப்படாத மக்கள் தளம்”, ஊழிய மேல்நிலை ஆராய்ச்சி மையமும் தகவல் தொடர்புநிலையத்தினால் வெளியிடப்பட்டது. 919 West Huntington Drive, Monrovia, California, 91016 U.S.A.

   இத்தளம் சந்திக்கப்படாத மக்களை சந்திக்க ஆர்வமுள்ளவர்களுக்காக சேவை புரிகின்றது. இரு காரியங்களை இது நடத்துகின்றது. சந்திக்கப்படாத மக்களின் தகவல்களை பெற்றுக்கொண்டு அதை யாருக்கெல்லாம் சுவிசேஷத்தைக் கொண்டு சந்திக்கப்படாத மக்களை சந்திக்க விருப்பம் இருக்கின்றதோ அவர்களுக்கு பகிர்கின்றது.

4. நீங்கள் சந்திக்கப்படாத முக்கிய குழுக்களின் விபரங்களை அறிவதற்கு விரும்பினால் (ஆதிவாசிகள், முஸ்லிம், இந்து, பௌத்தம், சீனம்), கீழுள்ள முகவரிக்கு எழுதலாம். U.S. Center for World Missions, 1605 Elizabeth St., Pasadena, California 91104, U.S.A. ஊழிய நிறுவனங்கள் கீழுள்ள முகவரியில் அமைந்துள்ளதுடன் இவ்வூழியத்தில் விசேஷித்த விதமாய் செய்கின்றது. அவர்கள் இக்குழுக்களை குறித்த வரைபடங்கள் தகவல்களை தருவர்.

5. நெசியனல் ஜாக்ரபிக்ஸ் சஞ்சிகையானது வேறுப்பட்ட மக்களின் தகவல் வரைபடங்களை வெளியிடுகின்றது. அவர்களின் வரைபடங்களை பெற்றுக்கொள்ள எழுதவும். Geographic Society, Washington, D.C. 20036, U.S.A.

6. கீழ் வருகின்ற கட்டுரைகள் உலகளாவிய மக்கள் கூட்டினைவை பற்றிய தகவல்களை தருகின்றது.

## ஆபிரிக்கா

52 நாடுகள்

ஆபிரிக்காவில் சபையானது சுயமாகவுள்ளதோடு வளர்ச்சியானது ஆபிரிக்க கண்டத்தின் மையத்தில் நிலைபெயருதலுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளாக்குகிறது. இவ்வளர்ச்சி தேசத்தின் தென்பகுதி சகாரா பாலைவனத்தில் அதிகளவில் காணக்கூடியதாக உள்ளது. இக்கண்டத்தின் வடபகுதியில் மூன்றில் ஒரு வீதமான மக்கள் பின்பற்றும் மதமாக இஸ்லாம் உள்ளது. கிறிஸ்தவம் சிறியளவில் காணப்படுவதோடு சபைகளும் சிறியதாக உள்ளது. சகாராவின் தென்பகுதியில், கிறிஸ்தவர்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. 2000 ஆண்டு கணக்கெடுப்பிற்கமைய, ஆபிரிக்காவிலேயே உலகில் அதிகமான கிறிஸ்தவர்கள் உள்ளதாக காணப்பட்டது! புதிய ஆவிக்குரிய வாழ்வும் இச்சபைகளில்

ஊன்றுவதற்கு கடந்தவருடங்களில் நடைபெற்ற வெளியரங்க சுவிசேஷகூட்டங்களே காரணமாக அமைகின்றன. பூரணமடைந்த ஆபிரிக்க சபைகள் தற்போது மிஷனரிகளையும் அனுப்புகின்றது. சபையும் ஊழியங்களும் உள்ள ஆபிரிக்கா, பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்றது. அதேயளவிற்கு சாதகங்களும் உண்டு. சபை குழுக்கள் சிலவும் வெளிநாட்டு ஊழியங்களும் சில நாடுகளில் செல்ல தடையுள்ளது எனினும் தனிப்பட்ட ஊழியர்கள் மற்றும் சபையினர் செயற்பட்டு வருகின்றனர். காரணங்கள் பலவிருப்பினும், அரசியல் தலையீடு, கட்டுப்பாடுகள் அதிகளவில் உள்ளது.

## ஆசியா

28 நாடுகள்

இது ஒரு பெரிய, ஜனத்தொகை கூடிய கண்டமாகும், கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள முழு ஜனத்தொகையிலும் 2 அல்லது 3 வீதத்தினரே கிறிஸ்தவர்களாக உள்ளனர். சில ஆசிய நாடுகளில், கிறிஸ்தவர்கள் அதிக செல்வாக்கை அவர்களுடைய உயர் கல்வியினாலும், சமுதாயம் உயர்நிலையினாலும் பெற்றுள்ளனர்.

சில இடங்களில் சில ஜாதிகளில் அதிகளவானவர்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றார்கள் என்பது உண்மையே. உதாரணமாக இந்தியாவில் கேரளா, மேகலாயா, மனிப்பூர், மிசோரம், நாகப்பட்டிணம் என்பனவும், மலேசியாவின் சாபா மாகாணத்தைத்தையும் குறிப்பிடலாம். ஆயினும் முழு தொகையுமான பகுதி குறைவாகும் ஆசியாவின் சில இடங்களில் கிறிஸ்தவம் நடிப்புக்கு ஒப்பானதாய் உள்ளது. கோத்திரக்குடிகளும் அகதிகளும் நற்செய்திக்கு இணங்கத்தக்கவர்களாக உள்ளனர். இவர்கள் இந்தியா, தாய்வான், இந்தோனேசியா மற்றும் பர்மா நாட்டவர்கள்.

கொரியாவில் கிறிஸ்தவர்களின் வளர்ச்சியானது கொரிய மக்களது மக்கள் தொகையின் வளர்ச்சியிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகமானது. “ஆசியாவீக்” என்ற பத்திரிகையின் கணக்கு அறிக்கையானது உலகிலேயே தென்கொரியாவிலேயே கிறிஸ்தவர்களது வளர்ச்சி வீதம் அதிகமானது என்கின்றது. 1960களில் இந்தோனேசியாவில் 1000கனக்கான மக்கள் கிறிஸ்தவர்களானார்கள். கம்போடியாவும், பௌத்தர்களாலானது, 1971 முதல் கம்யூனிச ஆட்சி 1975ல் வரும் வரைக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் கிறிஸ்தவராவதற்கான வாஞ்சையுள்ளவர்களாயிருந்தனர். சில கிறிஸ்தவர்கள் தற்போது அங்கு வாழ்கின்றனர். சபைகளிலிருந்து கிடைக்கும் அறிக்கையானது வளர்ச்சி வீதம் தாய்லாந்து, சிங்கப்பூர், பர்மா நாடுகளில் சமூக, கலாச்சார, பொருளாதார தடைகளுக்கு மேற்பட்டதாய் இருக்கிறது.

ஆயுததாரி முஸ்லிம்கள் மலாய் மக்களிடமும் சூடான் மக்களிடமும் நற்செய்தி செல்வதை தடுப்பதற்கு கடுமையான முயற்சி செய்கின்றனர். பௌத்தர்களும், இந்துக்களும் , கிறிஸ்தவ செயற்பாடுகளையும், முன்னேற்றத்தையும் தடுப்பவர்களாக உள்ளனர். தற்போது நடைபெறும் உபத்திரவங்கள் குறித்து அறியக்கூடும். சில நாடுகளிலுள்ள அரச அதிகாரிகள் மிஷனரிகளை தடைசெய்வதில் அல்லது சபை காரியங்களை தடுப்பதில் அல்லது முற்றும் நீக்கிவிடும் காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

பிரேசில் நாட்டை தவிர, அநேக கிறிஸ்தவ மிஷனரிகள் ஜப்பானிலேயே ஏனைய உலக நாடுகளைப் பார்க்கிலும் அதிகமானவர்கள் ஆகும். அநேக கிறிஸ்தவர்கள் ஜப்பான் தேசத்திலேயே அடுத்த பாரிய கிறிஸ்தவ வளர்ச்சி நடைமுறைப்படுத்தப்படும என்பதாக நம்புகின்றார்கள்.

## ஐரோப்பாவும் முன்னைய சோவியத் யூனியனும்

27 நாடுகள் மற்றும் 1நாட்டின் 15 ஜனநாயக அரசு

சுயாதீபத்தியம், மானிடதன்மை, நாஸ்தீகம், மற்றும் சமயக்கொள்கைகளுக்கு மாறுபட்ட எண்ணங்கள் பல ஐரோப்பிய நாடுகளில் காணக்கிடைக்கின்றது. நற்செய்தி செயற்பாடுகள் ஐரோப்பாவில் உள்ளூர் மற்றும் மாகாண ரீதியாக இடம்பெறுகின்றன. சுவிசேஷத்தின் மீதான ஐரோப்பிய குழுக்கள் நற்செய்திப்பணியில் மற்றும் தேசிய செயற்பாடுகளில் இடம்பெறும் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன. நற்செய்திப்பணி மற்றும் ஏனைய ஊழியங்கள் வளர்ச்சியடைந்து பெருகுவதற்கு தற்போதைய வல்லமையான சில கிறிஸ்தவ வானொலி நிலையங்கள் ஐரோப்பா முழுவதும் கேட்கக்கூடிய விதத்தில் பணியாற்றுகின்றன.
அநேக தனிநபர்கள் முன்நாட்களில் நாஸ்திக ஆட்சி நடைபெற்ற தேசங்களிலிருந்து தங்களுடைய புதுவாழ்வை கிறிஸ்தவத்தின் மூலமாய் வெளிப்படுத்துவார்களா? நிறுவப்பட்ட சபைகள் இயங்குவதற்கு பல நாடுகள் இணங்கியுள்ளன அத்தோடு சபையில் வரவுகள் போலாந்து, ருமேனியா, பல்கேரியா, முன்னாள் சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் அதிகரித்து வருகின்றது. சிறிய வேதபடிப்புக் குழுக்கள் மற்றும் வீட்டுச்சபைகள் பல நகரங்களிலும் உருவாக்கப்பெற்று வாலிப மக்கள் மத்தியில நாஸ்திக கொள்கையை எதிர்ப்போர் மற்றும் புரட்டுக்கொள்கைகளை வெறுப்போரிலிருந்து உருவாக்கம் பெறுகின்றன.

## லத்தீன் அமெரிக்கா

36 நாடுகள்

லத்தீன் அமெரிக்காவில் பல பகுதிகளில் உள்ள பல ஜாதியார்களைக் கொண்ட சுவிசேஷசபைகளில் அதிக வேகமான வளர்ச்சியும், எழுப்புதலும் காணப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. உதாரணமாக, பிரேசில், பெரிய ஜாதியைக்கொண்ட பகுதியில், புரட்டஸ்தாந்திய சபைகளின் வளர்ச்சி முழு ஜனத்தொகை வளர்ச்சியிலும் 3 மடங்கு அதிகமான வளர்ச்சியுடையது. பிரேசில் நாட்டிலேயே லத்தீன் அமெரிக்காவிலுள்ள மூன்றில் இரண்டு பங்குடைய கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். ஏனைய தேசங்கள் நாஸ்தீக அறிவியல்களும், இறைவன் இல்லையென்ற கோட்பாடுகள் காணப்படுவதால் நற்செய்தி அறிவித்தலுக்கு பாரிய சவாலாய் விளங்குகின்றது.

## மத்திய கிழக்கு நாடுகள்

17 நாடுகள்

மத்திய கிழக்கிலுள்ள சபை வளர்ச்சி எல்லைக்குட்பட்டதாகவே உள்ளது. மத்திய கிழக்கில் இஸ்லாமிய மறுமலர்ச்சி ஏற்பட்டதின் காரணமாக சீயோனிசமும், கிறிஸ்தவமும் வெளிநாட்டு சமயங்களாக கருதப்படுகின்றன. மதமாற்றம் சட்டபூர்வமற்றதாக இவ்விரு சமயத்திலும் உண்டு. சபை பொதுவானதாகவும், சிறியதாகவும், பழைமைவாதத்தை கொண்டதாகவும், பாரம்பரியத்தில் கட்டப்பட்டதாகவும் இருக்கின்றது. முழு மக்கள் ஜனத்தொகையிலும் நான்கு வீதமானவர்களே கிறிஸ்தவ பின்னணியைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.
தாக்கமுள்ள சுவிசேஷஊழியம் நடைபெறும் பிரதேசங்களில் பாடசாலைகளும், வைத்தியசாலைகளும், இலக்கிய வெளியீடுகளும், ஒலிபரப்பும் ஊழியத்திற்கு உதவுகின்றன. நிவாரணப்பணியும், அபிவிருத்தித்திட்டங்களும் போர்க்கால நாடுகளில் பயன்படுகின்றன. லெபனான் நாட்டில் அகதி

மத்தியில் சுவிசேஷத்திற்கான வாய்ப்புள்ளது. இவர்கள் கலவரங்களாலும், தீவிரவாத செயற்பாடுகளாலும் அகதிகளானவர்கள்.

துருக்கி மற்றும் பிரசித்தி பெற்ற மத்திய கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவ பணிகள் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளன. எகிப்தானது மத்திய கிழக்கில் பெரிய தேசம், இங்கு கிறிஸ்தவ சதவீதம் புறக்கணிக்கப்பட்டு உபத்திரவமானது அதிகரிக்கின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லிம்கள் மத்தியில் ஊழியம் செய்வதானது இன்றைய சபைகளுக்கு மிகவும் சவாலான காரியமாகும். உதாரணமாக சவூதி அரேபியாவில் ஒரு முஸ்லிம் கிறிஸ்தவனாவது சட்டபூர்வமானதல்ல.
லெபனான், பாகிஸ்தான், ஜோர்தான் ஆகிய நாடுகளில் கிறிஸ்தவத்திற்கு பகைமையுள்ள சூழ்நிலைகளில் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்கள் வீட்டு வேதாகம படிப்பிலும், வெளியிடங்களில் அருட்பணி சர்ந்தர்ப்பங்களிலும் புதிய வளர்ச்சிகளை அடைகின்றனர்.

## வட அமெரிக்கா

2 நாடுகள்

அமெரிக்காவில் இயங்கும் சமய ஆய்வு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் வட அமெரிக்கர் உலகிலேயே அதிகளவில் ஏனைய மதக்கலாச்சார மக்களுக்குள் வாழ்கின்றனர். ஆதலால் ஏனையவர்களின் தேவனைப்பற்றிய நம்பிக்கைகள், நித்தியத்தை குறித்த நம்பிக்கைகள் காரணமாய் வட அமெரிக்கர்களது மத்தியில் சமயங்கள் குறித்த கேள்விகள், முக்கியத்துவங்கள் பிரச்சனையாக மாறுகின்றன. வட அமெரிக்காவிலுள்ள பலர் “பெயர் கிறிஸ்தவர்”களாகவே இருக்கின்றனர். தற்போதைய கலாச்சாரமும், அரசியல் நடவடிக்கைகளும் அதை ஒரு “கிறிஸ்தவ” நாடாக பிரதிபலிக்கவில்லை.
கடந்த வருடங்களில் வட அமெரிக்கா கிறிஸ்தவத்தில் பல்வேறு திருப்பங்களும் நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன. பாரம்பரிய சபைக் கட்டுமானங்களில் உள் ரீதியிலும், வெளிரீதியிலும் பல்வேறு புதுப்பித்தல் மாறுதல்கள் இடம் பெற்றுள்ளன. சில அமைப்புக்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன மற்றும் சில புதுமையான முறைகளுக்குள் தூண்டப்பெற்று செயல்படுகின்றன.

## ஓசானியா துருவப்பிரதேசம்

8 நாடுகள்

ஓசானியா, பசுபிக் சமுத்திரத்திற்கு அப்பால் வேறுப்பட்ட பல்வேறு கலாச்சாரமுள்ள மக்களையும், அவுஸ்திரேலியா, நியுசிலாந்து நாடுகளை உள்ளடக்கியுள்ளது. இங்குள்ள தீவுகளில் மக்கள் குழுக்களானது பெரியளவினதாகவும், 19ம்,20ம் நூற்றாண்டுகளில் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்களும் உள்ளனர்.
இங்கு கிறிஸ்தவ வளர்ச்சி இத்தீவுகளில் கடந்த வருடங்களில் அதிகரித்தது. புதிய தலைவர்களை உருவாக்குவது, கோத்திர மதங்களிடமிருந்து எதிர்ப்புக்கள், மற்றும் காடுகளிற்குள் வசிக்கும் மனிதரை கோத்திர மக்களை தொடர்பு கொள்வது போன்ற சவால்களை சபை சந்திக்கின்றது.
பப்புவா நியுகினியானது சந்திக்கப்படாத அநேக கோத்திரங்களைக் கொண்ட தேசமாகும். இங்கு வேதத்தை கற்பிக்கத்தக்க கிறிஸ்தவர்களின் வளர்ச்சியில் முன்னேற்றம் காணப்படுகின்றது. தொடர்ச்சியான வளர்ச்சியை சந்திக்குமாயின் நம் நாட்களில் பப்புவா நியுகினியானது சந்திக்கப்படாத மக்களின் மத்தியில் நற்செய்தியை சீக்கிரம் கொண்டுசெல்லும்.
இன்றும் அதிக தீவுகளில் அதிகளவிலான மக்கள் கூட்டங்கள் சந்திக்கப்படாததாய் உள்ளது.

கிறிஸ்தவர்களல்லாத குழுக்கள் சீன, இந்தியர்களாய் உள்ளது. அவுஸ்திரேலியா, நியுசிலாந்து நாடுகள் பிரித்தானிய ஆட்சி அமைப்பை வெளிக்காட்டுவதோடு துருவப்பிரதேசங்களில் நற்செய்திப்பணி செய்கின்றன. முயற்சியுடைய நற்செய்திப்பணி நடைபெறுகிறது எனினும் தேசிய ஊழியர்கள் தீவுகளிற்கு செல்கின்றனர்.

கிறிஸ்தவமானது நியுசிலாந்திலும், பிரித்தானிய அதிகாரத்தை காண்பிக்கிறது. இங்கிலாந்து சபையும், பிரஸ்பிட்டேனியர் சபையும் மூன்றில் இரண்டு பங்கு கிறிஸ்தவர்கள் குறித்து கணக்கு கொடுக்கின்றது. ரோமன் கத்தோலிக்க சபை மிகப்பெரிய தனி சபையாக உள்ளது.

அதிகாரம் எட்டு

# உலக கிறிஸ்தவனாகுதல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடித்ததும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ "உலக கிறிஸ்தவன்" என்பதை வரையறுக்கவும்.
- ☐ "உலக கிறிஸ்தவனாக" மாறவும்.
- ☐ ஆதிச்சபையினர் உலகிற்கு சுவிசேஷம் கொண்டு சென்ற திறமையை விபரிக்கவும் உங்களால் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

> **நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்ஞு நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோவான் 15:16)**

**அறிமுகம்**

கடந்த அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து உலகை ஆதாயப்படுத்த சபைக்குள்ள உத்தரவாதத்தை கற்றீர்கள். தனிப்பட்ட விசுவாசி என்ற ரீதியில், நீங்கள் சபையாகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பகுதியாக ஒத்துழைக்க வேண்டும். சபை உலகத்தில் தனது ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமாயின், ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய திட்டத்தில் அவர்களுடைய பங்களிப்பை செலுத்த வேண்டும். உலகத்தை குறித்த தனிப்பட்ட உத்தரவாதம் உங்களுக்கு உண்டு. அவ்வுத்தரவாதமானது சில ரூபாய்களை ஒவ்வொரு மாதமும் சபையின் தூதுப்பணி ஊழியத்திற்கு அன்பளிப்பாக கொடுப்பதனூடாக நிறைவேற்ற முடியும்.

இவ்வதிகாரம் உலகைக்குறித்த உங்களுடைய உத்தரவாதத்தை சுட்டிக்காட்டும். உலக கிறிஸ்தவனாக எப்படி மாறுவது என்பதை நீங்கள் கற்பீர்கள். ஜாதிகளைக் குறித்த தேவனுடைய திட்டத்தில் பார்வையாளராகவிராமல் பங்குதாரராக மாறுவீர்கள்.

## சகல மனிதரும் சுவிசேஷகரே

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றும் "நீங்கள் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றும் இயேசு கூறியபோது, இயேசு தம்முடைய சீஷர்களான குழுவை நோக்கயே கூறினார். ஒவ்வொரு குழுவும், தனித்தனியாக உருவாக்கப்பட்ட குழுவாக இருந்தது. "நீங்கள் போய" என்று இயேசு கூறியது ஒரு குழுவிற்கானதாயிராமல், தனித்தனியாக உள்ள சகலருக்குமான வசனமாயிருக்கின்றது. தனிப்பட்ட முறையில் இச்சவாலை குழுவிலுள்ள சகல அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இக்குழுவிலுள்ள தனிப்பட்டவர்கள் உத்தரவாத்திலிருந்து தவறும் போது, முழு குழுவும் தவறிவிடும்.

இன்று சபை உலகஜாதிகளிடையே செல்லும் சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் சபையானது ஒவ்வொரு தனிப்பட்டவர்களையும் கொண்டுள்ளது அத்தோடு ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் மாபெரும் சவால்களை ஏற்றுக்கொண்டால் மட்டுமே கூட்டங்களில் வல்லமையான மாற்றங்களை காண முடியும்.

## ஒவ்வொருவரும் ஒருவருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆதித்திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை பரப்பும் உத்தரவாதத்தை எடுத்துக்கொண்டனர். முழுநேர ஊழியர்கள் பல்லின கலாசாரத்தையுடையவர்களிடம் சுவிசேஷபணியை செய்யவில்லை, பொதுமக்கள் செய்தார்கள். சில மிகப்பெரிய சுவிசேஷ பிரச்சார வேலை தொண்டர் ஊழியர்களாலேயே நடத்தப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் 6ம்,7ம் அதிகாரங்கள் பிலிப்பு, ஸ்தேவான் ஆகியோரின் கதைகள் கூறப்பட்டுள்ளது. அவர்கள் தொண்டர் ஊழியர்களே, அவர்கள் சுவிசேஷத்தை பரவச் செய்ய தேவனால் பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

எருசலேம் சபைக்கு எதிராக உபத்திரவம் வந்தபோது, விசுவாசிகள் யூதேயா, சமாரியாவிற்கு சிதறடிக்கப்பட்டார்கள். வேதாகமத்தில் பதியப்பட்டுள்ளதாவது:

> **சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்..... (அப்போஸ்தலர் 8:4)**

ஒவ்வொரு விசுவாசியும் இச்சவாலை ஏற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கக்கூடிய உண்மையுள்ள ஆண், பெண்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும்.

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

அறுக்கப்பட முடியாத இச்சங்கிலியால், ஆவிக்குரிய உற்பத்தி பலனாக வரும், விசுவாசிகள் பெருகுவார்கள்.

## சகல வீடுகளும் பெருக்கத்தின் மையமாக வேண்டும்

ஆவிக்குரிய அபிவிருத்திக்கு வீடுகள் மையமாக பாவிக்கின்ற திட்டம் புதியதல்ல. நியாயப்பிரமாணம் தேவனால் மனிதருக்கு கொடுக்கப்பட்டபோதே, வீடு பயிற்றுவிக்கும் மையமாக மாறியுள்ளது.

> **இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.**
>
> **நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக. (உபாகமம் 6:6,7,9)**
>
> **தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 5:42)**

ஆதிச்சபையில் சகல வீடும் சுவிசேஷ மையமாக திகழ்ந்துள்ளது. விசுவாசிகள் சுவிசேஷத்தை ஆலயங்களில் மட்டுமல்ல தினந்தோறும் வீடுகளிலும் அறிவித்தார்கள்.

> **தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 5:42)**

அப்போஸ்தலர்கள் வீட்டுக்குழுக்களாக வெளிப்படையாக ஊடுருவிச் செயல்பட்டது அதிக

முன்னேற்றத்தை கொடுத்தது. ஆகவே சவுல் ஆலயங்களை சென்று பாழாக்க முயற்சிக்கும் போது, ஆலயங்களை மட்டும் குறிவைத்து செயல்படுதல் சரியல்ல என அறிந்திருந்தான். அவன் வீடுகள் தோறும் புகுந்து சுவிசேஷம் பரவுவதை தடுத்தான்:

> **சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். (அப்போஸ்தலர் 8:3)**

பல்லின மக்களுக்கு சுவிசேஷத்தை பரவச்செய்யும் தேவனுடைய திட்டத்தின் தரிசனமானது, பேதுரு வீட்டிலிருந்த மேலறையிலிருந்து ஜெபித்த போது கொடுக்கப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் 10). புறஜாதிகளிடத்திற்கு முதலாவது பிரசங்க செய்தி கொர்நெலியுவின் வீட்டிலேயே செய்யப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் 10).

பல்லின மக்களிள் சுவிசேஷகனான, பவுல், அனனியாவால் அவனுடைய வீட்டில் வைத்தே சீஷனாகின்றார் (அப்போஸ்தலர் 9). பவுல் தனது ஊழியத்தை பிரசித்தமாகவும் வீடுகள் தோறும் செய்துள்ளார்:

> **பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, (அப்போஸ்தலர் 20:20)**

பவுலின் கடைசி நாட்களின் ஊழியம் வாடகை வீட்டில் நடைபெற்றது, வந்தவர்களை அவன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பிரசங்கித்து கற்றுக்கொடுத்தார்:

> **பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு,**
>
> **மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான். (அப்போஸ்தலர் 28:30-31)**

என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என இயேசு சொன்னார்:

> **என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். (மாற்கு 11:17)**

“வீடு” என்பதன் கிரேக்க சொல்லின் அர்த்தம் “தங்கியிருக்கின்ற இடம“ என்பதாகும். இது தனியாரின் வீடாக அல்லது பொதுவான ஆலயமாயிருக்கலாம்.

ஆதிசபை உலகத்தை ஆதாயப்படுத்தும் செயல்முறை ஒவ்வொரு விசுவாசியும், ஒவ்வொரு வீட்டையும் சுவிஷேசத்திற் மையமாக பாவிக்கும் படிமுறையைக் கொண்டிருந்தது.

## பலன்

ஆதித்திருச்சபையின் “சகல நபரும்”, “சகல வீடும்” என்ற படிமுறையின் பலாபலன் என்ன? அவர்கள் அவர்களுடைய உலகத்தை சுவிசேஷத்தால் அடைந்தார்கள். சபைக்கு எதிரானவர்கள் அவர்களுக்குள்ளேயே சொன்னார்கள்:

**உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 17:6)**

இதே படிமுறையை இன்றைய விசுவாசிகள் பின்பற்றினால், கிடைக்கும் பலன் என்ன?

அடுத்த பக்கத்திலுள்ள அட்டவனையை கவனியுங்கள். இந்த அட்டவனை வருடத்தில் சராசரியாக ஆதாயப்படுத்தப்பட்டு, அவர்களால் சீஷராக்கப்படும் விசுவாசிகளின் விபரங்களை தருகின்றது. உண்மையாகவே, இதற்கு அதிகமான அல்லது குறைவான நேரம் சென்றிருக்கலாம், எனினும் மக்களை இது சார்ந்துள்ளது. ஆனால் சராசரியாக ஒரு வருடத்தில் ஆதாயப்படுத்தப்படும் விசுவாசி ஒவ்வொருவரும் இன்னுமொருவரை ஆதாயப்படுத்தி சீஷராக்கினால் பல வருடங்களின் பின்னர் அநேகர் விசுவாசிகளாக இருப்பார்கள். இது உலகை ஆதாயப்படுத்த இலகுவான வழியாயும் உள்ளது.

முதலாமவர் ஒரு வருடத்தில் இன்னுமொரு விசுவாசியை ஆதாயப்படுத்துவதை அட்டவனையில் கவனியுங்கள். வருட இறுதியில் உண்மையுள்ள மனிதர் இருவர் இருக்கின்றனர் (விசுவாசியும் அவர் ஆதாயப்படுத்தியவரும்) அடுத்த வருடத்தில் இவர்கள் ஆளுக்கொருவரை சீஷராக்குகின்றனர். இரண்டாம் வருடத்தின் இறுதியில், நான்கு பேர் இருப்பதையும், அடுத்த வருடத்தில் இவர்கள் ஒவ்வொருவரை சீஷர்களாக்குவதையும் காணலாம். உலகிலுள்ள ஜனத்தொகையில் இன்னும் பலர் சுவிசேஷத்தால் சந்திக்கப்படவில்லை. ஆனால் தேவன் நமக்கு ஓர் திறமையை தந்துள்ளார், அனைத்து வேலை பார்க்கும் விசுவாசிகளும், தேவனுடைய இராஜ்யத்தை பரப்புவதற்கு ஒத்துழைத்தால் இக்காரியம் இலகுவாயிருக்கும்.

| | சீடராக்கப்பட்டவர்கள் | சீடர்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| 17வது வருடம் | 65,536 | 65,536 | = | 131,072 |
| 16வது வருடம் | 32,768 | 32,768 | = | 65,536 |
| 15வது வருடம் | 16,384 | 16,384 | = | 32,768 |
| 14வது வருடம் | 8,192 | 8,192 | = | 16,384 |
| 13வது வருடம் | 4,096 | 4,096 | = | 8,192 |
| 12வது வருடம் | 2,048 | 2,048 | = | 4,096 |
| 11வது வருடம் | 1,024 | 1,024 | = | 2,048 |
| 10வது வருடம் | 512 | 512 | = | 1,024 |
| 9வது வருடம் | 256 | 256 | = | 512 |
| 8வது வருடம் | 128 | 128 | = | 256 |
| 7வது வருடம் | 64 | 64 | = | 128 |
| 6வது வருடம் | 32 | 32 | = | 64 |
| 5வது வருடம் | 16 | 16 | = | 32 |
| 4வது வருடம் | 8 | 8 | = | 16 |
| 3வது வருடம் | 4 | 4 | = | 8 |
| 2வது வருடம் | 2 | 2 | = | 4 |
| 1வது வருடம் | 1 | 1 | = | 2 |

## பெருகுவதை குறித்தும், தயாராகுவதைக்குறித்தும் தேவனுடைய தெய்வீக படிமுறைகள்

### உலக கிறிஸ்தவர்கள்

இன்றைக்கு உலகில் புதிய இயக்கம் ஒன்று வளர்ந்து கொண்டிருக்கின்றது. அது ஒரு சபைப்பிரிவோ அல்லது ஸ்தாபனமோ அல்ல. அது விசுவாசிகளைக் கொண்ட குழுவாக இருப்பதோடு தனிப்பட்ட உத்தரவாதத்தை எடுத்துக்கொண்டு உலகின் பல ஜாதிகளிடத்திலும் சுவிசேஷத்தை பரப்புவதாக அடையாளம் காட்டுகின்றது.

இக்குழுவினர் பல ஜாதியினரையும், கலாச்சாரங்களையும், பாஷைகளையும், சமயங்களையும், கொண்ட நிறுவனம் ஆகும். இவர்களுக்குள்ள பொதுவான ஒரு ஒற்றுமை என்னவென்றால் அவர்களுடைய தனிப்பட்ட ஒப்புக்கொடுத்தலோடு உலக கிறிஸ்தவர்களாக இருப்பதே ஆகும். உலக கிறிஸ்தவர்கள் என்பவர்கள்.....

- ☐ தேவன் தன்னை பரிசுத்த வேதாகமத்தில் மெய்யான ஒரே தேவனாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறிந்துள்ளனர்.
- ☐ பரிசுத்த வேதாகமம் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை என்று அறிந்துள்ளனர்.
- ☐ இயேசுகிறிஸ்துவுக்கூடாக இரட்சிப்படைவது தேவனுடைய திட்டம் என்று தனிப்பட்ட முறையை ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- ☐ அவர்கள் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.
- ☐ உலக ஜாதியாரிடையே சுவிசேஷத்தை கொண்டு செல்லும் சவாலை தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உலக கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொந்த ஜனத்தாரை விட்டுவிட்டு வேறொரு கலாச்சாரத்திற்குள் செல்லுகின்றனர் என அர்த்தமாகாது, தேவன் வழிநடத்தினால் அதைச் செய்யவும் விருப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர். தங்களுடைய சொந்த கிராமத்தில் அல்லது நகரத்தில் சுவிசேஷத்தை பரப்ப தம்மை ஒப்புக்கொடுத்துள்ளனர் என்பதே இதன் அர்த்தமாகும். மற்றவர்களையும், சந்திக்கப்படாத மக்களிடம் அனுப்புவதற்கும் தம்மை ஒப்புக்கொடுத்து உள்ளனர். உலக கிறிஸ்தவர்கள் முழுநேர ஊழியராக அல்லது பொதுவாக உலக வேலையில் ஈடுப்பட்டு கொண்டே சுவிசேஷத்தை பரப்ப முன்னுரிமை கொடுத்துள்ளார்.

### உலக கிறிஸ்தவனின் ஒப்புக்கொடுத்தல்

இந்த மக்கள் இத்தனிப்பட்ட சவாலை நடைமுறைப்படுத்த தேவனுடன் விஷேட பொருத்தனை செய்துள்ளனர். அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதி இதுவே:

> “மத்தேயு 28:18-20வரை கூறப்பட்டுள்ளப்படி தேவனுடைய கிருபையினால், அவருடைய மகிமைக்காக, பெரிதான கட்டளையை நிறைவேற்ற எனது வாழ்வை ஒப்புக்கொடுக்கின்றேன், எங்கேயாவது அல்லது எப்படியாவது தேவன் என்னை வழிநடத்துகின்றபடி மக்கள் சுவிசேஷத்தை கேட்கும்படிக்கு அவருக்கு முதன்மை ஸ்தானத்தை கொடுப்பேன். (ரோமர் 15:20-21). இத்தரிசனத்தை நானும் மற்றவர்களுடன் சேர்ந்து நிறைவேற்றுவேன்.”

“சுய பரீட்சை“ என்ற பகுதி இந்த அதிகாரத்தில் உள்ளது, நீங்களும் இவ்விதம் ஒப்புக்கொடுத்து கையொப்பமிடலாம்.

## உலக கிறிஸ்தவத்தை விரிவாக்கம் செய்தல்

உலக கிறிஸ்தவம் என்ற ரீதியில் விரிவாக்கத்தை அடைவதற்கான சில ஆலோசனைகள் "மேலதிக படிப்பு" என்னும் இப்பாடத்தில் காணப்படும் பகுதியில் தருகின்றது. இங்கே மேலும் சில வேறு காரியங்கள் உலக கிறிஸ்தவராகி தேவனுடைய நோக்கத்தில் கலந்து கொள்ள தரப்பட்டுள்ளது:

### தேவனுடைய அழைப்பிற்கு ஆயத்தம் செய்தல்:

1. உங்களை பரிசுத்தமுள்ள ஜீவப்பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 12:1-2)
2. உங்கள் ஆவிக்குரிய செவிகொடுத்தலை தடைசெய்கின்ற அல்லது குருடாக்குகின்ற பாவங்கள் ஏதும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். (எபேசியர் 1:18; கொலோசேயர் 1:9).
3. தனிப்பட்ட தீர்மானங்களையும் இலக்குகளையும் நாமாகவே முன்தீர்மானம் செய்வதை தவிர்த்தல்.
4. நாளாந்தம் வேதப்படிப்புக்களையும், ஜெபித்தலையும் பொழுதுப்போக்குகளாக்கிக் கொள்ளுங்கள். (யோசுவா 1:8; சங்கீதம் 77:12; 119:15,25,45)
5. உங்களுடைய நாளாந்த ஜீவியத்தில் செய்யப்பட்ட வேண்டியவற்றிற்காக, அவரது வழிநடத்தலைப் பெறும்படியாக எதிர்ப்பார்ப்போடு கர்த்தருக்கு காத்திருங்கள். அவர் தனது சித்ததை செய்வதோடு உங்கள் கூப்பிடுதலையும் கவனிப்பார் (நீதிமொழிகள் 3:6, சங்கீதம் 23:3; 37:5,7)

   உங்களுக்கான தேவனுடைய திட்டத்தை அவர் வெளிப்படுத்தும் வரை காத்திருப்பதில் நீங்கள் எதையும் இழந்துபோக மாட்டீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். யோசேப்பு தேசத்தை காப்பாற்றும் முன் முதல் இரண்டு வருடங்கள் சிறையில் இருந்தான். மோசே அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையும்படியும் ஜனத்தை வழிநடத்த ஆயத்தப்படும்படியாக வனாந்திரத்தில் 40 வருடங்கள் காத்திருந்தான்.
6. "தேவனுடைய சத்தத்தை அறிந்துகொள்ளுதல்" என்ற பாடத்தை படிப்பதின் மூலம் நீங்கள் தேவனுடைய அழைப்பிற்கு, உங்களை ஆயத்தமாக்கிக் கொள்ளலாம்.

### நீங்கள் எங்கே ஆரம்பிக்கின்றீர்கள்:

1. நாளாந்த ஜீவியத்தில் சிறிய காரியமாயினும் தினமும் தேவனுக்கு கீழ்ப்படியுங்கள். (லூக்கா 19:17; 1 சாமுவேல் 15:22). தேவன் கொடுத்த சிறிய காரியங்களுக்கு, நீங்கள் எங்கிருந்தாலும் உண்மையுள்ளவனாக இருங்கள்; உங்களை நம்பாமல் அவர் இப்பெரிதான அழைப்பை அல்லது ஊழியத்தை கொடுக்கவில்லை. (மத்தேயு 25:14-30)

   உங்களைச் சுற்றியுள்ள கிராமத்தை அல்லது நகரத்தை "ஆவிக்குரிய" கண்களால் பாருங்கள். சுவிசேஷ தேவை உள்ளவர்களை காண்பிக்கும் படி தேவனிடம் கேளுங்கள். சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் "சுற்றாடல் ஆய்வு" என்ற பாடம் இதற்கு உதவும்.

   உங்கள் நிறுவனத்திலுள்ளவர்களை சுவிசேஷத்தால் சந்தியுங்கள். சர்வதேச அறுவடையின் நேர நிறுவனத்தின் "பெருக்குதலின் முறைகள்" "புளித்தமா சுவிசேஷத்தின் மாதிரி" என்ப பாட விதானங்கள் தேவனுடைய திட்டத்தில் நீங்கள் பங்குதாரராக உதவும்.

2. எவ்விடத்திற்கு செல்லவும், தேவனால் பாவிக்கப்படவும் விருப்பத்துடன் இருங்கள். (யோவான் 7:17). உங்களுடைய சொந்த பிரதேசத்தைவிட்டு விட்டு சுவிசேஷத்தை பரப்ப வேறு கலாச்சார மக்களிடத்தில் செல்லல் என்பதே இதன் அர்த்தமாகும். தெருவில் நடந்து செல்லுகின்ற போது தேவையுள்ள ஒருவருக்கு சுவிசேஷத்தை பகிர்ந்தளிக்கின்றீர்கள் என்பதே இதின் அர்த்தம் ஆகும்.

3. உலகத்தின் ஆவிக்குரிய தேவையையும், உங்களுடைய ஆவிக்குரிய தரிசனத்தை அபிவிருத்தி செய்யக்கூடியவற்றை தொடர்ந்து வாசியுங்கள். (யோவான் 4:35). புத்தகங்களை வாசித்து குறுகிய காலம் மற்ற கலாச்சாரத்தை சார்ந்த நீங்கள் சந்திக்க விரும்புகின்றவர்களைப்பற்றிய சுற்றுப்பிரயாணங்களையும் மேற்கொள்ளுங்கள். உங்கள் பிரதேசத்தில் வைக்கப்படுகின்ற தூதுப்பணி பற்றிய மகாநாடுகளிலும் பங்கு கொள்ளவும்.

4. உலக நாடுகளுக்காகவும், அறுப்புக்கான வேலையாட்களுக்காகவும் நேரம் செலவ செய்து ஜெபியுங்கள். (மத்தேயு 9:37-38). அதிகாரம் ஒன்பது இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான காரியங்களை உங்களுக்கு அறியத்தரும்.

5. ஆவிக்குரிய வரங்களைப்பாவிக்க ஆரம்பியுங்கள். சர்வதேச அறுவடையின் ஊழிய நிறுவனத்தின் “பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்” என்ற புத்தகம் இதற்கான வழிகாட்டலைத் தரும்.

6. உங்கள் சபையிலுள்ள சுவிசேஷ குழுவுடன் சேர்ந்து கொள்ளுங்கள். இதுவரை அப்படியொன்று இல்லாதிருந்தால் இன்றே ஆரம்பியுங்கள். அதிகாரம் 10லிலுள்ள “மேலதிக படிப்பினைக்கு” என்ற பகுதி இதைச் செய்ய உங்களுக்கு உதவும்.

7. பிற ஜாதிகளுக்கு சுவிசேஷத்தை பரப்ப ஆர்வமுள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும். தூதுப்பணியாருடன் கடிதத்தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பிரதேசத்திலுள்ள உங்கள் வீட்டில் வந்து தங்கும்படி அழையுங்கள். அவர்களுடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். இத்தொடர்பு அவர்கள் தங்களுடைய பாரங்களையும், தேவைகளையும், வெற்றிகளையும் நீங்கள் அறிந்துகொள்ள உதவும்.

8. உலகத்தை ஆதாயப்படுத்திக் கொள்ள நீங்கள் வேறு பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். இவ்வாதாயத்திற்கு சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடவிதானங்கள் உங்களுக்கு உதவும்.

9. கற்றவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இது சம்பந்தமான அறிவைப் பெறுவதற்கு உலக கிறிஸ்தவர்களின் சிறு குழுவுடன் சேர்ந்து கொள்ளுங்கள். அல்லது குழுவொன்றை உருவாக்குங்கள். பத்தாம் அதிகாரம் இதற்கு உதவும்.

10. சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக பொருளாதார உதவிகளை கொடுப்பதற்காக தனிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பியுங்கள். வாழ்வின் நடைமுறைக்காரியங்களை கவனியுங்கள். கர்த்தருடைய வேலையை செய்ய எவ்வளவு நிதி உதவிகளை செய்வதற்கு எவ்விதமான (சரிகட்டல்களை) முயற்சிகளை மேற்கொள்ளப்போகின்றீர்கள்?

11. கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள்! இன்னுமொரு தேசத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் உங்களை அனுப்பக்கூடும்.

## தேவனுடைய அழைப்பை அடையாளம் காணுதல்:

ஒரு விசுவாசி எங்கிருந்தாலும் மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளான். ஆனாலும் சிலர் மற்ற கலாச்சார மக்களிடம் ஊழியம் செய்ய அல்லது முழுநேர ஊழியம் செய்ய,

போதகராக, சுவிசேஷகராக, தூதுப்பணியாளர்களாக இருக்க விஷேட அழைப்பை பெற்றுள்ளனர். தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள அழைப்பு என்ன என்பதைக் குறித்து நிச்சயப்படுத்திக் கொண்டு தேவன் அனுப்புகின்ற அறுவடையின் நிலத்திற்கு செல்லுங்கள்.

இக்கேள்விகளை உங்களிடத்தில் நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்:

1. தேவனுடைய வசனத்திலிருந்து அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் என்ன தீர்மானம் செய்துள்ளீர்கள்? அது வேதாகம வார்த்தையிலுள்ளதா அத்தோடு அது உலகத்தை சுவிசேஷத்தால் ஆதாயப்படுத்தும் இலக்கை கொண்டதாக உள்ளதா?
2. உங்கள் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய வழிநடத்துதலை காண விரும்பகின்றீர்களா? நீங்கள் சூழ்நிலையில் மாத்திரம் சார்ந்திராமல், தேவனுடைய அழைப்பை விசுவாசியுங்கள்.
3. பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவியோடு கூட தேவ சித்தத்திற்கு சாட்சியிடுகின்றாரா? உங்களுடைய ஆவியில் சமாதானம் குறைவுபட்டிருந்தால் நீங்கள் எடுத்தது பழையான தீர்மானம் என்பதற்கு அதுவே எச்சரிப்பின்அடையாளம்.
4. நீங்கள் “அழைப்பை” பெற்றிருக்கின்றபோதும், துணிந்து செய்யக்கூடிய சவாலை அழைப்புடன் இணைந்துள்ளீர்களா? சிறப்பில்லாத இடத்திற்கு ஊழியம் செய்யும்படி செல்ல அழைக்கப்பட்டிருந்தால், அவ்விடத்திற்கு செல்ல விரும்புவீர்களா?
5. தேவனுடைய உங்களுக்கு கொடுத்த அழைப்பை நிறைவேற்ற எவ்விதமான கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாயிருக்கின்றீர்களா? அக்கிரயமானது கல்வியாக இருக்கலாம், இரத்த சாட்சி மரணமாகவும் இருக்கலாம். சிலவேளைகளில் வீட்டையும், குடும்பத்தையும், நண்பர்களையும் விட்டுவிடுவதாக இருக்கலாம். இதை நீங்கள் விரும்புகின்றீர்களா?

## அவரே உங்களை நியமிக்கிறார்

உலகத்தின் ஜாதிகளை ஆதாயப்படுத்திக்கொள்ள இயேசு உங்களை தெரிந்தெடுத்துள்ளார். அறுவடையின் நிலத்தின் ஆவிக்குரிய கனி கொடுக்க அவர் உங்களை நியமித்துள்ளார். உங்களுக்கு அவரது வேலையை செய்து முடிக்க அவசியமான சகல தேவைகளை சந்திப்பேன் என்றும் வாக்கு கொடுத்துள்ளார்:

> **நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோவான் 15:16)**

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உலக கிறிஸ்தவன் என்றால் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. சுவிசேஷத்தினால் உலகை ஆதாயப்படுத்த ஆதிச்சபை கொண்டிருந்த படிமுறைகளை சுருக்கமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. இவ்வதிகாரத்தின் பெரிய பரீட்சை என்னவெனில் நீங்கள் உலக கிறிஸ்தவராக மாறுவதை குறித்த அர்ப்பணிப்பு ஆகும். உலக கிறிஸ்தவனாக மாறுவதை குறித்த அர்ப்பணிப்பை கீழே செய்யுங்கள். இந்த உறுதிமொழியை நீங்கள் விளங்கியிருந்தால், உங்களது அர்ப்பணிப்பை இயலுமான அளவு உங்களால் செய்யக்கூடியதாக இருந்தால், கீழே தரப்பட்டுள்ள இடத்தில் உங்களுடைய பெயரை எழுதுங்கள்.

   “தேவனுடைய கிருபையால் அவருடைய மகிமைக்காக, மத்தேயு 28:18-20ன் பிரகாரம் என்னுடைய வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிதலுக்காக நான் அர்ப்பணிக்கின்றேன், எவ்விடத்திலும் அல்லது எவ்விதமாகவும் தேவன் என்னை வழிநடத்தினாலும், தற்போது நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டிய மக்களுக்காக முன்னுரிமை கொடுப்பேன் (ரோமர் 15:20-21). இத்தரிசனத்தை நான் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நான் முயற்சி செய்வேன்.

   கையொப்பம்:----------------------------------------------- திகதி:---------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

# மேலதிக படிப்பிற்கு

1. World Christian, Inc., P.O.Box 40345, Pasadena, California 91104, U.S.A ற்கு எழுதவும். உலக கிறிஸ்தவ கண்ணோட்டத்தினை வளர்ப்பதற்குறிய ஆதாரங்களை கேட்கவும்.

2. MARC at World Vision International, 919W. Huntington Drive, Monrovia, California 91016, U.S.A ற்கு எழுதவும். MARCன் மாதிரி செய்திப்பத்திரிக்கைக்கு விண்ணப்பித்து, உலக கிறிஸ்தவத்தை தொடர்ந்து விருத்தி செய்வதற்கு உள்ள காரியங்களை அட்டவனைப்படுத்துக.

3. சகல தொலைபேசி விபரக்கோவைகளிலுள்ள பெயர்பட்டியலின் படி, அவர்களுடைய சொந்த பாஷையில் ஒவ்வொருவரும் வேதாகமத்தை பெற்றுக்கொள்ளும்படியாக முயற்சி செய்யவும். தொடர்பு கொள்ளவும் Bible for the World, P.O.Bok 805, Wheaton, Illinois, U.S.A.

4. உதவும்படியாக ஏதாவதொரு தூதுப்பணி திட்டத்தை தேர்ந்தெடுக்க.

5. முதலாவது உலக கிறிஸ்தவன் ஆபிரகாமாகும். அவனுடைய கதை ஆதியாகமம் 11-25ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜாதிகளை சந்திக்கும்படியான வாக்குத்தத்தத்தை முதலாவதாக ஆபிரகாமுக்கே தேவன் கொடுத்தார். அவன் மந்தைகளை இடத்திற்கிடம் கொண்டு சென்று வியாபாரம் செய்கின்றவனாக இருந்தபோதும், தேவனுடைய நோக்கத்தை செய்யும் உதவி ஊழியனாகவும் இருந்தான். ஆபிரகாமிடம் சில முக்கியமான ஆவிக்குரிய குணாதிசயங்கள் இருந்தமையால், உலக ஜாதிகளிடத்தில் அவனது அழைப்பை நிறைவேற்ற கூடியவனாக இருந்தான். உலக கிறிஸ்தவர்களாலேயே நாமும் எமது சொந்த வாழ்வில் இதை தேடி இணைந்துக்கொள்ளவேண்டும்.

   தனது அழைப்பை ஆபிரகாம் கண்டுகொண்டான்: தனிப்பட்ட முறையில் தனக்கு உலகஜாதிகளைக்குறித்த உத்தரவாதம் உண்டு என்பதை அவன் அறிந்து கொண்டான். (ஆதியாகமம் 22:18). ஆவிக்குரியவர்களாகிய எமக்கும் இதே உத்தரவாதம் உண்டு. (கலாத்தியர் 3:10)

   -அவனுடைய நோக்கத்திற்கு முற்றிலும் இசைந்தான்: ரோமர் 4:21

   -தேவனுக்காக நடமாடினான்: தேவனுக்காக ஆபிரகாமை சாதாரண வாழ்க்கை வாழ்ந்தான். தேவனுடைய கட்டளைக்கு உடனடியாக கீழ்ப்படிந்தான் (ஆதியாகமம் 12)

   -ஒரு போதும் அவன் திரும்பி பார்க்கவில்லை: விட்டு வந்த வாழ்வை மீண்டும் வாஞ்சிக்காது, தேவன் சொன்ன புதிய காரியங்களையே நோக்கினான். (எபிரேயர் 11:6)

   -வெளிப்படுத்தப்பட்ட ஞானத்தோடு நடந்தான். ஆதியாகமம் 18:17

   -அவன் தன்னுடைய இயற்கையான காரியங்களை பார்க்கவில்லை: “தம் சரீரம் செத்ததாயிருந்த போதும்” தேவன் அவர்களிடத்திலிருந்து ஒரு ஜாதி பெருகும் என உறுதியளித்தார்.

   -அவன் தேவனை கூப்பிட்டான்: ஆதியாகமம் 12ல் ஆபிரகாம் பலிபீடம் கட்டி கர்த்தருடைய நாமத்தை கூப்பிட்டான் என்று சொல்லப்படுகின்றது.

   -மற்றவர்களுக்கான உத்தரவாதத்தை ஆபிரகாம் உணர்ந்தான்: ஆபிரகாம் லோத்தின் கதையை ஆதியாகமம் 14ல் வாசிக்கவும்.

-அவன் கொடுக்கின்ற மனுஷன்: தனக்குரியவற்றில் தசமபாகம் செலுத்தினான் (ஆதியாகமம் 14:20)

-அவன் கீழ்ப்படிவுள்ளவன்: கர்த்தருடைய வழிகாட்டலுக்கு முடிவைப்பற்றி அறியாமலேயே கீழ்ப்படிந்தான். (எபிரேயர் 11:8; ஆதியாகமம் 22:18)

-குறிக்கப்பட்ட பிரதேசத்தில் பரதேசியாய் சஞ்சரிக்க விரும்பினான்: எபிரேயர் 11:9

-மற்றவர்களின் கலாச்சாரத்தை மதிக்க ஆயத்தமாய் இருந்தான்: மற்ற கலாச்சாரத்திலுள்ள தேசத்தாருக்கு முன் பணிந்தான். (ஆதியாகமம் 23:12)

-அவனுடைய சொத்துக்கள் குறுகியகாலத்திற்கு உரியதை விட நீண்டகாலத்திற்கு உரியதாக இருந்தது: அப்போஸ்தலர் 7:5

-அவன் தனிமையிலேயே நிற்க விரும்பினான்: ஏசாயா 51:2

-அவன் ஆவிக்குரிய தரிசனம் கொண்ட மனிதன்: எபிரேயர் 11:10

-அவன் தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்திருந்தான்: ஆபிரகாம் “தேவனுடைய சிநேகிதன்” எனப்பட்டான். யாக்கோபு 2:23

-அவன் நம்பிக்கையின் மனிதன்: ரோமர் 4:18

-அவன் விசுவாசத்தில் உறுதியாயிருந்தான்: ரோமர் 4:20

-அவன் நீதிமானாயிருந்தான்: ரோமர் 4:22

-அவன் தாழ்மையாயிருந்தான்: ரோமர் 4:20

-அவன் சமாதானத்தின் மனிதனாயிருந்தான்: ஆதியாகமம் 13

-தேவ சித்தம் செய்வதில் ஆயத்தமுள்ளவனாயிருந்தான்: தேவனுடைய சித்தம் கடினமானதாக இருந்தபோதும், ஆபிரகாம் பிரதிபலன் செய்ய ஆயத்தமுள்ளவனாயிருந்தான். (ஆதியாகமம் 22).

-அவன் தேவனை மகிமைப்படுத்தினான்: ஆதியாகமம் 14:21-24

-அவன் அர்ப்பணிப்புள்ள மனிதனாக தன்னை மாற்றிக்கொண்டான்: இது அவன் வாழ்வில் சேவையாளனாய் காணப்பட்டது. (ஆதியாகமம் 24)

-அவன் சகலவற்றிலும் ஆசிர்வதிக்கப்பட்டான்: ஆதியாகமம் 24:1

அதிகாரம் ஒன்பது

# சர்வலோக பரிந்து மன்றாடல்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதுதல்.
- ☐ "சர்வலோக மன்றாடல்" என்ன என்பதை விளக்கவும்.
- ☐ சர்வலோக மன்றாடல் குறித்த நன்மைகளை இணங்காணவும்.
- ☐ உலக தேசங்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட ஜெப திட்டத்தை பின்பற்றவும்.
- ☐ சர்வலோக மன்றாடல் வீரராக மாறவும்.
- ☐ சர்வலோக மன்றாட்டுக்கான தனிப்பட்ட ஜெபகுறிப்புகளை தயாரிக்கவும்.
- ☐ மற்றவர்களை சர்வலோக மன்றாட்டுக்கு பயிற்றுவிக்கவும் முடியும்.

## திறவுகோள் வசனம்:

> **என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும். (ஏசாயா 56:7)**

## அறிமுகம்

இப்பாடத்தில்இந்த உலகில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் நபராக எவ்வாறு மாற முடியும் என்பதைக் குறித்த குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. மிகவும் சிறப்பான வழிகளுள் ஒன்று நீங்களும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற, தேசங்களை குறித்து ஜெபம்பண்ண, முன் வருதலாகும். இந்த அதிகாரம் அதை செய்வது குறித்து கற்றுத்தருகின்றது. எப்படி உலக மன்றாட்டு வீரராக வரமுடியும் என்பதைக் குறித்தும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்.

## பரிந்துபேசும் தூயவர்

பரிந்து பேசுபவர் ஒரு மத்தியஸ்தராவார். அவர் இன்னொருவரைக்குறித்து வேண்டுதலை செய்வார். உதாரணமாக நீதிமன்றத்திலுள்ள சட்டத்தரணி ஒரு பரிந்துபேசுபவராவார். அவர் குற்றவாளிக்கும் நீதிபதிக்கும் இடையில் நிற்பவர். அவர் பாதிக்கப்பட்ட ஒருவருக்காக வழக்காடுவார்.
தேவன் ஒரு தடவை, பூமியை நோக்கி தனக்கும் பாவமுள்ள மனிதனுக்கும் இடையில் நிற்கத்தக்க மனிதனை தேடினார். ஆனால் யாரையும் காணவில்லை, இந்த இடத்திற்காகவே அவர் தம்முடைய குமாரனாகிய இயேசுவை அனுப்பினார்.

> **ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார். ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. (ஏசாயா 59:16)**

இயேசு சர்வலோக பரிந்து மன்றாட்டிற்கு முன்மாதிரியாக விளங்குகின்றார். அவரே தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியஸ்தராக விளங்குகின்றார். அவரே சிலுவை மரணத்தின் மூலம், பாவத்தினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பினார்.

இயேசு எமக்காக தொடர்ந்து மன்றாடுகின்றார்:

**தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபிரேயர் 7:25)**
**ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர். அவரே எழுந்துமிருக்கிறவர். அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்ஶூ நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. (ரோமர் 8:34)**

இயேசு தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் பரிந்து பேசுகின்றார். பரிசுத்த ஆவியானவரும் பரிந்து பேசுகின்றார்.

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.**
**ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:26-27)**

## சர்வலோக பரிந்து மன்றாடல்

தேவன் உலகின் தேசங்களுக்காக வேண்டுதல் செய்யும் பொறுப்பினை தமது விசுவாசிகளுக்கு கொடுத்துள்ளார். நாம் எமது ஜெபங்களில் மூலமாக தேசங்களுக்காக பரிந்து மன்றாட வேண்டும். எமது பரிந்துபேசுதலின் மூலம் தேவன் ஏனையோர் மத்தியில் செயற்படுவதை காண முடியும். நாம் உலக தேசங்களுக்கான வேண்டுகோள்களை தேவனிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
“சர்வலோக” என்னும் பதத்தின் பொருளானது தேசங்களுக்கு நடுவே அல்லது தேசங்களுக்கு உள்ளே என பொருள்படும். ஓர் உலகளாவிய பரிந்து மன்றாடுகின்றவர் என்ற வகையில், உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகவும், உங்கள் குடும்பங்கள், நண்பர்கள் ஆகியோருக்காகவும் நீங்கள் அதிகம் ஜெபிக்க வேண்டியது அவசியம். . ஜெபத்தின் மூலமாக நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் உலக தேசங்களுக்கூடாக இடைப்படுவீர்கள் அல்லது உற்பிரவேசிப்பீர்கள்.

## சர்வலோக பரிந்து மன்றாடலாலின் நன்மைகள்

மிகவும் முக்கியமான உலக தேசங்களை சந்திப்பதற்கு உள்ள கட்டமைப்பானது சர்வலோக பரிந்து மன்றாடலேயாகும். இந்த ஊழியத்தில் மூன்று முக்கிய வரப்பிரசாதங்களை காணக்கூடியதாக இருக்கின்றது.

### பரிந்து பேசுதல் வேதாகம ரீதியானது:

பழைய ஏற்பாடானது பரிந்து பேசுதலால் முழு தேசமும் மாற்றப்பட்ட பல்வேறு உதாரணங்களை எமக்கு காண்பிக்கின்றது. நெகேமியாவின் பரிந்துபேசுதலானது, அவரது புத்தகத்தில் அவர் பெயரையேவைப்பதற்கு காரணமானது சிறந்த உதாரணமாகும். அநேக வேத வாக்கியங்கள் இச்செயற்பாட்டிற்கு எம்மை கொண்டு சேர்க்கின்றது.

**நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.**
**நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே**

**செய்யவேண்டும். (1 தீமோத்தேயு 2:1-2)**
**தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்ளூ ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். (மத்தேயு 9:37-38)**
**என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.... (ஏசாயா 56:7)**

## மற்றோரின் மனமாற்றத்திற்கு ஜெபம் ஓர் முக்கிய செயற்பாடாகும்:

ஜெபமே ஆவிக்குரிய வல்லமையான மிகச்சிறந்த ஆதாரமாக மனிதருக்கு அமைந்துள்ளது. ஜெபமே எழுப்புதலுக்கு காரணமாக அமைந்துள்ளது, எழுப்புதலானது நற்செய்தி பணியின் மேன்மையை தருகின்றது. நற்செய்திப்பணி இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை கொண்டு செல்ல ஏதுவாகின்றது. நற்செய்தி பணிக்கு திட்டங்களும், செயற்பாடுகளும் முக்கியமானது ஆயினும் ஜெபமானது வெற்றிக்கு ஊக்குவிப்பதாகும். இதுவே ஊழியத்திற்கும் அடிப்படை செயற்பாடுகளுக்கும் உந்துவிக்கும் சக்தியாக இருக்கின்றது.

## சர்வலோக பரிந்து மன்றாட்டுக்கு வரையறை இல்லை:

ஜெபத்திற்கு அடைக்கப்பட்ட தேசங்கள் இல்லை, பாதுகாப்பு வலயங்கள் இல்லை. ஜெபமானது உலகின் முடிவுவரை செல்லும். நீங்கள் உங்கள் சொந்த வீட்டை விட்டு எங்கும் செல்ல மாட்டீர்கள் ஆனால் ஜெபத்தின் மூலமாய் ஆவியில் உலகின் எந்த பாகத்திற்கும் தேவையோடு இருப்பவர்களிடம் நீங்கள் செல்வீர்கள். ஜெபமானது உங்களுக்கு முடிவில்லாத ஊழியமாகும். தூரமோ, சமூக அந்தஸ்தோ, மொழியோ உங்கள் ஜெபத்திற்கு தடையாக இருக்காது.
ஜெபம் ஒரு “உலகளாவிய ஊழியம்” அது எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். இது உலக நற்செய்திப் பணியுடன் சில நொடி தாமதமின்றி எம்மை ஈடுப்படச்செய்யும் வழிமுறையாகும். இவ்வூழியம் செய்வதற்கு நீங்கள் வயதானவர்களாகவோ அல்லது இளையவராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. அல்லது நோயாளியாகவோ, ஊனமுற்றவராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. இது தேவனின் உலக காரியத்திற்கான பங்காளியாவதோடு தடைகளற்ற செயற்பாடாகும்.

## ஒரு ஜெப திட்டம்

கீழ்வரும் ஜெபதிட்டத்தை ஒரு குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ சர்வலோக பரிந்து மன்றாடலுக்காக பயன்படுத்த முடியும். இது சரியான ஒரு குறிக்கோளோடு உங்கள் ஜெபத்தை மேற்கொள்ள உதவும். இது ஒரு மணித்தியால நேர ஜெபத்திற்குரியது. இது உங்களுடைய ஜெபத்தை நோக்கமாகக் கொண்ட அட்டவனையாகும். நீங்கள் நேர கட்டுப்பாட்டினை தனிப்பட்ட விதத்தில் தேவன் அதைக்குறித்த பாரத்தை ஏற்படுத்திவரை அதிகரிப்பதில் தவறில்லை. இயேசுவின் பெயரால், அவர் ஜெபிக்கும்படியாக கூறியிருப்பதால் அவரின் பெயரில் ஜெபிக்க மறவாதீர்கள். உங்களுடைய ஜெபமானது அவரது திட்டத்திற்கு விஷேட காரணமாகவும், ஏற்ற காரணமாகவும் அமையும்.
.

## ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், விஷேட ஜெபத் தேவைகள் என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்:

விசேட ஜெப தேவைகளை ஜெபிப்பதற்காக குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அவை தேவனுடைய உலகளாவிய குறிக்கோளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சர்வலோக பரிந்து

மன்றாடலானது மாறுப்பட்ட விண்ணப்பங்களைபோல, ஜெபிப்பதற்கு சாதாரண ஜெப வேளையல்ல. அது பரிந்து மன்றாடும் விசேஷித்த நோக்கம் கொண்ட உலகின் தேசங்களுக்கான விண்ணப்பமாகும்.

## தேவனை துதியுங்கள்: (10 நிமிடம்)

நாம் தேவனுடைய சமூகத்திற்குள் நன்றியோடும் துதியோடும் பிரவேசிக்க வேண்டும்.

> **அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். (சங்கீதம் 100:4)**

துதியானது தேவ சமூகத்தை உங்கள் முன் கொண்டு வரும். அதனால் தேவன் உங்கள் விண்ணப்பங்களை கேட்க முடியும். தேவன் யார் என்பது குறித்தும் அவர் செய்ததை குறித்தும் துதியுங்கள். உங்கள் துதியில் தேவனுடைய பிரதான உலகளாவிய திட்டத்திற்காகவும் அதில் உங்களுடைய பங்கிற்காகவும் தேவனை துதியுங்கள். சங்கீதக்காரன் தாவீது கூறுகின்றான் "அவர் சமூகம் முன் சங்கீதத்தோடு வாருங்கள்". நீங்கள் உங்கள் துதிகளை தேவனுக்கு பாடல்களாக செலுத்த முடியும். அதுபோல ஜாதிகளைப்பற்றி தேவனுடைய நோக்கத்தை கூறும் பாடல்களையும் நிறுத்தி பாட முடியும்.

## உலகத்திற்கான பொதுவான பரிந்து மன்றாடல்: (10 நிமிடங்கள்)

ஜெபிப்பதற்காக வேண்டியதற்கான சில விசேஷகுறிப்புக்கள் இங்கு உள்ளன. ஜெபியுங்கள்:

உலகமானது புதிய ஆவிக்குரிய தாகத்தை பெற்றிட

உலகளாவிய சர்வலோக மன்றாட்டு வீரர்களை தேவன் எழுப்ப வேண்டும் என்பதற்காக

உலகளாவிய ரீதியில் அனைத்து சபைகளிலும் வளர்ச்சியடையவும் அபிவிருத்தியடையவும்

தேவன் தம்முடைய அறுவடைக்காக வேலையாட்களை ஏற்படுத்தபோதகர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், அப்போஸ்தலர்கள், ஆசிரியர்கள், உதவியாட்கள்--தேவ கட்டளையை நிறைவேற்ற (மத்தேயு 9:38; லூக்கா 10:2)

சபைக்குள்ளும் ஊழியங்களுக்குள்ளும் ஐக்கியமும் ஒற்றுமையும் ஏற்பட வேண்டுமென

இழந்து போனவர்களை மீட்டுக்கொள்ள, ஐக்கியமான எழுப்புதல் தாகம் ஏற்பட

விசுவாசிகள் நற்செய்தியை கொண்டு செல்லத்தக்க வழிவகைகளை திறம்பட ஞானமாய் பயன்படுத்த வேண்டும் தேவனிடம் அதற்குரிய நிதிவசதிகளை கேளுங்கள். அதனை கொடுப்பதற்கு அநேகரை தேவன் நியமிக்க ஜெபியுங்கள்.

திறவுங்கள் "மூடப்பட்டிருக்கும் கதவுகள்" சுவிசேஷத்திற்காக திறக்கப்படவேண்டும் (எபேசியர் 6:19)
"பூட்டப்பட்ட தேசங்கள" சுவிசேஷத்திற்காக திறக்கப்பட வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:1)

சுவிசேஷத்தை கேட்பவர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவர்களாக வேண்டும். (ரோமர் 15:30-31)

நற்செய்திப் பணிக்கு தடையாக உள்ள உலக காரியங்கள்.

அரசாங்கள், தேச தலைவர்கள் போன்றோரின் உள்ளங்கள் ஊழியத்திற்காகவும் சுவிசேஷபணிக்காகவும் இணங்க வேண்டும்.

உதவியாட்கள் புது சபைகளையும் ஊழியங்களையும் கட்ட வேண்டும். கிறிஸ்துவின் மேலுள்ள பற்றிற்காகவும், தங்கள் ஊழியத்தின் நிமித்தமாகவும் சிறை வைக்கப்பட்டுள்ள அல்லது துன்பப்படுகின்ற விசுவாசிகளுக்காகவும்

உலகம் முழுவதும் செயற்படும் வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்களின் பணி குறித்து

முழு உலகிலுமுள்ள கிறிஸ்தவ தொடர்பாடல் கற்கைகள், பயிற்சியளிக்கும் நிலையங்கள், மற்றும் வேதாகம கல்லூரிகள்

தேசிய கிறிஸ்தவ ஊழியர்களுக்காக

சிலுவை கலாச்சார ஊழியர்களுக்காக

வாலிப மக்கள் மத்தியில் தேவனின் செயற்பாட்டிற்கு. ஏனெனில் எதிர்கால சபை தலைவர்கள் அவர்களே.

உலகில் ஒவ்வொரு தேசங்களையும், கிராமங்களையும் சென்றடையத்தக்க சரியான கட்டமைப்பு வெளிப்படுத்தப்படும் படியாக. அவைகள் அவ்விடங்களில் ஊழியம் செய்வோருக்கு வெளிப்படும்படியாக. ஊழியம் குறித்த ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்களுக்காகவும் கட்டமைப்புகளுக்காகவும் ஜெபியுங்கள்

சாத்தானின் தாக்குதல்களுக்கு அகப்படும் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். விசுவாசிகளுக்கு மற்றும் தேசங்களுக்கு எதிராக செயற்படும் சாத்தானின் செயற்பாடுகளை கட்டுங்கள். சுவிசேஷத்தை எதிர்ப்போர் விடுதலையாகும் படியாகவும் (ரோமர் 15:30-31; 2தெசலோனிகேயர் 3:2)

வேதாகம உலக நோக்கு விசுவாசிகளிடையே செல்லவும் அவர்கள் விசுவாசித்து பங்குபற்றவும் தேவ திட்டத்தை நிறைவேற்ற செயற்படவும் படியாக

தனிப்பட்ட வேலைகளிலுள்ளோரும் வேறு தேசங்களில் வேலை பார்ப்போரும் நற்செய்தியை பரப்பும் படியாக

விசுவாசிகளே உலகிலுள்ள பல்லேறுப்பட்ட சமயங்களில் ஊடுருவும் சேனைகள். அவர்கள் வல்லமையாக சுவிசேஷத்தை பரப்பும் படியாக

நற்செய்தி பரப்பும் வேலைகளில் ஈடுபடும் ஒலி,ஒளிப்பதிவுக் கூடங்கள், ஒளி, ஒலி நாடாக்கள், கிறிஸ்தவ வானொலி மற்றும் தொலைக்காட்சி சேவை நிறுவனங்களுக்காக

மருத்துவ மற்றும் சமூக தொண்டு வேலைகள் செய்வோர். இதற்குள்ளாக மருத்துவ தொண்டு வேலைகளும் உள்ளடங்கும். மருத்துவ, அறிவியல் வேலை செய்வோருக்கூடாகவும் சுவிசேஷம் பரவும்படியாக

உலகின் பகுதிகளிலுள்ள மிஷனரி விமான சேவை நிறுவனங்கள், அர்ப்பணிப்புக்கள், விமானங்கள் மற்றும் மிஷனரி விமான சேவையாளர்கள்.

உலகில் உள்ள குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகள் மத்தியில் நடைபெறும் சேவைகள்

தேசங்களையும் பிரதேசங்களையும் கட்டி வைத்துள்ள சாத்தானின் அந்தகாரத்தை கட்டுதல். இவ்விதமான சக்திகள் பேர்சியாவின் அரசன் முன்னால் வெளிப்பட்டதை தானியேல் புத்தகம் வெளிப்படுத்துகின்றது. சிற்சில அந்தகார சக்திகள் பல பிரதேசங்களில் கிரியை செய்கிறது மற்றும் விசுவாசிகள் செல்ல முடியாத நற்செய்தி ஏற்றுக்கொள்ளப்படாத பகுதிகள்.

## உலகில் ஒரு குறித்த பிரதேசத்திற்காக பரிந்து பேசும் ஜெபம்: (10 நிமிடம்)

உங்கள் ஜெபகுறிப்பில், குறித்த கண்டம் அல்லது தேசத்தை குறிப்பிடுங்கள். நீங்கள் விசேஷமாய் ஜெபிப்பதற்கு பல்வேறு அமைப்புகளைப்பற்றியும், பிரதேசம் குறித்த, மக்களைக் குறித்த விசேஷித்த தகவல்களை சேர்த்துக் கொள்ளுங்கள். அதை குறித்து அறிய “மேலதிக படிப்பு” பற்றிய இறுதி குறிப்பை கவனியுங்கள்.

கீழே ஒவ்வொரு ஜாதிகளுக்கான சில விசேஷித்த காரியங்கள் ஜெபிப்பதற்கு தரப்பட்டுள்ளன:

நடைபெறும் நிகழ்வுகள். குறித்த இடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் மூலம் அல்லது அவ்விடத்தில் உள்ள கிறிஸ்தவ ஊழியர்கள் மூலம் ஜெபக்குறிப்புக்களை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

அப்பிரதேசங்களிலுள்ள சபைகளுக்காக.

அப்பகுதியில் ஆவிக்குரிய அறுவடையில் ஈடுபடும் ஊழியர்களுக்காக. இதில் சபை ஸதாபிப்போர், தேசிய ஊழியர்கள், பயிற்சியளிக்கும் நிலையங்கள், மிஷனரிகள், வேத மொழிப்பெயர்ப்பாளர் ஆகியோர் உள்ளடங்குவர்.

அப்பகுதியிலுள்ள அனைத்து விசுவாசிகளுக்காக.

அப்பகுதியிலுள்ள சந்திக்கப்படாத அனைத்து மக்களுக்காக.

அப்பகுதியியை கட்டுப்படுத்தும் சாத்தானின் வல்லமையை கட்டுவதற்காக; அவ்வித வல்லமைகள் நற்செய்தியை பரப்புவதற்கும் எதிராகவும், சுவிசேஷத்தை தேசத்தில் தடைசெய்யவும் கிரியை செய்து வருகின்றன.

எல்லா சமூகங்களிலும், பொதுவாக தனிப்பட்டவர்களையும் மற்றும் தேசத்தின் முழு சமுதாயத்தையும் சிந்திக்க வைக்கும் ஏழுவித காரியங்கள் காணப்படுகின்றன. அவைகள் வீடும் குடும்பமும், சபை, கல்வி, பொழுதுபோக்குக்கும் கலையும், தொடர்பு சாதனம், அரசாங்கம், வர்த்தகம் ஆகும். தலைவர்களினை காண்பிப்பதற்கு ஆவிக்குரிய தன்மையை கண்டறியவும் இவை உதவும்.

## குறித்த மிஷனரிக்காக அல்லது நிறுவனத்திற்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)

மிஷனரியுடன் அல்லது மிஷன் அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பதற்கும் நீங்கள் ஜெபிக்கவும் குறிப்பிட்ட தேவைகள் குறித்து அவதானமாக உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களது செய்தி

அறிக்கை அல்லது ஜெபவிண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள உங்களது பெயரை அவர்களுக்கு அறிவியுங்கள்.

### சந்திக்கப்படாத ஒரு மக்கள் குழுவிற்காக ஜெபியுங்கள்: (10 நிமிடம்)

சந்திக்கப்டாத ஐந்து பிரதான மக்கள் குழுக்களாவன: பௌத்தர்கள், இந்துக்கள், ஆதிவாசிகள், முஸ்லிம்கள், சீனர்கள்.

இக்குழுக்களுக்கு ஆவிக்குரிய தாகம் ஏற்பட வேண்டும் என ஜெபியுங்கள்.

இக்குழுக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.

ஒவ்வொரு தனிப்பட்ட குழுக்களும் சந்திக்கப்படகூடிய வழிவகைகள் வெளிப்படுத்தும் படியாக ஜெபியுங்கள்.

இக்குழுக்களை சந்திக்கவும், சந்திக்க முயற்சிகளை எடுப்பவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

### தனிப்பட்ட ஜெப தேவைகள்: (10 நிமிடம்)

உங்களுடைய தனிப்பட்ட தேவைகள் உலகத்தோடு தொடர்புபடுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எவ்வாறு உங்கள் தனிப்பட்ட தேவைகள் தேவனுடைய உலகளாவிய திட்டத்தை நிறைவேற்ற கூடும்? உங்களுடைய பங்கு என்ன? எவ்விதத்திலாயினும் உங்களுடைய தனிப்பட்ட தேவைகளில் அதிகமானவை தேசங்களுக்காக தேவ திட்டத்தில் அடிப்படையில் அமைவது அவசியம். தேவனிடமிருந்து நீங்கள் நிறைவேற்றக் கூடிய இராஜ்ஜியத்தின் நற்செய்தி மூலமாக தேசத்தை சென்றடையும் வழிமுறைகளை கண்டறிந்து கொண்டு தொடருங்கள். எவ்வாறு இதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக்கொள்ள முடியும்? எவ்வாறு இதனை இப்பொழுது ஆரம்பிக்க முடியும்? எவ்வாறு நீங்கள் உங்கள் தனிப்பட்ட நேரத்தையும், நிதியையும் இவ்வுலக செயற்பாட்டிற்காக பயன்படுத்த முடியும்?

## ஒரு மணித்தியால ஜெபம்

சர்வலோக பரிந்து மன்றாடலில் ஒரு மணி நேரப்பகுதிகள் கீழுள்ளவாறு சுருக்கமாய் அமையும்.
- தேவனை துதித்தல்: (10 நிமிடம்)
- உலகிற்காக பொதுவாக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
- உலகின் குறிப்பிட்ட பகுதிக்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
- குறிப்பிட்ட மிஷனரிக்காக அல்லது மிஷன் அமைப்புக்களுக்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
- சந்திக்கப்படாத ஒரு மக்கள் குழுவிற்காக ஜெபித்தல்: (10 நிமிடம்)
- விசேட தனிப்பட்ட ஜெப தேவைகளுக்காக ஜெபித்தல்: (10 நிமிடம்)

## ஜெப அட்டவனையை தயாரித்தல்

ஒரு தனிப்பட்ட ஜெப அட்டவனை சர்வலோக பரிந்து மன்றாடலுக்கு உங்களை வழிநடத்தும். கீழே ஓர் சிறந்த ஜெப அட்டவனை தயாரிக்க நியதிகள் சில தரப்பட்டுள்ளன.

### பகுதி ஒன்று - ஒரு ஜெப திட்டம்:

இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ள “ஜெப திட்டத்தின்” உங்கள் சர்வலோக ஜெப திட்டத்திற்காக பிரதி பண்ணிக்கொள்ளுங்கள். இதனை உங்கள் ஜெப அட்டவனையோடு வைத்திருப்பது உங்கள் ஜெப

நேரத்தை கொண்டு செல்ல இலகுவாக்கும்.

**பகுதி இரண்டு - பொதுவான உலகம்:**
பொதுவான உலக ஜெபத்திற்கான குறிப்புக்களை இப்பாடத்திலிருந்து எடுத்து அதனை உங்கள் ஜெப அட்டவனையோடு இணைத்துக் கொள்ளுங்கள். அத்தோடு கூட உங்கள் உள்ளத்தில் வெளிப்படுத்தப்படும் வேறு ஜெப தேவைகளையும் இதனோடு இணைத்துக் கொள்ளுங்கள்.
ஓர் உலகப்படத்தின் பிரதியை உங்கள் ஜெப அட்டவனையின் பகுதி இரண்டோடு இணைத்துக் கொள்ளுங்கள். அப்படத்தில் உங்கள் கைகளை வைப்பதின் மூலம் ஜெபத்தில் நீங்கள் நீங்கள் உலகத்தை சுட்டி காட்டலாம்.

**பகுதி மூன்று - குறிக்கப்பட்ட பிரதேசங்கள்:**
உலகத்தின் பல்வேறு பகுதிகள் குறித்த தகவல்களையும் படங்களையும் பெற்றுக்கொண்டு அதனை உங்கள் ஜெப அட்டவணையில் இப்பகுதியோடு இணைத்துக் கொள்ளுங்கள். அக்குறிக்கப்பட்ட தேசங்களைக் குறித்து வருகின்ற செய்திகள் அப்பிரதேசத்தில் சுவிசேஷம் வல்லமையாக கிரியை செய்ய உதவும். இவற்றிற்காக ஜெபியுங்கள்.
நீங்கள் உங்கள் சொந்த தேசங்களுக்காகவும், கிராமம் அல்லது நகருக்காக ஜெபிக்க மறந்து விட வேண்டாம். உங்கள் சொந்த தேசப்படத்தை இப்பாகத்தோடு இணையுங்கள். அதுபோல உங்களது நகரின் படத்தை அல்லது கிராமத்தின் படத்தை இப்பகுதியோடு வரைந்து இணைத்து கொள்ளுங்கள்.
உங்களது நகரில் தொலைபேசி வசதி இருக்குமாயின் இலக்கங்கள் குறிக்கப்பட்ட புத்தகத்தை உங்கள் ஜெபத்தில் பாவித்து தனிப்பட்ட நபர்களுக்காக ஜெபியுங்கள். அது போல் உங்கள் தேசத்தின், நகரின், அரச அதிகாரிகளின் பெயர்பட்டியல்களைக் கொண்டு அவர்களுக்காக ஜெபியுங்கள்.

**பகுதி நான்கு - விசேஷமான மிஷனரிகள் மற்றும் நிலையங்கள்:**
இப்பகுதியில் நீங்கள் ஜெபிப்பதற்கு விரும்பும் மிஷனரிகளின் பெயரை பிரதிபண்ணிக்கொள்ளுங்கள். அவர்களது செய்தி அறிக்கைகளை பிரதிப்பண்ணி இப்பகுதியோடு இணையுங்கள். அவர்களது தனிப்பட்ட ஜெபத்தேவைகளுக்காக ஜெபியுங்கள்.
உங்களுடைய சபையின் அமைப்பில் மிஷனரிகள் இருந்தால் அவர்களது பெயர்களை அட்டவனையாக தயாரித்து அவர்களுக்காக ஜெபியுங்கள், இயலுமானால் சிலருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும். விசேட மிஷன் அமைப்புக்களின் தகவல்களை பெற்று இப்பகுதியோடு இணைத்துக் கொள்ளவும். விஷேட ஜெப தேவைகளுக்காக ஜெபிக்கவும். உங்கள் பிரதேசத்திலுள்ள சபை பெயர்களின், கிறிஸ்தவ பயிற்சி நிலையங்களின், மிஷன் அமைப்புக்களின் அட்டவனைகளை பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களுக்காய் விசேஷமாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**பகுதி ஐந்து - சந்திக்கப்படாத மக்கள் குழுக்கள்:**
சந்திக்கப்படாமல் கதவடைக்கப்பட்ட ஐந்து மக்கள் குழுக்களின் பெயரை எழுதிக்கொள்ளுங்கள். பௌத்தர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள், சீனர்கள், ஆதிவாசிகள் ஆகியோர்களே இவர்கள்.
இவர்களை குறித்த தகவல்களை பெற்று இப்பகுதியிலுள்ள ஜெப அட்டவனையோடு இணைத்துக் கொள்ளவும்.

**பகுதி ஆறு - தனிப்பட்ட ஜெப தேவைகள்:**
கீழேயுள்ள மூன்று தலைப்புக்களை ஒரு தாளில் எழுதி உங்கள் தனிப்பட்ட ஜெப தேவை குறிப்புக்களாக தயார் செய்க:

திகதி		தனிப்பட்ட தேவை		பதிலளிக்கப்பட்ட திகதி

எழுதப்பட்ட ஜெப குறிப்பை வைத்திருப்பது ஜெப நோக்கத்தை விசேஷித்த விதமாய் அமைக்கவும், தேவன் பதிலளித்துள்ளதை அறிந்து கொள்ளவும் உங்களுக்கு உதவியாய் இருக்கும்.

## மற்றவர்களை சர்வலோக பரிந்து மன்றாடலராகவதற்கு பயிற்சியளியுங்கள்

நீங்கள் மற்றவர்களையும் சர்வலோக பரிந்து பேசும் ஜெபவீரர்களாக மாற பயிற்சியளிக்க முடியும்.

**1. வேதாகம ரீதியான உலக நோக்கத்தை காண்பிக்கவும்.**
முதலில் வேதாகம ரீதியான உலக நோக்கைப்பற்றி எடுத்துக்காட்டவும். கடைசிவரை ஒருவர் உலகைப்பற்றிய தேவ திட்டத்தின் தரிசனத்தையோ அதில் பங்குபற்றலையோ அறிந்துகொள்ளாவிட்டால் அவரால் ஒரு சிறந்த சர்வலோக பரிந்துபேசுபவராக ஆக முடியாது. அத்தியாயம் 10 எவ்வாறு வேதாகம உலக நோக்கத்தை மற்றவர்க்கு அறிவிப்பது குறித்து ஒரு பாடத்தை தருகின்றது.

**2. சர்வலோக பரிந்து பேசும் நபராக மாற்ற இந்த அத்தியாயத்தை பாவியுங்கள்.**
முதலாவது இப்பாடத்தை குறித்த நபரோடு சேர்ந்து கற்கவும். இரண்டாவது, இப்பாடத்தில் உள்ள ஜெப திட்டத்திற்கமைவாக சேர்ந்து ஜெபிக்க ஆரம்பிக்கவும். மூன்றாவது, அந்த அத்தியாயத்தில் குறிப்பிட்ட ஜெப அட்டவனை தயாரிக்க அவர்களுக்கு உதவி செய்யவும்.

**3. சர்வலோக மன்றாடலுக்கு ஓர் குழுவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.**
ஓர் குழுவில் சர்வலோக ஜெபத்திற்கான அர்ப்பணிப்பானது தொடர்ச்சியாய் நிலைநிற்கும். குறித்த நேரத்தை, தினத்தை, இடத்தை ஒன்று கூடுதலுக்காக நியமிக்கவும். இக்குழுவானது உங்கள் வீட்டிலோ, சபையிலோ கூட முடியும். உங்கள் ஜெப நேரத்தில் நீங்கள் இங்கு தரப்பட்ட ஜெபக் குறிப்புக்களை மற்றும் நீங்கள் தயாரித்த ஜெப அட்டவனையை பயன்படுத்தலாம். “மேலதிக படிப்பிற்கு” என தரப்பட்ட பகுதியில் உள்ள மேலதிக ஜெப குறிப்புக்கள் பெற அவற்றுக்கு உங்கள் தகவல்களை, குழு நபர்களை அனுப்புங்கள். இவை உங்களுக்கு தொடர்ந்த உதவுவதோடு நீங்கள் பயிற்றுவிக்கும் ஏனைய சர்வலோக பரிந்து மன்றாட்டு வீரர்களுக்கும் உதவியாக இருக்கும்.

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. "சர்வதேச பரிந்து மன்றாட்டு வீரர்" என்பது எதனை குறிக்கின்றது?

--------------------------------------------------------------------------------

3. நீங்கள் மற்றவர்களை சர்வலோக மன்றாட்டு வீரர்களாக்குவதற்கு எவ்வாறு பயிற்சியளிக்க முடியும்.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. சர்வலோக மன்றாட்டு வீரராக மாறுவதற்கு நீங்கள் எவ்வாறு உங்களை அர்ப்பணிக்க முடியும்?

--------------------------------------------------------------------------------

5. உங்களுக்கான தனிப்பட்ட பரிந்துபேசும் ஜெப அட்டவணையை நீங்கள் தயாரித்துக் கொண்டீரா?

--------------------------------------------------------------------------------

6. சர்வலோக மன்றாட்டில் மூலமாக கிடைக்கும் நன்மைகள் பற்றி இப்பாடத்தில் குறிப்பிட்ட 3 காரியங்களை தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7. சர்வலோக பரிந்துபேசும் ஜெபத்தினை குறித்து இப்பாடத்தில் ஓர் ஒழுங்குப்படுத்தப்பட்ட ஜெப அமர்வின் திட்டத்தினை விளக்குக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

கீழுள்ள அறிக்கைகள் உலக கிறிஸ்தவ சார்பான அமைப்புக்களால் தயாரிக்கப்பட்டு, சர்வலோக மன்றாட்டு வீரராவதற்கு ஏற்றவையாக காணப்படுகின்றன.

1. Operation World: இப்புத்தகம் உலக தேசங்களை குறித்த தகவல்களை தருவதோடு ஜெப குறிப்புக்களையும் கொண்டுள்ளது. இதை பெற STL Books, Box 28, Waynesboro, Georgia, 30830, U,S,A யில் பெற்றுக்கொள்ளலாம்.

2. சர்வலோக பரிந்து மன்றாடல்: மாதாந்த செய்தி அறிக்கையில் பல தேசங்கள் குறித்தும் விசேட ஜெப குறிப்புக்களே குறித்தும் வெளியிடுகின்றது. இக்குழுவினரை தொடர்பு கொள்ள எழுதுங்கள் Box 0, Pasadena, California, 91108, U.S.A

3. குறிப்பாக சந்திக்கப்படாத மக்கள் குழுக்களுக்காக ஜெபிப்பதற்கு உங்கள் எல்லைகளிலுள்ள ஜெப ஐக்கிய குழுக்களை தொடங்குங்கள். மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளுங்கள் U.S. Center for the World Mission, 1605 Elizabeth Street, Pasadena, California, 91104,U.S.A.

4. உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசங்களுக்கான ஜெப அட்டைக்காக எழுதுங்கள். 70 தேசங்களுக்கான ஆவிக்குரிய தேவைகளுக்கான ஜெபங்கள் தரப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு அட்டையும் ஒவ்வொரு நாட்டினது தகவல்ளையும் கொண்டுள்ளதால் நீங்கள் ஊக்கமாக அந்தந்த நாடுகளுக்காக ஜெபிக்கலாம். எழுதுங்கள் Inter-Varsity Christian Fellowship, 233 Langdon St., Madison, WI 53703, U.S.A.

5. விசேட ஜெபக்குழு ஐக்கயத்தோடு சேருங்கள். இங்கே இவ்வகையான குழுக்களுக்கு இரண்டு உதாரணங்கள் தரப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கான விசுவாச ஐக்கியம், 205, Yonge St., Toronto, Ontario, Canada M5BIN2 சீனாவுக்காக ஜெபிப்போம் ஐக்கியம், 1423, Grant St., Berkeley, Ca. U.S.A.

அதிகாரம் பத்து

# வேதாகம உலக கண்ணோட்டத்தை பகிர்ந்தளித்தல்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ உலகத்தின் வேதாகம கண்ணோட்டத்தை பகிர்ந்தளிக்கும் நான்கு படிமுறைகளை கண்டுகொள்ளவும்.
- ☐ விசுவாசமுள்ள ஆண், பெண்களோடு உலகத்தின் வேதாகம கண்ணோட்டத்தினை பகிர்ந்து கொள்ளவும்.
- ☐ சுவிசேஷத்திற்காக ஒரு செயற்குழுவை ஸ்தாபிக்கவும்.
- ☐ உலக கிறிஸ்தவ வேதாகம கல்வியை ஸ்தாபிக்கவும் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

## அறிமுகம்

நீங்கள் படித்த பிரகாரம், உலகத்திலுள்ள மில்லியன் கணக்கான விசுவாசிகள் இன்னும் வேதாகம ரீதியான உலகத்தின் கண்ணோட்டத்தை அறியாதிருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய குடும்பம், கிராமம், சபையென்று மாத்திரம் அவதானத்துடன் இருக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் உலகத்தை குறித்த தேவனுடைய திட்டத்தை விளங்கிக் கொள்ளாதவர்களுமாய், இத்திட்டத்தில் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கிரியைகளை செய்யாதவர்களுமாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட மக்களுக்கு எவ்விதமாக வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை பகிர்ந்து கொள்ளுவது என்பது பற்றியும், அவர்களை உலக கிறிஸ்தவர்களாக, ஒரு நோக்கம் கொண்டவர்களாக மாற்றுவதைப்பற்றியும் இவ்வதிகாரம் விளக்குகின்றது.

## விசுவாசமுள்ள மனிதர்

வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தில் தாக்கமுள்ள தொடர்பாடலை பயிற்றுவிப்பதற்காக விசுவாசமுள்ள ஆண்களையும் பெண்களையும் தெரிவு செய்து கொள்ளுங்கள்:

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

விசுவாசமுள்ள என்னும் பதத்தின் அர்த்தமானது கிரியை செய்கின்ற, நம்பிக்கைக்குரிய, உண்மையுள்ள என்பதாகும்.

எல்லோரும் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் தரிசனத்தை பகிர்ந்து கொள்ளும் போது, அங்கிருப்பவர்களில் தேவனுக்காக கிரியை நடப்பிக்கக்கூடிய,

நம்பிக்கைக்குரிய, உண்மைத்துவமுள்ள, குணாதிசயமுள்ளவர்களை தெரிந்தெடுங்கள். வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை நீங்கள் பகிர்ந்து கொள்ளும் நபர்கள், மற்றவர்களுக்கும் அதைக் கற்றுக் கொடுக்கின்ற, உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும். நாம் பெருகவும், மீள சீஷர்களை உருவாக்குவதற்கும் இதுவே ஒரே வழி.

## வேதாகமத்திற்குரியது, ஆனால் கலாச்சாரத்திற்குரியதல்ல

மற்றவர்களிடம் இருந்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றை நீங்கள் பகிர்ந்து கொள்ளும் பொழுது, உங்களுடைய சொந்த கலாச்சாரத்தின் கண்ணோட்டத்தை பகிர்ந்து கொள்ள நீங்கள் அழைக்கப்படவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட சுற்றாடலில் எப்படி காரியமாற்றுவது? ஜீவிப்பதின் மாதிரிகளை கலாச்சாரம் கொண்டிருக்கும். சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்கள், மொழிகள், ஜீவியத்தின் சகல கட்டுப்பாடுகள், என்பவற்றையும் அது உள்ளடக்கியிருக்கும். இதுதான் இந்தியாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள மக்களிடையே காணப்படுகின்ற பெரியதான வித்தியாசம்.

நீங்கள் வாழுகின்ற இடத்தின் கலாச்சாரத்தின் நோக்கம் உங்களில் காணப்படலாம். நீங்கள் செய்கின்ற காரியங்கள் யாவும் சரியானதே என நீங்கள் நினைக்கலாம். ஒரு கலாச்சாரத்தைப் பார்க்கிலும் மற்றக் கலாச்சாரம்தான் மிக உயர்ந்தது என்று நீங்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். நீங்கள் கலாச்சாரத்தை மாற்றவோ அல்லது உங்கள் வழிகளில் உயர்ந்த காரிய மாற்றத்தையோ பகிர்ந்து கொள்ளவோ அழைக்கப்படவில்லை.

உங்களது கலாச்சாரமும் நீங்கள் கடைப்பிடிக்கின்ற காரியங்களும் தேவனுடைய வசனத்தை அவமரியாதைப் பண்ணுவதற்கு வழிநடத்தப்படகூடாது என்பதையிட்டு கவனமாயிருங்கள்.

பாவத்தோடு ஜீவிக்கிறவர்களுடன் பழகி, தாக்கத்தை உண்டுபண்ண வேண்டும். நீங்கள் மக்களை அவர்களது சமய கலாச்சாரத்திலிருந்து நம்பிக்கையற்றவர்களாக மற்ற அழைக்கப்படவில்லை. உங்களுடைய நோக்கம் சமுதாயம் இரட்சிப்படைய வேண்டும் என்பதாயிராமல், ஆத்துமாக்கள் இரட்சிப்படைய வேண்டும் என்பதாயிருக்க வேண்டும். மீனவனின் நோக்கம் கடலை மாற்றியமைத்தல்ல, ஆனால் அதிலுள்ள மீனைப்பிடிப்பதே அவனது நோக்கம்.

உங்கள் கரத்திலுள்ள முக்கிய வேலையை கவனியுங்கள். உண்மையுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் கற்பியுங்கள்.

## திட்டம்

வேதாகமத்தின் உலகத்தின் கண்ணோட்டத்தை பகிர்ந்து கொள்ள நான்கு படிமுறைகள் தரப்பட்டுள்ளது.

1. தரிசனத்திற்கு மாதிரியாக இருங்கள்.
2. தரிசனத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
3. தரிசனத்தை உங்கள் ஜீவியத்தின் மையமாக வைத்துக் கொள்ளுங்கள்.
4. தரிசனத்திற்கு கீழ்ப்படியுங்கள்

ஒவ்வொரு படிமுறையையும் விரிவாக கவனிப்போம்.

### தரிசனத்திற்கு மாதிரியாக இருங்கள்:

முதலாவது, வேதாகமத்தின் உலகத்தின் கண்ணோட்டத்தை வைத்திருங்கள். இப்பாடத்தின் முக்கிய நோக்கம் இதுவே. பெரிதான கட்டளையை நிறைவேற்ற வேண்டிய உத்தரவாதத்தை எப்போது நீங்கள்

அடையாளம் காண்கின்றீர்களோ, அப்போதே உலக ஜாதிகளைக்குறித்த அவதானம் உங்கள் இருதயத்தை தொடும், அவ்வேளையில் உங்களால் தரிசனத்திற்கு மாதிரியாக இருக்க முடியும். உங்களுடைய சபை ஐக்கியத்திற்கும், நண்பர்களுக்கும் முன்பாக நீங்கள் ஜீவிக்கும் முன்மாதிரியாக மாறுங்கள். உலக ஜாதிகளைக் குறித்த உங்கடைய சொந்த அவதானத்தையும் கிறிஸ்துவைப்பற்றி நீங்கள், உங்கள் இருதயத்தில் உணர்வதையும் அவர்கள் காணட்டும். மற்றவர்களை சுவிசேஷத்தால் நீங்கள் சந்திப்பதை, அதற்காக நீங்கள் செய்யும் கிரியைகளையும் அவர்கள் காணட்டும். மிகப்பெரியதான படிப்பினைகள் வார்த்தைகளால் செய்யப்படுபவையல்ல. அவைகள் மாதிரியான வாழ்வினாலேயே செய்யப்படுகிறது. இதை நாம் இயேசுவின் வாழ்க்கையும் ஊழியமும் என்ற பாடத்தில் காண்போம்.

### தரிசனத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்:

மற்றவர்களுடன் தரிசனத்தை பகிர்ந்து கொள்ள ஒரு சில ஆலோசனைகள்:

1. உங்களுக்கு நெருக்கமாக உள்ளவர்களோடு, உங்களுடைய தரிசனத்தை தனிப்பட்ட விதத்தில் பகிர்ந்துகொள்ளுங்கள். “வேதாகம உலக கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்தல்” என்ற பாடத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும். பெரிதான ஆவிக்குரிய தேவை உலகிற்கு உண்டு என்பதையும், அதை பூர்த்தி செய்ய அவருக்கும் தனிப்பட்ட விதத்தில் பங்குண்டு என்பதை விளங்கப்படுத்தவும். ஒன்பதாவது அதிகாரத்தில் கற்ற பிரகாரம் நீங்கள் உலக ஜாதிகளுக்கான உபாயங்களை பாவித்து ஒன்றாக ஜெபிக்கவும்.

2. “உலக கிறிஸ்தவர்களை மையமாகக் கொண்ட” காரியங்களை சபை ஆராதனையின் ஒரு பகுதியாக கொள்ளும்படிக்கு உங்கள் போதகரிடம் கேட்டுக் கொள்ளுங்கள். உலகத்தின் ஆவிக்குரிய நிலையையும், சந்திக்கப்படாத மக்கள், இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இருக்கின்ற சவால்கள் என்பவற்றை ஆராதனையில் ஒரு சில நிமிடங்கள் பகிர்ந்து கொள்ளுங்கள்.

3. உங்கள் சபையில் வெளியிடப்படும் வாராந்த செய்தி அறிக்கை அல்லது முன்னறிவிப்பு அறிக்கை என்பவற்றில் வேதாகம உலக கண்ணோட்டத்தைப்பற்றிய கட்டுரைகளை பிரசுரியுங்கள்.

4. உங்கள் ஆலயத்தில் அல்லது வீட்டில் ஆராய்ச்சி மையம் ஒன்றை நிறுவுங்கள். சந்திக்கப்படாத மக்களைக் குறித்த புத்தகங்கள், உபகரணங்கள், தூதுப்பணியாளரின் கடிதங்கள், அறிவிப்பு பலகையில் உலக தேசங்களைக் குறித்த பல்வேறுப்பட்ட தகவல்கள், ஜெபப்படங்கள் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளவும். (இப்பாடமும் உங்கள் ஆய்வு மையத்தில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்)

5. உங்கள் குழுவோடு பகிர்ந்து கொள்ளக்கூடிதாக 5 வினாடிகள் கொண்ட ஒலி நாடாக்களை அனுப்பிவைக்கும் படி மற்ற தேசங்களிலுள்ள தூதுப்பணியாளர்களிடமும் சபை தலைவர்களிடமும் கேளுங்கள். அத்தேசத்தில் நடைபெறுகின்ற வேலைகளை குறித்தான புகைப்படங்களையும், ஒளிப்பதிவுகளையும் அனுப்பும்படி அவர்களிடம் கேளுங்கள்.

6. நீங்கள் வாழுகின்ற சமுதாயத்தில் பல்கழைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனங்கள் இருப்பின் அவற்றிற்கு சர்வதேச மாணவர்களை அழைத்து, அவர்களுடைய கலாச்சாரத்தையும் அத்தேசத்தின் தேவைகளையும் வந்து பகிர்ந்து கொள்ளும்படி கேளுங்கள். உங்கள்

பிரதேசத்தில் வேற்று கலாச்சார மக்கள் வாழ்ந்தால், வேறு தேசங்களிலிருந்து வந்து குடியேறியவர்களாக இருப்பின் அவர்களை அழைத்து உங்கள் குழுவுடன் தம்மைப்பற்றி பகிர்ந்து கொள்ளச் சொல்லுங்கள்.

7. சபையில் ஜெப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். எழுதப்பட்ட ஜெபவிண்ணப்பங்களை அல்லது வாய்மொழியாக ஜெபக்குழுவிற்கு கொடுங்கள். கிறிஸ்துவிற்காக உலகிற்கு ஏதேனுமொன்றை செய்ய சபையாரை தூண்டுங்கள்.

8. உலக கிறிஸ்தவ குழுவை அல்லது சுவிசேஷ குழுவை உங்கள் சபையில் ஆரம்பியுங்கள், ஒருவரையும் விட்டு வைக்க வேண்டாம். இந்த அதிகாரத்திலுள்ள "மேலதிக படிப்பினைக்கு" என்ற பகுதி உங்களுக்கு இதை விளக்கும்.

9. உங்கள் சபையில் அல்லது வீட்டில் உலகைப்பற்றி அறிந்துகொள்ளும் கூட்டங்களை நடத்துங்கள். இது சிறிய வீட்டுக்கூட்டமாக ஆரம்பமாகி தூதுப்பணி மாநாட்டைப் போன்று முடிவடையக் கூடும். தூதுப்பணி சம்பந்தமான நிறுவனங்களைச் சார்ந்தவர்களை பேச்சாளர்களாக அழையுங்கள். "உலக கிறிஸ்தவர்" சம்பந்தமான புத்தகங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக மேசைகளை வையுங்கள். (உங்கள் மேசையில் இப்பாடத்தையும் வைப்பதை நிச்சயப்படுத்தி கொள்ளுங்கள்)

10. "வேதாகம உலக கண்ணோட்டத்தினை விரிவாக்கம் செய்தல்" என்ற பாடவிதானத்தை உங்கள் முழு சபைக்கும், மற்ற சபை மக்களுக்கும் கொடுக்கும்படி உங்கள் போதகரை கேட்டுக்கொள்ளுங்கள்.

## தரிசனத்தை வாழ்வின் மையமாக வைத்துக் கொள்ளுங்கள்:

நீங்கள் பயிற்றுவிக்கும் உண்மையுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் தரிசனத்தை வாழ்வின் மையமாக வைக்கும் வாழ்வை வையுங்கள். இதை செய்ய சில ஆலோசனைகள் இதோ:

1. வேதாகம உலக கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்தலைப்பற்றிய புத்தகங்களையும், தூதுப்பணி பற்றிய புத்தகங்களையும் தொடர்ந்து வாசியுங்கள்.

2. உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் தூதுப்பணி மகா நாடுகளுக்குச் செல்லுங்கள்.

3. சுவிசேஷம் பரப்புவரை தடைசெய்கின்ற உலகில் நடைபெறுகின்ற காரியங்களை அறிந்துவைத்து உலக நாடுகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

4. உலகத்தின் பல்வேறுப்பட்ட பிரதேசங்களில் அறுவடையில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களுடைய அறிக்கைகள் உங்களுடைய உலக தரிசனத்திற்கு உணர்வூட்டும்.

5. உலக கிறிஸ்தவம் தொடர்பாக நீங்கள் சொந்த பாடவிதானங்களை உருவாக்குங்கள், அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உலக கிறிஸ்தவரின் வேதப்பாடம், உலகத்தை குறித்த வேதவசனத்தின் நோக்கத்தை முன் வைப்பதற்காக இருக்க வேண்டும்.

இந்த அதிகாரத்திலுள்ள “மேலதிக படிப்பினைக்கு” என்ற பகுதி நீங்கள் செய்ய வேண்டியதைப்பற்றி அறியத்தரும்.

## தரிசனத்திற்கு கீழ்ப்படியுங்கள்

வேதாகம உலக கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்தலும், மற்றவர்களோடு தொடர்பு கொள்ளுதலும் மட்டும் போதாது. நீங்கள் கற்றுக்கொண்டவற்றிற்கும் ஏற்ற கிரியைகளை செய்ய வேண்டும்.

> **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறதுளூ தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**
>
> **அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)**

வேதவசனத்திலுள்ள சகல கொள்கைகளையும் கற்கும் போத அவைகள் நற்காரியங்களை செய்யும் படி எம்மை ஆயத்தப்படுத்துகிறது. நீங்கள் இப்பாடவிதானத்தின் அநேக கொள்கைகளைக் கற்றுள்ளீர்கள், கிரியையில்லாத அறிவு விசுவாசமில்லாத கிரியைக்கு ஒத்ததாக உள்ளது. கிரியைச் செய்யாமல் கொள்கைகளை மட்டும் கற்பீர்கள் என்றால், அதன் பிரதிபலன் ஆவிக்குரிய மரணத்தை முடிவாக கொண்டுவரும். தரிசனத்தை பெற்றுக்கொள்வது மாத்திரம் போதாது. மற்றவர்களோடு தொடர்பாடலையும் வைத்துக்கொண்டிருப்பதும் போதாது. நீங்களும், நீங்கள் பயிற்றுவிப்பவர்களும் தரிசனத்திற்கு கீழ்படிய வேண்டும்.

சர்வதேச அறுவடை நேர நிறுவனம் இவற்றைச் செய்ய உங்களுக்கு பாடவிதானங்களை கொடுத்து உதவும். அடுத்த பாடவிதானம் “கற்பித்தலின் வியூகம்“ என்பதாகும். மற்றவர்களுடன் கற்றுக்கொண்டதை பகிர்ந்து கொள்வதெப்படி என்பதற்கான விளக்கத்தை இப்பாடம் தரும். “பெருக்குதலின் முறைகள்“ என்றபாடம் நீங்கள் பயிற்றுவித்தவர்கள் ஆவிக்குரிய முறையில் விருத்தியடைவதை காண்பிக்கும். சர்வதேச அறுவடை நேரத்தின் மற்றைய பாடவிதானங்கள், பயிற்றுவித்த உண்மையுள்ள ஆண்களையும் பெண்களையும் ஒன்று சேர்க்கவும், நிர்வகிக்கவும் உதவும். சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் “புளித்தமா சுவிசேஷத்தின் மாதிரி□ என்ற புத்தகம் சுவிசேஷத்தை பகிரும் போது அதை வல்லமையுடன் நிரூபித்து காண்பிக்க விசேட வழிகாட்டல்களைத் தரும். ஆனால் இப்பாடத்தை படித்து முடிக்கும் வரை காத்திருக்க வேண்டாம். நீங்கள் எங்கிருந்தாலும் இப்போதே தரிசனத்திற்கு கீழ்ப்படிய ஆரம்பியுங்கள். இதைச் செய்ய சில ஆலோசனைகள்:

1. உங்கள் சொந்த அயலாருடன், நகரத்தில், கிராமத்தில் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.
2. உங்கள் ஸ்தல சபையுடன் சேர்ந்து உள்ளூரில், தேசிய மட்டத்தில், சர்வதேச மட்டத்தில் சுவிசேஷம் அறிவிக்கும் வேலைத்திட்டத்தை செய்யுங்கள்.
3. உலக நாடுகளுக்காக ஜெபியுங்கள்.
4. தூதுப்பணி செய்யும் நிறுவனங்களுக்கு சிலவேளை சொந்த சபைக்கு அல்லது கணக்கொப்புவிக்கும் சுவிசேஷ சபை செய்யும் நிறுவனங்களுக்கு கொடுங்கள். சந்திக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷம் பரப்புவதற்கு கொடுப்பதைப்பற்றி அழுத்தமாக அறிவிக்க வேண்டும்.
5. உங்கள் பிரதேசத்திற்கு அப்பாலும் சந்தியுங்கள். விரிவுபடுத்தப்பட்ட ஊழியக் குழுவாக மாறுங்கள். சுவிசேஷத்தை அறிவிக்கின்ற குழுவை உருவாக்கி, மாற்று கலாச்சாரத்தை கொண்ட அயலத்தாரிடம், மாற்று கலாச்சாரத்தாரிடம், அல்லது வேறு தேசங்களுக்கு செல்லுங்கள்.

## தொடரும் சுற்றுவட்டம்

மீள உருவாக்கும் வேதாகம உலகத்தின் கண்ணோட்டம் இதோ:

பெற்றுக்கொண்ட தரிசனத்திற்கு முன்மாதிரியாக மாறுங்கள்.

தரிசனத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

தரிசனத்தை உங்கள் வாழ்வின் மையமாக வைத்துக்கொள்ளுங்கள்

தரிசனத்திற்கு கீழ்ப்படியுங்கள் → → → ↗

முதலாவதாக நீங்கள் பெற்றுக்கொண்ட தரிசனத்திற்கு முன்மாதிரியாக மாறுங்கள், பின்னர் மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு முன்மாதிரியாகவிருந்து கற்றுக்கொடுங்கள். வேதாகம உலக கண்ணோட்டத்தை உங்களது வாழ்க்கையின் மையமாகவும், நீங்கள் பயிற்றுவிக்கின்றவர்களிடமும் உங்கள் வாழ்வில் மையமாக்குங்கள். நீங்கள் தரிசனத்திற்கு கீழ்ப்படிந்து மீள உருவாக்கம் தொடர்பு கொடுக்கின்ற யாவருக்கும் முன்மாதிரியாக ஜீவியுங்கள்.

## சுய பரீட்சை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. வேதாக உலக கண்ணோட்டத்தை பகிர்கையில், எத்தகைய ஆண்கள் பெண்களிடம் நம்முடைய அவதானத்தை கவனிக்க வேண்டும்?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தை பகிர்கையின் நான்கு படிமுறைகள் என்ன?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. தேசங்களை நற்செய்தி மூலமாய் சிந்திக்கும் தரிசனத்தை பூரணமாக்க நீங்கள் செய்யத்தக்க விசேட காரியங்கள் எவை? யாரோடு நீங்கள் இதனை பகிர்ந்து கொள்வீர்கள்? சபையில் நீங்கள் எவற்றை மேற்கொள்வீர்கள். உங்கள் சமுதாயத்தில் எவ்விதம் செயலாற்றுவீர்கள்?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

# மேலதிக படிப்பிற்கு

## நற்செய்திப்பணிக்காக ஓர் குழுவை ஏற்படுத்துதல்

இப்பாடத்தில் உங்களுக்கு நற்செய்திப் பணிக்கான அமைப்பை அல்லது உங்கள் சபையில் "உலகளாவிய கிறிஸ்தவர்கள்" குழுவை கட்டியெழுப்பும் படிமுறைகள் காட்டப்பட்டுள்ளன. நற்செய்திப்பணி இன்னோர் செயல்முறையோ அல்லது சபையின் அமைப்பாகவோ இல்லை. அது சபையின் நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். இவ்வித அமைப்பை உண்டுபண்ணும் காரணம் "உலகிலுள்ள சபை" (அதிகாரம் ஆறை பார்க்கவும்) என்ற குறிக்கோளை ஐக்கியமாய் நிறைவேற்றவே.

இங்கு நீங்கள் எவ்வாறு ஓர் அமைப்பை நிறுவலாம் என உள்ளது:

### சபை போதகரோடு ஆரம்பியுங்கள்:

உங்கள் சபை போதகரை சந்தித்து அவ்வித அமைப்பை ஆரம்பிக்கும் உங்களது விருப்பங்களை கூறுங்கள். உங்கள் தரிசனத்தை கூறி நீங்கள் இப்பாடத்தில் கற்றுக்கொண்டவற்றை கூறுங்கள். அவர் ஒரு அமைப்புக்கு தலைவராக உங்களை நியமிப்பதோ அல்லது இன்னொருவரோடு சேர்ந்தோ பணியாற்ற வைக்க முடியும். சபை தலைவரின் அனுமதி பெறுவதும் அமைப்பின் வெற்றிக்கு முயற்சியளிப்பதும் உங்களுக்கு முக்கியமானதாக அமையும்.

### தற்போதைய நிகழ்வை ஆராய்தல்.

சபையின் தற்போதைய சுவிசேஷத்தின், அதாவது ஊழியங்களின் நிலை எவ்வாறு உள்ளது? கீழுள்ள காரியங்களை கவனிக்க:

**கொள்கை:**

நற்செய்திப்பணி அல்லது ஊழியங்கள் குறித்தான எழுதப்பட்ட கொள்கைகள் உங்கள் சபையில் உண்டா? இருக்குமாயின், அது சபையில் பிரதிபலிக்கும் செயல் மற்றும் நிறைவேற்றியவை உள்ளனவா?

**ஜெபம்:**

மிஷன் மற்றும் நற்செய்திப்பணி குறித்த ஜெப வேண்டுதல்களுக்காக எவ்வளவு தூரம் சபை ஜெபிக்கின்றது? மத்தேயு 9:38ல் குறிப்பிட்டுள்ளவாறு உங்கள் சபையானது ஊழியர்களுக்கு சேவை செய்கின்றதா?

**மாநாடுகள்:**

சுவிசேஷபணிக்காகவோ நற்செய்திப்பணிக்காகவோ கடந்த வருடத்தில் உங்கள் சபையினால் மகாநாடுகள் நடத்தப்பட்டனவா?

**பயிற்சி:**

உங்களது சபையானது வேதாகம உலக கண்ணோட்டத்தை குறித்து அறிவுறுத்தும் போது சுவிசேஷப்பணி குறித்த தேவையை சுட்டுகிறதா என்பதும் நற்செய்தி பகரும் தற்போதைய நிலையும் காணப்படுகின்றதா? எல்லா வயதினருக்கும் ஊழியக்கல்வி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறதா மற்றும்

எல்லாவித சபை செயற்பாடுகளிலும் உள்ளதா?

**பங்குபற்றல்:**

கடந்த காலத்தில் எந்த சுவிசேஷ, ஊழிய பணிகளில் உங்களது சபை பங்குபற்றியது? நீங்கள் உள்ளூர், தேசிய, உலகளாவிய முறையில் செய்தது என்ன? எவை வெற்றிகரமாக அமைந்தது? ஏன்? தோல்வியுற்றது எது? ஏன்?

உங்கள் சபை பங்குகொள்ளும் உள்;ர், தேசிய, மற்றும் உலகளாவிய பங்குப்பற்றலை ஆராய்க. எவை வெற்றிகரமானது? ஏன்? எவை வெற்றியடையவில்லை? ஏன்?

எவ்வாறு சபையின் ஒவ்வொர் அமைப்புகள் நற்செய்திப்பணியில் ஈடுபடுகின்றன? உதாரணமாக, வாலிபர், ஆண்கள் குழுக்கள், பெண்கள் குழுக்கள் ஆகியன. எவ்வாறு தனிப்பட்ட குடும்பங்கள் இதில் ஈடுபடுகின்றன.

**ஒத்தாசை:**

தற்காலத்தில் உங்கள் சபை எவ்வூழியர்களுக்கு உதவுகின்றது? அவர்கள் எங்கு உள்ளனர்? எவ்வித உதவிகளை நீங்கள் வழங்குகின்றீர்கள்?

**நிதி:**

நிதி ஊழியங்களுக்கும் நற்செய்திப்பணிக்கும் உங்கள் தற்கால சபையின் நிதி (காணிக்கை வரவுகள்) எவ்வளவு வீதம் செலவிடப்படுகின்றது? இதை செய்வதற்கு, கீழுள்ள தகவல்களை பூரணப்படுத்துக:

> கடந்த வருடத்தில் சபை பெற்ற காணிக்கை ரூ------------- தொகையாகும், அதில் ரூ---------- தொகை ஊழியங்களுக்கும், சுவிசேஷ பணிக்கும் கொடுக்கப்பட்டது. அதாவது ------------------ % சபையின் நிதி ஊழியத்திற்கும், சுவிசேஷபணிக்கும் கடந்த வருடம் செலவிடப்பட்டுள்ளது.

**வளங்கள்:**

மக்கள், பொருளாதாரம், சொத்துக்கள், வசதிகள் என்பவைகளை வளங்கள் உள்ளடக்குகின்றன. எவ்விதம் உங்கள் சபை வளங்கள் ஊழித்திற்கும் சுவிசேஷ பணிக்கும் பங்களிக்கின்றன.

## சபை மக்களை அறிவூட்டுதல்:

“வேதாகம உலகத்தின் கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்தல்” என்ற இப்பாடத்தின் குறிப்பை பயன்படுத்தி கற்றுக்கொடுக்கவும்.
உங்கள் பாட நேரத்தில், உங்கள் சபையின் ஊழியம் மற்றும் நற்செய்திபணி குறித்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றை பகிர்ந்து கொள்ளுங்கள். இதன்போது வகுப்பில் முக்கயமாக வேதாகம உலகத்தின் கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்யதலைக் குறித்து ஆர்வமுடைய ஆண் மற்றும் பெண்களை தெரிவு செய்யுங்கள். அவர்கள் நற்செய்திப் பணி குறித்து ஆச்சரியத்துடன் பங்குப்பற்ற முன்வருவர்.

## விசேட ஒன்றுகூடல் கூட்டத்தை நடத்துங்கள்:

விசேட ஒன்றுகூடலை கூட்டி நற்செய்திப்பணி அமைப்பை திட்டமிடுங்கள்.

**உத்தரவாதங்கள்:**

இங்கு நற்செய்திபணியை செய்யப்போகும் செயற்குழுவுக்கான உத்தரவாதங்கள் தரப்படுகின்றன.

செயற்குழுவானது:

-தனிப்பட்ட ஊழிய செயற்பாட்டில், கொடுத்தலில், ஜெபித்தலில், சபைக்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும்.
-ஊழிய, நற்செய்திப்பணிக்கு ஏற்றாற்போல் ஜெப அமைப்பை நிர்வகித்து செயற்பட வேண்டும்..
-ஊழிய, நற்செய்திப்பணிக்கு உள்ளூர், தேசிய, மற்றும் உலகளாவிய குறிக்கோள்களை ஸ்தாபித்தல் வேண்டும்
-சபையின் வளங்கள் எவ்விதத்தில் முழுவதுமாக ஊழியத்திற்கும், சுவிசேஷபணிக்கும் பயன்படும் என்பதை கவனித்தல் வேண்டும்.
-சபையில் நற்செய்தி ஊழியம் குறித்தும், சுவிசேஷபணி ஊழியம் குறித்தும் தொடர்பாடல் இருப்பது அவசியம்
-ஊழியப்பணிக்காக வருடாந்த நிதியை அளவிடுதலும், அதை சேர்க்கும் முறை மற்றும் பயன்படுத்தும் விதத்தை திட்டமிட்டு காட்ட வேண்டும்.
-நற்செய்தி ஊழியம் மற்றும் சுவிசேஷபணிக்காக வருடாந்த நாற்காட்டியை திட்டமிட்டு தயாரிக்க வேண்டும்
-நற்செய்தி சுவிசேஷபணிக்காக திட்டமிட்டு, அறிவித்து, பயிற்சியளிக்க வேண்டும்
-வருடாந்த பணி மாநாட்டை திட்டமிட்டு, அறிவித்து, பயிற்சியளிக்க வேண்டும்
-சபையிலுள்ள அனைத்து பிரிவுகளிலும் நோக்கத்தையும், நற்செய்திப்பணி திட்டங்களையும் கண்காணித்து நடத்த வேண்டும்
-ஊழியர்களை தைரியப்படுத்தும் விதத்தில் ஜெபம், கொடுத்தல், தனிப்பட்ட செயற்பாடுகள், மற்றும் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும். செயற்குழுவானது இவ்விடயங்களில் தக்க ஆலோசனை பெற வேண்டியதும் அவசியமாகும்.
-உலகின் தற்போது இடம்பெறும் நற்செய்தி ஊழிய சுவிசேஷப்பணி நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும்
-சபையின் ஒத்துழைப்புக்காக சுவிசேஷப்பணி திட்டங்களை ஊழியங்களை அறிமுகப்படுத்தி சபைக்கு வெளிப்படுத்த வேண்டும் .
-சபை ஊழியர்களுக்கும், ஊழிய நிறுவனங்களுக்கும் உதவக்கூடிய திட்டங்களை காண்பிக்கவும், வெளிப்படுத்தவும் வேண்டும்
-சபையின் மூலமாய் நடைபெறும் சுவிசேஷஊழியம் வளர, நற்செய்தி நிறுவனங்களோடும், தனிப்பட்ட சுவிஷேசகர்களோடும் தொடர்ச்சியாக தொடர்பை பேண வேண்டும்.

**ஸ்தாபன கட்டமைப்பு:**

ஸ்தாபன கட்டமைப்பிற்கான சில குறிப்புக்கள் இங்கே தரப்பட்டுள்ளன

-போதகர்:
இவ்வமைப்பை வழிநடத்திச்செல்லும் அதிகாரம் போதகருக்குண்டு, ஏனெனில் அவரே சபையின் தலைவர்.

-இயக்குனர்:
போதகரின் வழிக்காட்டலின் கீழாக கூட்டங்களை வழிநடத்துதல், ஒழுங்கமைத்தல், மற்றும் செயற்படுத்துதல் போன்றவற்றை செய்பவர். ஏனைய குழு உறுப்பினர் தமது கடமைகளை நிறைவேற்ற வழிநடத்துபவர்.

-செயலாளர்:
குழு கூட்ட அறிக்கைகள், ஊழிய நாள் காட்டி, தொடர்பாடல் போன்றவற்றை செயற்படுத்துபராவார். சபை ஈடுபடும் நிகழ்வுகளை குறித்து அல்லது மிஷனரிகளின் செயற்பாடுகளை குறித்த தகவல்களை வெளிப்படுத்தி செயற்படுவார்.

-நிதி சேகரிப்பு தலைவர்:
ஊழியத்திற்காகவும், நற்செய்திப்பணிக்காகவும் பொருளாதாரநிதி உயர்வுக்காக வழிகாட்டுவார்.

-பொருளாளர்:
ஊழியத்திற்காக சுவிஷேசப்பணிக்காக நிதிதிட்டத்தை தயார்படுத்துவார். ஸ்தாபனகட்டமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட பின் ஊழியர்களுக்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ நிதியினை கையளிப்பார்.

-ஜெப தலைவர்:
ஊழியத்திலும் சுவிஷேச பணியிலும் இருக்கின்றவர்களுக்காக, ஜெப தேவைகளுக்காக ஜெபிக்க சபை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஒரு செயற்குழுவையும் அமைத்து ஜெபத்தால் வருகின்ற பதில்களையும் கவனிப்பதற்கு பொறுப்பாக இருப்பார்.

-விளம்பர அதிகாரி:
ஊழியம், சுவிஷேச பணி தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை தயாரிப்பதும், அவற்றை செய்தி பத்திரிகை, வானொலி, தொலைகாட்சி, அறிவிப்பு பலகை, துண்டு பிரசுரங்கள், சபை செய்திப்பத்திரிகை, சபை அறிவிப்பு பலகை ஆகியவற்றில் இடம்பெறவும் செய்வார்.

-பயிற்றுவிக்கும் தலைவர்.
சபையில் உள்ள மக்களை ஊழியத்திற்காகவும், சுவிஷேசபணிக்காகவும் பயிற்றுவிக்கும் பயிற்சித்திட்டங்களை இவர் மேற்கொள்வார். சபையிலுள்ள பல்வேறுபட்ட வயதினருக்கேற்பவும் ஊழிய அமைப்புகளுக்கேற்பவும் திட்டங்களை முன்னெடுப்பார். பயண வசதிகளையும் ஏற்படுத்தி எழுத்தாக்கங்கள், புத்தகங்கள், துண்டு பிரதிகள், மற்றும் ஏனைய கல்விசார் பொருட்களையும் கொண்டு, வாசிகசாலை ஒளி, ஒலிநாடா, கருவிகளுக்கூடாக நற்செய்தி பணிக்கு ஊக்கமளிப்பார்.

-மகாநாட்டு தலைவர்:
திட்டங்களுக்கு ஆதரவளித்து தூதுப்பணி மகாநாடுகளை முன்னெடுக்கவும் துணைபுரிவார்.

-உள்ளூர் பணிக்கள தலைவர்
உள்ளூர் பணிக்கு சிறைச்சாலைகள், மருத்துவமனைகள், வீட்டுக்கு வீடு, வீதியோர மற்றும் பாடசாலை ஊழியங்கள், சந்திப்புக்கள், புதிதாக மனந்திரும்பிய மற்றும் சபை விருந்தினர், விசேட பணியாக போதை மருந்து உட்கொள்வோர் மீதான ஊழியங்கள், மது பாவனையாளர் கவனிப்பு போன்றவற்றை தலைமை தாங்குவார். இவைகளுக்கு ஏற்ற செயற்பாடுகளை முன்னெடுத்து தலைமை தாங்குவார்.

-தேசிய பணிக்கான தலைவர்
தேசிய ரீதியிலான சுவிசேஷ ஊழியம், நற்செய்தி பணி நிகழ்ச்சிகளை தாங்குவார். தனிப்பட்டவர்கள் மற்றும் திட்டங்களை கவனித்து வெளிப்படுத்தி ஆதரவு பெற்றுக்கொள்வார்.
வெளியூர் சர்வதேச தலைவர்

-வெளியூர் சர்வதேச தலைவர்.
வெளித்தேச சுவிசேஷபணி, நற்செய்தி ஊழியங்களை கவனிப்பார். தனிப்பட்டவர்கள் மற்றும்

திட்டங்களை கவனித்து வெளிப்படுத்தி ஆதரவு பெற்றுக்கொள்வார்.

-பணி ஒப்படைக்கும் தலைவர்:
நற்செய்தி பணிக்காகவும், சுவிசேஷஊழியத்திற்காக தன்னார்வ தொண்டர்களை வழிநடத்துவார்.

-சபை அமைப்புக்களின் தொடர்பாளர்கள்:
பல்வேறுப்பட்ட சபையின் அமைப்புக்களிலுள்ள ஆண்கள் குழு, பெண்கள் குழுக்களிலுள்ள மற்றைய அங்கத்தினரையும் வாலிபச் சங்கம், ஞாயிறு பாடசாலை ஆசிரியர் ஆகியோரைக் கொண்ட அமைப்பில் உள்ளவர்களை பிரதிநிதிகளாக்கிக் கொள்ளுவார்கள்.

**திட்டமிடலுக்காய் ஒன்று கூடும் கூட்டம்:**
நற்செய்திக் குழுவானது சுவிசேஷம் மற்றும் ஊழியத்தில் புதிய திட்டங்களைத் தீட்டுவதற்கு குறிப்பிட்ட விதத்தில் ஒழுங்குமுறையில் கூடுதல் வேண்டும். உங்கள் ஜெபம், கலந்துரையாடல் என்பவற்றூடாக இராஜ்ஜியத்தின் நற்செய்தியை பகிரும் புதிய செயற்பாடுகளை இணங்காணுங்கள். ஒவ்வொரு குறிக்கோள்களும் இலக்குகளாகும். இலக்குகளை நியமித்தலானது உள்ளூரில், தேசிய ரீதியில், உலக ரீதியில் உங்கள் நோக்கங்களை அடைய ஏதுவாகும். (இந்த பாடம் தொடர்பாக மேலதிக விபரங்களை அறிய சர்வதேச அறுவடை நேர நிலையத்தின் Management of Objectives என்ற பாடத்தை பெற்றுக்கொள்ளவும்)

புதிய குறிக்கோள்களை உருவாக்குதல்:

**-கொள்கை:**
உங்கள் சபையில் சுவிசேஷ நற்செய்திப்பணி குறித்து எழுதப்பட்ட தீர்மானங்கள் இருப்பின், அவற்றின் இயல்தன்மையை பரிசீலியுங்கள். உங்கள் சபையில் சுவிசேஷ நற்செய்திப்பணி குறித்த எழுதப்பட்ட தீர்மானங்கள் இல்லாதிருப்பின், ஒன்றை எழுதிக்கொள்ளுங்கள். ஒரு அருட்பணி கொள்கையானது ஒரு குறிக்கோளையும், சுவிசேஷ, ஊழிய செயற்பாடுகளை வெளிப்படுத்துதாக அமையவேண்டும். சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாட புத்தகங்களில் ஒன்றான ஆயயெபநஅநெவ ழக ழுடிதநஉவளைநள என்ற பாடம் இந்த பகுதியை விபரித்து காண்பிக்கும்.

**-ஜெபம்:**
ஒரு குழுவாக அருட்பணிக்காக ஜெபியுங்கள். தற்போதைய ஜெபவிண்ணப்பங்கள் ஊழியத்தையும், சுவிசேஷஅறிவிப்பையும்பற்றி இருக்குமாயின் சபையும் அதனோடு இணைந்து ஜெபிக்க முடியும்.

**-மகா நாடுகள்:**
அருட்பணி மாநாடு பற்றி திட்டமிடுங்கள். சபையில் பல்வேறு சேதங்கள் குறித்தும் அருட்பணி இயக்கங்கள் குறித்தும் தகவல் வழங்கும் மையங்களை அமையுங்கள். மகாநாடானது ஊழிய, அருட்பணி சம்பந்தமான பிரசங்கங்களையும் உள்ளடக்குவதோடு சபை உதவிபுரியும் அருட்பணி, இது சம்பந்தமான ஒலி, ஒளி நாடாக்கள், காட்சி அமைப்புக்கள், படங்கள் போன்றவற்றை கொண்டிருக்கும்.
பொருளாதார வசதிக்கேற்ப அருட்பணி மகாநாடு குறித்து பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சியிலில் விளம்பரம் செய்யுங்கள். கொடிகள், பிரசுரங்கள், பதாதைகள் ஆகியவற்றை பாவியுங்கள். மகாநாடுகள் குறித்து சபையின் ஆராதனையின் பின்பும், சபை வெளியிடும் வாரந்த சபை பத்திரிக்கையிலும் குறிப்பிடுங்கள்

**-பயிற்சி:**
வேதாகம உலக கண்ணோட்டத்தை விரிவாக்கம் செய்ய வகுப்புக்களையும், வேதபாட

வகுப்புக்களையும் நடத்துங்கள். இப்பாடங்களில் அருட்பணி செய்ய வேண்டிய அவசியத்தைக் குறித்தும், நற்செய்திப்பணியின் தற்போதைய உலக நிலை குறித்ததுமான நோக்கத்தையும் காட்டுதல் அவசியமானதாகும். இப்பாடத்தை கற்றலுக்கு துணையாக கொளளுங்கள்.
ஒரு வருடத்திற்கான அருட்பணி, ஊழியம் குறித்த திட்டங்களை தயாரியுங்கள். ஒவ்வொரு மாதமும் வேறு அருட்பணியாளர், தேசம், அருட்பணி அமைப்பு குறித்து காட்டலாம்.
புத்தகங்கள், அறிக்கைகள், ஒளி ஒலி நாடாக்கள் என்பனவற்றில், அருட்பணி குறித்தும் நற்செய்தி பணி குறித்தும் அறிவுறுத்தும் வாசிகசாலையொன்று ஆரம்பிக்க.

**-பங்குபற்றல்:**
நற்செய்திப்பணி பரப்புவதை குறித்து உங்கள் சபையின் பங்களிப்பு தற்போதும் இதற்கு முன்னரும் எவ்வாறு அமைந்தது என்பதை ஆராய்ந்து அறிவியுங்கள். உங்களால் உள்ளூரில், தேசிய ரீதியில், உலகளாவிய ரீதியில் செய்யக்கூடிய காரியங்களை ஜெபத்துடன் செய்ய ஆரம்பியுங்கள்.
கடந்த காலத்தில் வெற்றிப்பெற்ற நிகழ்ச்சிகள் எவை? அவற்றை மீளவும் நடைப்பிக்க விரும்புகின்றீர்களா? தற்போது வெற்றி பெறும் நிகழ்ச்சிகள் என்ன? உங்களால் நிர்வகிக்கப்படும் அருட்பணி குறித்த புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை? கடந்த காலங்களில் நீங்கள் அடைந்த தோல்வியான அனுபவங்களும் அதினால் எதிர்காலத்தில் அதை தடுக்கக் கூடிய முறைகள் என்ன?
அருட்பணியிலும் நற்செய்தி ஊழியத்திலும் உள்ள அனைத்து வயதினரையும், குழுக்களையும் சந்திக்கவும். இவர்களை சந்தித்துக் கொள்ள ஒவ்வொரு குழுக்களிலிருந்தும் நீங்கள் ஒரு பிரதிநிதியை தெரிவுசெய்து, நற்செய்தி ஊழிய ஒன்று கூடலுக்கு அழைப்பு விடுங்கள். அப்பிரதிநிதிகள் தங்கள் குழுக்களில் இத்தரிசனத்தை மற்றும் திட்டங்களை தெரியப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

சபைக்கு வரும் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பங்களையும் பங்குபற்றலில் ஈடுபடுத்த கீழ்வரும் ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளுங்கள்.

தனிப்பட்ட குடும்பங்கள் தங்கள் வீடுகளில் உலகப் படத்தை ஒட்டி அதில் தங்கள் ஜெபிக்கும் மிஷனரிகள் உள்ள பகுதியை அடையாளப்படுத்தி வைக்கச் செய்யவும்.

குடும்பங்கள் தங்கள் வீடுகளில் அருட்பணியாளர்களை, சர்வதேச மாணவர்களை, வெளிநாட்டு விருந்தினர்களை அழைத்து மகிழ்ச்சிப்படுத்தவும்.

தற்காலிக பராமரிப்பின் பொருட்டு தங்குமிட வசதி அல்லது போக்குவரத்து வசதிகளை அருட்பணியாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவும்.

வீட்டு அடையாள பலகையில், பதாகைகளில் அருட்பணி ஊழியத்தை விளம்பரப்படுத்துக.

அருட்பணி புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் கொண்டு வீட்டுபுத்தகசாலையை ஏற்படுத்துங்கள்.

அருட்பணி ஊழியத்துக்காக தினமும் குடும்ப அங்கத்தினர் சேமிக்கும் பொருட்டு உண்டியல் அல்லது வங்கி கணக்கை வீட்டில் ஏற்படுத்துங்கள்.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அருட்பணி ஊழியர்களின் விலாசங்களை கொண்ட பட்டியலை கொடுத்து, அருட்பணியாளர்களை ஊக்குவிக்கும்படியும், தொடர்பு கொள்ளவும் சர்ந்தர்ப்பங் கொடுங்கள்.

பொருத்தமான மிஷன் நிறுவனத்திற்கூடாக, அருட்பணி ஊழியம் நடைபெறும் இடத்தை பார்க்க சுற்றுலாவை ஒழுங்கு செய்யுங்கள்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உள்ளூர் அருட்பணியிலும், நற்செய்திப் பணியிலும் செயற்பட ஊக்குவிக்க வேண்டும்.

குடும்ப ஜெபத்தின் போது அருட்பணி, நற்செய்தி ஊழியம் குறித்து நினைவுப்படுத்தி ஜெபிக்க வையுங்கள்.

**ஒத்துழைப்பு:**
உங்கள் சபை உதவக்கூடிய அருட்பணியாளர்களை அதிகரிக்கச்செய்வதோடு அல்லது உங்கள் ஒத்துழைப்பை கூட்டுங்கள். குறுகிய கால பணிக்காக உங்கள் சபையிலிருந்து குழுக்களை அனுப்புங்கள்.

**நிதி திட்டமிடல்:**
நிதி வீதமானது, அதிகமானதாக அருட்பணி, நற்செய்திப்பணி ஊழியத்திற்கு செல்லத்தக்கதாக திட்டமிடுங்கள். உதாரணத்திற்கு, சபையின் சவால் மிக்க அங்கத்தவர்களுக்காக அதற்கென பின்வரும் அட்டவனையை பயன்படுத்துங்கள்.

> ஒவ்வொரு அங்கத்தினராலும் நாளொன்றிற்கு ரூ............ ஊழியத்திற்கும், எங்களால் (............அங்கத்தவரால் ஒரு நாளுக்கு ரூ............ கொடுப்பதோடு 365 நாட்களுக்கு நாளுக்கும் ரூ............ வாகும் ) மொத்தமாக ரூ............ வருடத்திற்கும் கொடுக்க முடியும். .

உதாரணத்திற்கு, அமெரிக்கா நாட்டில் ஒவ்வொரு நபரும் 10 சதப்படி 200 பேருக்கு சபைக்கு ஒரு வருடத்திற்கு கொடுத்தால் சபையானது அருட்பணிக்காக மேலதிகமாக ரூபா7,300.00 பெற்றுக்கொள்ளும்.

உங்கள் தற்போதைய நிதியை ஆராயுங்கள். அருட்பணிக்கும், ஊழியத்திற்கும் நிதி சேரும்படிக்கு எந்த காரியத்தின் செலவுகள் குறைக்கப்பட முயற்சிக்க வேண்டும். உங்கள் நிதியின் திட்டமிடலால் உள்ளூர், தேசிய உலகளாவிய அருட்பணிக்கு செல்லும் நிதியின் வீதத்தினை கணக்கிடுக.

**ஆதாரங்கள்:**
அருட்பணிக்காகவும், நற்செய்தி ஊழியத்திற்காகவும் உங்கள் சபையில் உள்ள ஆதாரங்களை இணங்காணுங்கள். ஆதாரங்கள் எனப்படுவது மக்கள், நிதிகள், பொருட்கள், வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கும். உங்களுடைய திட்டங்கள் சிறப்புற எவ்விதமாக நிதியை பயன்படுத்துவீர்கள் எனவும் ஆராயுங்கள்
.

## நற்செய்திப்பணிக்கான அமைப்புக்களை தொடர்ச்சியான ஒன்றுகூடுதலுக்காக கூட்டுதல்

1. ஆரம்ப ஜெபம் மற்றும் வேத வாசிப்பு.
2. முன்னைய கூட்டத்தில் குறிப்பினை வாசித்தல் (காரியதரிசி).
3. பொருள் நிதி திட்ட அறிக்கை.

4. மாகாண அறிக்கை குறித்த செயலமர்வு.
   -உள்ளூர் அருட்பணி தலைவரின் அறிக்கை.
   -தேசிய அருட்பணி தலைவரின் அறிக்கை.
   -உலகளாவிய தலைவரின் அறிக்கை.
5. விசேட அறிக்கைகள்.
   -நிதி சேகரிப்பு.
   -வருடாந்த அருட்பணி மகாநாடு.
   -பயிற்சி.
   -ஊழியம் நற்செய்திப்பணி குறித்த ஏனைய சபை பிரிவுகளின் அறிக்கைகள்.
6. ஏனைய செயற்பாடுகள்.
   -மேல்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படாத ஏனைய செயற்பாடுகள்.
7. போதகரினால் முடிவான சுட்டிக்காட்டுதல்கள்.
8. ஜெபத்திற்கான நேரம் மற்றும் அருட்பணிக்காக நற்செய்தி ஊழியத்திற்காக பரிந்து பேசுதல் ஜெபத்தலைவரால் நடாத்தப்படுதல்.

## சபையோடும், சமூகத்தோடும் தொடர்பு கொள்ளுதல்:

தரிசனங்கள், இலக்குகள், சவால்கள், மற்றும் செயற்பாடுகளை சபை மற்றும் சமூகத்திற்கு தொடர்புகொள்ளும் மூலமானது:
-ஊடகங்கள்: வானொலி, தொலைக்காட்சி, மற்றும் பத்திரிக்கை அறிவித்தல்கள்.
-குறியீடுகளும் பிரசுரங்களும்: சமூகத்திற்கும், சபைக்கும் உள்ளேயும் வெளியேயும் வைத்திருத்தல்.
-ஒவ்வொரு தேசத்திற்குரிய கொடிகளும் பதாதைகளும்.
-சபையின் புத்தகசாலையில் ஒலி நாடாக்களும், புத்தகங்களும் வைத்திருத்தல்.
-இலக்கியங்கள், பிரசுரங்கள், அறிவித்தல் குறிப்புக்கள், மற்றும் புத்தகங்கள்.
-சபையின் வாராந்த அறிக்கையில் ஊழியம் குறித்த அருட்பணி குறித்த செய்திக் குறிப்புக்கள்.
-செய்தி கடிதங்கள், மற்றும் விசேஷித்த கடிதங்களை சபை மக்களுக்கு அனுப்புதல்
-அறிவித்தல் பலகையில் படங்கள், சபை உதவியளிக்கும் செயற்பாட்டு கடிதங்கள், அருட்பணி பற்றியதும் நற்செய்தி ஊழியம் குறித்ததுமாகும் மற்றும் கூட்டங்கள், திருப்பணி அடையாளங்கள், இலக்குகள் மற்றும் சுலோகங்கள்.
-சபை நடவடிக்கையில் பிரசங்க பீட அறிவிப்பு.
-அருட்பணியாளர் விபரக்கொத்து, பெயர், விலாசம், அருட்பணியாளரின் குடும்பபடம், குடும்ப அங்கத்தவர் விபரம், வயது, பிறந்த தினம், சேவை புரியும் இடம், மற்றும் மிஷனரி ஈடுபட்டுள்ள ஊழிய செயல் விபரம் உள்ள விபரக்கொத்து தயாரித்தல்.
-வரைபடங்கள், உலகமும் மற்றும் பல்வேறுப்பட்ட தேசங்கள் குறித்ததுமான சபையின் திருப்பணியாளர் செயலாற்றுகின்ற அருட்பணி, நற்செய்தி ஊழிய படங்கள்.

## உலக கிறிஸ்தவ வேத பாடங்கள்

“உலக கிறிஸ்தவம்” வேதபாடங்கள் உலக வேதாகம நோக்கை உங்கள் வாழ்கையிலும் ஊழியத்திலும் கொணர உதவியாயிருக்கும். அவை உங்கள் தரிசனத்தை மற்றவர்களோடு பகிர்வதற்கு உதவியாக அமையும். இப்பாடங்களை மேம்படுத்த சில குறிப்புக்கள் தரப்படுகின்றன:

**வேத பாடங்கள்:**
அதிகாரம் 4,5,6 ஆகியவற்றினை இப்பாடத்திற்கு விசேட கருவிகளாகக் கொண்டு வேதாகம உலக நோக்கை மற்றும் உலகம் வார்த்தையிலுள்ளது என்பவற்றை உபயோகிக்க. வசனத்தை தனிப்பட்ட

ரீதியில் கற்றுக்கொள்ளும் நீங்கள் குறித்த வசனத்தில் உள்ள தேவனின் உலக குறிக்கோளை வெளிப்படுத்தும் பிரதான வசனங்களை பார்க்க:
ஜாதிகள்-புறஜாதிகள்-ஆதிவாசி-மக்கள்-உலகம்-நாடு-உலகத்தின் முடிவு

ஒவ்வொரு வேத பகுதிகளை படித்து முடித்தப்பின் கீழ்வரும் வேள்விகளுக்கு பதிலளிக்கவும்:

-இப்பகுதி உலக ஜாதிகளுக்காக எவ்விதத்தில் தேவனின் கரிசனையை காண்பிக்கின்றது?
-இப்பகுதி உலகை குறித்து எதனை வெளிப்படுத்துகின்றது?
-இப்பகுதி உலகிலுள்ள ஜாதிகளுடன் தேவன் இடைபடும் விதத்தை எவ்வாறு வெளிக்காட்டுகிறது.
-இந்த பகுதியில் உலகத்திற்கான தேவனின் செய்தி எதுவென காண்பிக்கின்றது?
-தேவனுடைய உலக நோக்கத்தை வெளிக்காட்டும் இந்த பகுதியில் மேலும் இஸ்ரவேல், சபை, தனிப்பட்ட விசுவாசி குறித்து காண்பிக்கப்படுபவை யாவை?
-இப்பகுதியில் உலகைகுறித்து நோக்கும் பிரதான வசனங்கள் யாவை? உதாரணத்திற்கு, யோவான் 3:16ம் வசனத்தில் “உலகம்” என்பதே பிரதான சாவியாகும். தேவனுடைய அன்பு விசேஷமாக உலகத்திற்கு காட்டப்பட்டது. இதன் காரணமாகவே தேவன் அனைத்து மனிதருக்கும் பாவத்தை நீக்க சிலுவையில் மரித்தார்.
-உலகை கிறிஸ்துவின் நற்செய்தியால் நிரப்ப இவ்வேதபகுதி உலகோடு தொடர்புடைய விசுவாசிகளிடம் விசேடமாக பிரதிபலிக்க வேண்டிய அழைப்பை தருகிறதா? எவ்வித கிரியைகளை அழைத்தலின் காரணமாய் நாம் செயற்படுத்த வேண்டியுள்ளது?

### வேதாகம மனிதரைப்பற்றிய பாடங்கள்:

விசேட முக்கிய வேத மனிதர் குறித்த தேவனுடைய உலக திட்டத்தில் வெளிச்சத்தில் அவர்கள் பங்கை கற்றுக்கொள்க. வேத மானிடர் குறித்த பாடத்தில், நீங்கள் கீழ்வரும் கேள்விகளை கேளுங்கள்.
-தனிப்பட்டவர்களுக்கு தேவன் கொடுத்த விசேட பொறுப்பு என்ன?
-உலகின் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்ற இப்பொறுப்புக்கள் எவ்விதம் உதவும்?
-வேத மனிதர்களின் குணாதிசயமானது அர்ப்பணிப்புடைய ஒன்றாகவே செயல் நிறைவேற்றமாகவோ அமைந்து தேவனுடைய தூதுவராக அவர்களை இணங்காட்டுகின்றதா? (8ம் அதிகாரத்தில் உள்ள “மேலதிக படிப்பினை” பகுதியில் ஆபிரகாமை குறித்த கற்றலானது தனிப்பட்ட குணாதிசயத்திற்கு உதாரணம் ஆகும்)
-தேவன் நியமித்த பொறுப்பை எவ்விதம் ஒரு மனிதன் நிறைவேற்ற முடியும்?
-அவர்களது வெற்றிக்கு காரணமாய் அமைந்தது என்ன?
-எவ்விதமாய் அவர்கள் விழுந்தார்கள்? அவர்களது விழுகைக்கு காரணம் என்ன? எவ்விதம் இக்குறைப்பாடுகள் நீக்கப்பட்டன?
-அவர்களுடைய அனுபங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் விடயங்கள் எவ்வாறு நீங்கள் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாய் அமையும்?

### புத்தக பாடங்கள்:

வேதாகமத்தின் உலக நோக்கத்தின் விரிவாக்கத்தை மனதில் கொண்டு வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை குறித்து கற்றுக்கொள்ளுங்கள்.. இப்புத்தகத்தின் நீங்கள் பார்ப்பது, ஒவ்வொரு புத்தகமும் தேவ திட்டத்தை உலகளாவிய மக்கள் கூட்டத்தில் வெளிப்படுத்துகின்ற உண்மைகளாகும். ஓர் குறித்த புத்தகத்தை கற்கும் போது, கீழுள்ள கேள்விகளை கேளுங்கள்:

-தேவனுடைய உலகின் காரணத்தின் அடிப்படையில் இப்புத்தகத்தின் குறிக்கோள் என்ன? எவ்வாறு

தேவனுடைய, நோக்கை அடிப்படையாகக் கொண்டு இப்புத்தகத்தின் நிகழ்வுகள் எழுதப்பட்டுள்ளன?
-யார் இப்புத்தகத்தின் பிரதான பாத்திரம்? தேவனுடைய திட்டத்தின் அடிப்படையில் அவர்களது குணாதிசயத்தை நோக்கி குணாதிசய பாடத்தை கற்கவும். (முன்னர் தரப்பட்ட குறிப்புகளை "குணாதிசய படிப்பு"ல் உபயோகிக்கவும்)
-தேவ திட்டத்தை, குறிக்கோள்களை குறித்துப் பேசும் இப்புத்தகத்தில் உள்ள விசேஷித்த வசனங்களை குறிப்பிடுக? (முன்னர் தரப்பட்ட "வசன படிப்பு" குறிப்பை பார்க்க)
-இப்புத்தகம் உங்களுக்கு தேவனுடைய உலகளாவிய குறிக்கோள்களை கொண்டதாக தரும் தனிப்பட்ட சவால்கள் எவை? இப்புத்தகத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட காரியம் குறித்து எவ்வாறு செயற்பாட்டு ரீதியாக பிரதிபலிப்பீர்கள்?

அதிகாரம் பதினொன்று

# அப்பொழுது முடிவு வரும்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோள் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.
- ☐ முடிவு காலத்தில் உலகில் நடைபெறும் நிகழ்வுகளையும் தேவனுடைய திட்டத்தின் முக்கிய பிரதான சம்பவத்தையும் விளக்கவும்.
- ☐ உலகின் முடிவை விவரிக்கும் வேதாகம வசனங்களை தரவும்.
- ☐ உலகினை முடிவிற்கு கொண்டுசெல்லும் சம்பவங்களையும் உலக மக்களுக்கான தேவ திட்டத்தின் முக்கிய பங்கையும் சுருக்கமாக தரவும் முடியும்.

**திறவுகோள் வசனம்:**

> **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

## அறிமுகம்

இப்பாடத்தின் முதல் அதிகாரமானது உலகத்தின் படைப்பின் ஆரம்பம் பற்றி விபரிக்கின்றது. அந்த ஆரம்பத்தோடு பழைய, புதிய ஏற்பாட்டு காலத்திலிருந்து தற்போதைய சபையின் காலத்திற்கும், இன்றைய நாட்களுக்கும் வந்து நிற்கின்ற வரலாற்றில் தேவனுடைய திட்டங்களுக்கமைய பூரணமாக்கப்படுகின்ற கட்டமைப்பினை தொடர்ந்து வந்தீர்கள்.
ஆனாலும் உலகத்தின் எதிர்காலத்தை குறித்து வேதாகமம் எதை கற்பிக்கின்றது? உலகத்தின் முடிவைக் குறித்து இயேசு பேசியுள்ளார். இது எதனை குறிக்கின்றது. இப்பாடமானது இவைகளுக்கான விடையாகவும், இக்காரியங்களினது கலந்துரையாடலின் அம்சமாகவும், உலக மக்களுக்கான தேவ திட்டத்தின் பிரதான அம்சத்தை காண்பிப்பதாகவும் அமைகின்றது.

### பிரதான நிகழ்வு

தம்மை பின்பற்றியோருக்கு இயேசு வாக்களித்ததாவது:

> **ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.........**
> **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். (யோவான் 14:2-3)**

தாம் மீண்டும் உலகிற்கு வந்து மறுபடியும் பிறந்த தம்முடைய விசுவாசிகளை தம்மால் ஆயத்தம் பண்ணப்பட்ட இடத்திற்கு கொண்டு சேர்க்கப்போவதாக இயேசு கூறினார். இது எப்போது நடைபெறும்? தேவனைத் தவிர சரியான நேரத்தை யாரும் அறியார்கள்:

> **அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். (மத்தேயு 24:36)**

நாம் இதற்கான சரியான நேரத்தை அறியோம். ஆனாலும் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அந்த நேரம் அருகிலிருப்பதாக அறியும்படிக்கு ஒரு பிரதான சம்பவத்தை கூறினார்:

> **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

இப்பிரதான சம்பவம் உலகின் முடிவிற்கான காரியமாவதுடன், தேவ திட்டத்தின் முக்கிய அம்சமாய் தேவ ராஜ்ஜியத்தின் நற்செய்தியை சகல மக்களுக்கும் அறிவிக்க வருகின்றது. தேவதிட்டத்தை நிறைவேற்றுவதற்காக எமக்கு இருக்கும் முக்கிய பொறுப்பு இது!
இப்பாடத்தின் மூலமாக சபையின் முன்னுள்ள கடமைகளையும், இச்சவாலை நிறைவேற்ற உங்களுடைய தனிப்பட்ட உத்தரவாதத்தினையும் கற்றுக்கொண்டுள்ளீர்கள். அத்தோடு "இராஜ்ஜியத்தின் நற்செய்தி"யைக் குறித்து பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய செய்தியை நீங்கள் அறிந்து கொண்டீர்கள். இயேசு பேசிய "முடிவு" என்பது என்ன? முடிவு என்பது உலகின் முக்கிய திருப்புமுனை, ஆனாலும் நேரத்தை நாம் இப்போது அறிவோம். இதுவே தேவனின் உலகின் மக்களுக்கான முக்கிய இறுதி திட்டமாகும்.

## தீர்க்கதரிசன பதிவுகள்

உலகம் முடிவைக் காணும் என்பதற்கான அனைத்து விடயங்களையும் தேவன் வெளிப்படுத்தவில்லை, எனினும் தீர்க்கதரிசனமாக முக்கிய அம்சங்களை வரைகோடாக அவர் எமக்கு தந்துள்ளார். "தீர்க்கதரிசனம்" என்பது வெளிப்பாட்டினை குறித்து பேசுவதாகும். வேதாகம தீர்க்கதரிசனங்கள் "வெளிப்பாட்டின் வார்த்தை"யில் மூன்று உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.

> தேவனால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி.
> தேவனுடைய நித்திய திட்டத்தின் எதிர்கால தரிசனம்.
> தேவ செயற்பாடு குறித்த மனிதருக்கான வெளிப்பாடு.

வேதாகமத்தில் தானியேல் மற்றும் வெளிப்படுத்திய விசேஷத்திலேயே உலகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய முக்கிய தீர்க்கதரிசனங்கள் காணப்படுகின்றன. விசேஷ பகுதிகளாக மத்தேயு 24லும் 1தெசலோனிக்கேயர் 4:13-18 ஆகியவை மேலதிக தகவல்களை தருகின்றன. இப்பகுதிகள் குறித்து படிப்பதன் மூலம் நாம் உலகின் முடிவு குறித்த தேவன் வெளிப்படுத்தியவற்றை அறியலாம்.

### வெளிப்படுத்தப்பட்டவை எவை

தேவனால் உலகின் முடிவைக்குறித்து வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் பற்றிய சுருக்கமான குறிப்புக்கள் இதோ:

**தேவ இராஜ்ஜியம் பற்றிய நற்செய்தி அறிவிப்பு:**

முடிவு வருமுன் இது நிறைவு பெறும் (மத்தேயு 24:14)

**இரகசிய வருகை:**
இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் அனைத்து மக்களுக்கும் அறிவிக்கப்பட்ட பின், இயேசுவானவர் தமது விசுவாசிகளுக்காக வருவார். 1 தெசலோனிக்கேயர் 4:13-18 பகுதி "இரகசிய வருகை" நிகழ்வில்

வருகையின் தகவல்களை விரிவாக எடுத்துரைக்கின்றது. “இரகசிய வருகை” என்னும் பதம் வேதப்பகுதிகளில் காணப்படவில்லையெனினும் “எடுத்துக்கொள்ளப்படுதல்” தான் இதன் அர்த்தமாகும்.

இயேசு தாமாக வருவார். (வசனம் 16)
மரித்துப் போன விசுவாசிகள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (வசனம் 16)
எடுத்துக்கொள்ளப்படுதல் என்றால் “ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒருவரை கொண்டு செல்லுதல்” என்பதாகும்.
உயிரோடுள்ள விசுவாசிகள் வானத்தில் இயேசுவை சந்திப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (வசனம் 17)
முன்னர் மரித்துப் போன விசுவாசிகளுக்கும், இயேசுவின் வருகையில் உயிரோடு இருப்பவர்களுக்கும், இயேசு கிறிஸ்துவிற்கும் அங்கு ஓர் ஐக்கியம் உண்டாகும். (வசனம் 17)

சில மக்கள் உபத்திரவ காலத்திற்கு முன்னமே கிறிஸ்துவின் வருகை உண்டு என்பதாகவும், தேவன் உபத்திரவத்தை அனுமதிக்கப் போவதில்லை என்பதாகவும் விசுவாசிக்கின்றார்கள். மற்றும் சிலர் உபத்திரவத்தின் இடைநடுவில் கிறிஸ்துவின் வருகை உண்டு என்கின்றார்கள். ஏனைய சிலர் உபத்திரவத்தின் பின்னர் வருகை உண்டு என விசுவாசிக்கின்றார்கள். ஆனாலும் அதிகமானோரின் விசுவாசம் உபத்திரவத்திற்கு முன்னமே வருகை உண்டு என்பதாகும். எடுத்துக்கொள்ளப்படுதல் குறித்த பல்வேறு வித நேர அட்டனை ஏற்பட வேதத்தின் பகுதிகளின் பல்வேறு வியாக்கியானங்களே காரணமாய் அமைகின்றன. உண்மையாகவே பிதாவையும் குமாரனையும் தவிர (மத்தேயு 24:36) யாருக்கும் குறிக்கப்பட்ட நேரத்தை பற்றி அறிய முடியாது. முக்கியமான காரியம் என்னவெனில் நீங்கள் உண்மையான விசுவாசி எனில் நீங்கள் அறிய வேண்டியது இயேசுவின் வருகை எப்பொழுது நடைபெற்றாலும் அவரோடு போக ஆயத்தம் உள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

## உபத்திரவம்:

சில மக்கள் இயேசுவின் வருகையை குறித்த மகிழ்ச்சியடையப் போவதில்லை:

> **இதோ, மேகங்களுடனே வருகிறார்ஞ கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென். (வெளிப்படுத்தல் 1:17)**

மக்களுடைய வேதனைகளுக்கு காரணம் அவர்கள் இயேசுவை விசுவாசிக்கமையே அகும். அவர்கள் அவரை நிராகரித்து தமது சொந்த பாவ வழிகளில் செல்கின்றனர். இப்போது, அவர்கள் மகா துன்பத்தை சந்திக்க நேரிடுகின்றது. வேதாகமம் இந்த காலத்தை “உபத்திரவகாலம்” என அழைக்கின்றது ஆனால் இது விசுவாசிகள் கிறிஸ்துவால் எடுத்துக்கொள்ளப்பட்ட பின் நடைபெறும்.

உபத்திர காலமானது 42 மாதங்கள் அல்லது 1,260 நாட்கள் ஆகும் (தானியேல் 9:24-27).
இது மிகவும் உபத்திரவ காலமாகும். உலகிற்கு அநேக உபத்திரவ காலம் காணப்படும், ஆனால் முன்று காரியங்கள் ஏனைய துன்பங்களிலிருந்து முக்கிய குறிப்பிடத்தக்க உபத்திரமாய் அமைகின்றன.
முதலாவது: இது உலகளாவியது. குறித்த பிரதேசங்களுக்கு மட்டும் அல்ல. (வெளிப்படுத்தல் 3:10)
இரண்டாவது: மக்களுக்கு உலகின் முடிவு நெருங்கியதை அறியக் கூடியதாய் இருக்கும். (வெளிப்படுத்தல் 6:16)
மூன்றாவது: உபத்திரவத்தின் தன்மையானது முன்னர் ஒருபோதும் நேரிட்டிராத அளவிற்கு பெரியது (மத்தேயு 24:4-14).

---

சர்வதேச அறுவடை நேரத்தின் “வேதபடிப்பை உருவாக்கும் முறை” என்ற 20ம் அதிகாரத்திலுள்ள பாடம் வேதாகம தீர்க்கதரிசன படிப்பை கற்க வழிகாட்டும்.

**ஆயிரம் ஆண்டு:**

வேதாகமம் உபத்திரவத்திற்கு பின்னராக 1,000 வருட ஆட்சி இயேசுவின் கீழாக பூமியில் நீதியாக ஆளப்படும் என்கின்றது. (சகரியா 14:9; தானியேல் 7:14). எருசலேம் நகரமானது அரசாட்சியின் மைய நகரமாக அமையப்படும் (ஏசாயா 2:3). இந்தகாலமானது சாத்தான் தேவனுக்கு விரோதமாக கடைசியாக கலகம் செய்வதோடு நிறைவு பெறும் (வெளிப்படுத்தல் 20:7-9). தேவன் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி எதிரானவர்களை அழிப்பார். சாத்தான் நித்தியமாக எரிகின்ற அக்கினிக் கடலில் தள்ளப்படுவான் (வெளிப்படுத்தல் 20:10)ஷ

**நியாயத்தீர்ப்பு:**

யாரெல்லாம் அவிசுவாசிகளாக மரித்தார்களோ அவர்கள் நீயாயத்தீர்ப்படையும்படிக்கு உயிரோடு எழுப்பப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பவும் இல்லை இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அவர்கள் நித்தியமாக நரக ஆக்கினைக்கு உள்ளாவார்கள் (வெளிப்படுத்தல் 20:12-15). உண்மையான விசுவாசிகள் பாவத்தை விட்டு மனந்திரும்பி கிறிஸ்து இயேசுவோடு கூட தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் களிப்பார்கள் (வெளிப்படுத்தல் 21).

**உலகத்தின் அழிவு:**

வேதாகமமானது உலகமானது அக்கினியால் அழிக்கப்படும் என்கின்றது:

> **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்ஓ அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். (2பேதுரு 3:10)**

காலத்தை இப்போது நாம் அளவிட முடியும், காலம் இனி செல்லாது. நாம் நித்தியத்திற்குள் செல்ல உள்ளோம், அது ஆரம்பமும் முடிவும் அற்றது.

> **சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி:**
> **இனி காலம் செல்லாதுஓ வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான். (வெளிப்படுத்தல் 10:5-6)**

## தேவனின் சித்தம் நிறைவேறுதல்

நீங்கள் முன்னதாக கற்றுக்கொண்ட உங்களை குறித்த தேவனின் சித்தம் நினைவில் உள்ளதா?

> காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,
>
> தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)

கடைசியாக தேவனின் விசேஷதிட்டங்கள் நிறைவடையும்:

> **ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயினஞூ அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:15)**
> **அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 5:13)**

## சிங்காசனத்திற்கு முன்பாக

தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார். இதைக்குறித்த விபரிப்பானது வெளிப்படுத்தல் அதிகாரம் 21,22ல் தரப்பட்டுள்ளன. எல்லா ஜாதிகளிலும் உள்ள விசுவாசிகள் அனைவரும் ஒரே உண்மையான தேவனுனோடு ஒன்றாய் கூடுவார்கள்.

> **இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.**
> **அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.**
> **தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு:**
> **ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாகஞூ ஆமென், என்றார்கள். (வெளிப்படுத்தல் 7:9-12)**

சலக ஜாதிகளிலுமுள்ள ஆண்கள், பெண்கள் - எல்லா கோத்திரங்களும், பாஷைக்காரரும் எல்லா மக்களும்- சிங்காசனத்திற்கு முன்பாக கூடிக்கொள்வார்கள். பரலோகில் மிகுந்த சந்தோஷம் காணப்படும், ஆனாலும் முக்கியமான ஒரு சவாலை நாம் மறந்து விடக் கூடாது அது யாரெல்லாம்

> **கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்...... (ரோமர் 10:13)**

ஆனால்....

> **அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? (ரோமர் 10:14-15)**

நீங்கள் வேதாகமத்தின் உலக நோக்கத்தை கற்றுக்கொண்டீர்கள். நீங்கள் உலகத்தை தேவன் பார்க்கும் விதமாய் பார்த்து விட்டீர்கள்.

இப்பொழுது....... உங்களுடைய தனிப்பட்ட மாபெரும் இச்சவாலுக்குரிய பிரதிபலிப்பு என்ன?

## சுய பரிசோதனை

1. மனப்பாடத்திலுள்ள திறவுகோள் வசனத்தை எழுதவும்.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உலகின் முடிவுற்கு முன்பதாக நடைபெறும் பிரதான நிகழ்வு என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. ஜாதிகளை குறித்த தேவனுடைய விசேஷித்தயும் உலகத்தின முடிவு காலத்தை குறித்தும் அதிக தகவல்களை தரும் வேதாகமத்தின் இரண்டு புத்தகங்கள் என்ன?

-----------------------------------------------------முடம் -----------------------------------------------------------முடம்

4. “இரகசிய வருகை” குறித்ததான அதிக விடயங்கள் எங்கே உள்ளன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. புதிய வானம், புதிய பூமி குறித்ததான அதிக விடயங்கள் எங்கே உள்ளன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. வானமும் பூமியும் அழிவடைகின்றதை குறித்து எந்த வசனங்கள் விபரிக்கின்றன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. ஜாதிகளை குறித்த தேவனுடைய விசேஷித்த திட்டத்தையும் உலகத்தின முடிவு காலத்தை குறித்தும் சம்பவங்களை சுருக்கமாக்குக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இக்கையேட்டின் கடைசி அதிகாரத்தில் இப்பரிசோதனைகளுக்கான பதில்களானது ஆராய்ந்து தரப்பட்டுள்ளது)

## மேலதிக படிப்பிற்கு

1. உலகின் முடிவைப்பற்றிய தேவ வெளிப்பாட்டை கற்றுக்கொள்ள படியுங்கள்:
   -தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்களை படியுங்கள்
   -மத்தேயு 24ம் அதிகாரத்தை படியுங்கள்
   -1 தெசலோனிக்கேயர் 4:13-18, 2பேதுரு 3:10 ஆகியவற்றை படியுங்கள்.

2. ஜாதிகளை குறித்த தேவனுடைய விசேஷித்தயும் உலகத்தின முடிவு காலத்தை குறித்தும் வெளிப்படுத்தல் புத்தகம் காண்பிக்கின்றது. முன்னைய பாடங்களில் "உலகம் வார்த்தையில் அடங்கியுள்ளது" என்பதை முழு வேதாகமமும் வெளிப்படுத்தல் வார்த்தைகளோடு வெளிப்படுகின்றது என்பதை நீங்கள் கற்றுக்கொண்டீர்கள்.
   இப்பாடத்தின் வேதபகுதிகளாக வெளிப்படுத்தல் புத்தகத்தில் பகுதிகள் உள்ளடக்குகின்றன. கீழுள்ள வேத பகுதிகள் சகல ஜாதிகளுக்கும் வேதாகமத்தின் இறுதி குறிப்பிடத்தக்க வசனங்களாகும்.
   -இயேசுவே உலகத்தின் மன்னாதி மன்னர்: 1:5
   -பூமிக்கு இயேசுவின் வருகை: 1:7
   -எல்லா ஜாதிகளிலுமுள்ள விசுவாசிகளுக்குமுள்ள வாக்குத்தத்தங்கள்: 2:26; 3:10
   -உலகத்தின் ஜாதிகளின் இறுதியான அறுவடையும் கற்பித்தலும்: 14:6-7, 15-19
   -உலகத்தின் முடிவு: 10:5-6; 11:15; 13:8; 17:8
   -புதிய வானம், புதிய பூமி மற்றும் நிகழும் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. 5:9-10,13; 7:9-11; 15:4; 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் (ஜாதிகளுக்கான விசேஷித்த பகுதிகள் 21:24,26; 22:2)

# சுய பரீட்சைக்கான விடைகள்

**அதிகாரம் ஒன்று:**

1. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:1)

2. மெய்யான ஒரே தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படுகின்றார்.

3. சிருஷ்டிப்பைபற்றி வித்தியாசமான கதைகள் இருப்பதற்கான காரணம்: சிருஷ்டிப்பை பற்றிய உண்மையான சத்தியத்தை மக்கள் அறியவில்லை.அவர்கள் கேள்விப்பட்ட சிருஷ்டிப்பின் உண்மையான கதையை அவர்கள் தேர்ந்தெடுக்கவில்லை

4. வேதாகமத்திலுள்ள சிருஷ்டிப்பின் சத்தியத்தை சிலமக்கள் ஏற்றுக்கொள்ளாமலிருக்க காரணம் அவர்கள் தேவனைப்பற்றிய அறிவு இல்லாதிருப்பதாகும். தேவன் ஒருவர் இருக்கின்றார் என்ற சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் போது, அவர்கள் மேலுள்ள அவரது ஆளுமையையும் அறிந்துக்கொள்வார்கள். அவரது வார்த்தையை விசுவாசித்து அவர்களது ஈனமான வாழ்வில் எதையாவது அவருக்காக செய்வார்கள். தமது வாழ்வின் வழிமுறைகளை மாற்றிக்கொள்ள விரும்பாத மக்கள், வேதாகமத்தின் சிருஷ்டிப்பை பற்றிய காரியங்களையும் தேவன் இருக்கிறார் என்பதையும் மறுதலித்து விடுகின்றார்கள்.

5. நாம் வேதாகமத்தின் உலக கண்ணோட்டத்தின் விரிவாக்கத்தைபற்றி பேசும்போது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

6. தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைப்பற்றி முதலாம் அதிகாரத்தில் உள்ள பட்டியலின் சுருக்கத்தை அவதானிக்கவும்.

7. தேவனுடைய எல்லா சிருஷ்டிப்பிலும் மனிதனே விஷேசித்தவனாயிருந்தான்அவனுக்கு ஆவியும், சித்தமும் இருக்கின்றபடியால் அவனால் கற்று தேவனுடன் உறவு வைத்துக் கொள்ள கூடியதாய் உள்ளது. தன்னை சிருஷ்டித்த தேவனுடன் உறவுகொள்ளவும், ஆராதிக்கவும் கூடியதாகவே அவன் சிருஷ்டிக்கப்பட்டான்.

8. முதலாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள □மனிதனின் விழ்ச்சி□யின் சுருக்கத்தை கவனிக்கவும்.

9 முதலாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள □மனிதனின் விழ்ச்சி□யினால் ஏற்பட்ட பலாபலனின் சுருக்கத்தை கவனிக்கவும்.

10. ஆதியாகமம் 3:15

11. பௌதீக உலகமும், ஆவிக்குரிய உலகமும்.

**அதிகாரம் இரண்டு:**

1. அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத்தொடங்கினார்கள்;

இப்பொழுதும் தாங்கள்செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். (ஆதியாகமம் 11:6-7)

2. பாபேல் கோபுரத்தின் சம்பவத்தின்பின் உலகத்தில் பல பாஷைகளைப்பேசும் பல குழுக்கள் ஏற்பட்டது.

3. ஒரே பாஷைகளை பேசுகின்றவர்கள் என்பதின் அடிப்படையில் ஒன்றாக சேர்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள். ஒரே பாஷைகளின் அடிப்படையில் குழுக்களாக அல்லது ஆதிவாசிகளாக அல்லது கோத்திரங்களாக சேர்ந்து அமைப்புகளாக செயல்பட்டார்கள். இதனால் பல்வேறு முககள் குழுக்கள் உண்டானது.

4. பல காலங்களின் பின்னர் இந்த குழுக்கள் மிகவும் பெருகி தேசங்கள் கொண்ட அமைப்பாக மாறினர். பூகோள எல்லைகளை அமைத்து, அரசியல், ஆளுகை முறைகளையும் தமது வசிப்பிடங்களிலே ஸ்தாபித்துக் கொண்டனர். இவ்விதமாக உலகத்தில் பல ஜாதிகள், பல பாஷைகள், பல கலாச்சாரங்கள், பல சடங்காச்சாரங்கள் என்ற பிரிவினைகள் ஆரம்பமாகியது.

## அதிகாரம் மூன்று:

1. அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி:எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. (லூக்கா 24:45-47)

2. வேதாகமத்தின் “பிரதான வசனம்” லூக்கா 24:45-47 ஆகும்.

3. வேதாகமத்தின் “பிரதான வசனம்” முன்வைக்கும் இரண்டு அடிப்படை சத்தியங்கள்.
முதலாவது: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது;

இரண்டாவது: மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது.

4. உலகத்தைப்பற்றிய,தேவனுடைய நோக்கத்தை விபரிக்கும் வேதவசனங்கள். எபேசியர் 1:9-10, 3:11

5. இயேசு கிறிஸ்துவுக்கூடாக பாவம் நிறைந்த மக்களை தம்முடன் சேர்த்துக் கொள்வதே தேவனுடைய நித்திய திட்டமாக இருக்கின்றது.

6. அறுவடையின் நிலங்கள்.

**அதிகாரம் நான்கு:**

1. சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 1:11)

2. பாவமுள்ள மனிதனை இரட்சிப்பதே, தேவனினுடைய திட்டம், அதுவே வேதாகமத்தின் மைய செய்தியாகவும் இருக்கின்றது

3. நான்காம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

4. நான்காம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

5. நான்காம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

6. நான்காம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

**அதிகாரம் ஐந்து**

1. பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)

2. உலகை மீட்கும் தேவனுடைய திட்டம், தேவதூதனால் மரியாள், சிமியோன், மற்றும் பிறருக்கும் அறிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிவித்தலும் மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்கும் அவருடைய நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

3. ஐந்தாம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

4. ஐந்தாம் அதிகாரத்தில் உள்ள சாராம்சத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

5. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கூடாக பாவமுள்ள மனிதன் நீதியுள்ள தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டான்.

6. பாவமுள்ள மனிதன் நீதியுள்ள தேவனுடன் ஒப்புரவாக்கப்பட, அவர் உலகத்திற்கு அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றினார். தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் அதனால் பூர்த்தியானது.

## அதிகாரம் ஆறு

1. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)

2. உலகிலுள்ள சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற பெரிதான கட்டளை இயேசுவால் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

3. யோவான் 20:21-23, அப்போஸ்தலர் 1:8, யோவான் 15:16: லூக்கா 24:45-49, மாற்கு 16:14-16: மத்தேயு 28:16-20

4. சபை இரண்டு படிமுறைகளில் காட்டப்படுகின்றது.

   **உலகளாவிய ரீதியில்:** இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற சகல மக்களும் இச்சபையில் அடங்குவர். இது தேவனுக்கூடாக மறுபடியும் பிறந்து, அவருக்கு கீழ்ப்படிந்து வாழுகின்ற விசுவாசிகளின் ஐக்கியமேயாகும். "சபை" என்னும் சொல்லின் அர்த்தமானது "அழைக்கப்பட்டவர்கள்" அல்லது "வேறுபிரிக்கப்பட்டவர்களள" என்பதாகும். சாத்தானின் ராஜ்ஜியத்திலிருந்து, தேவ ராஜ்ஜியத்திற்கு அழைக்கப்பட்ட கூட்டமே சபை. இதில் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட சகல ஜாதியினரும், ஆதிவாசிகளும், பலபாஷைபேசுவோரும், பல கலாச்சாரத்தை சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்படுவர்.

   **உள்ளுர் ரீதியாக:** ஊழிய நோக்கத்திற்காக, ஸ்தாபனம், ஐக்கியம், விசுவாசிகளின் கூட்டம் என்று ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்ட சாதாரண ஐக்கியங்களாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டு காலத்தில் சபை சாதாரண விதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

5. திருச்சபை அப்போஸ்தலர் 2ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி பெந்தேகொஸ்தே நாளிலேயே ஆரம்பமானது. அது தேவனுடைய வல்லமையை நிருபித்துக் காட்டும்படியாக பிறந்தது.

6. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை

7. சபையிலுள்ள சகல விசுவாசிகளும் ஆவிக்குரிய சகோதர, சகோதரிகள் என்ற உறவை கொண்டுள்ளனர். அவர்கள் "கிறிஸ்துவின் சரீரம" என அழைக்கப்படுகின்றனர், தலை இயேசுவாக இருக்கின்றார். தேவன் ஆவியில் நிறைந்த தலைவர்களையும், ஊழிய வரங்களையும் சபை தனது ஊழியத்தில் பாவிக்கும்படியாக கொடுத்துள்ளார்.

8. ஆராதனை, ஐக்கியம், மனிதரின் தேவைகளை சந்தித்தல் என்பனவற்றுடன் பலவிதமான முக்கிய பணிகள் சபைக்கு இருக்கின்றது. சுவிசேஷத்தை விரிவாக பரப்புவதே சபையின் முக்கிய நோக்கமாகும். பெரிதான கட்டளையை நிறைவேற்றுவதே சபையின் முக்கிய நோக்கமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

9. 1 கொரிந்தியர் 15:1-11ல், சுவிசேஷத்தின் சத்தியமானது சாரம்சமாகவுள்ளது. அடிப்படை போதனையானது இயேசு, அவருடைய ஊழியம், பாவத்திற்கான மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் என்பனவாகும். சுவிசேஷமானது கிருபை, விசுவாசம் என்பவற்றை அடித்தளமாக கொண்டது. சுவிசேஷம் என்பதின் அர்த்தம் யோவான் 3:16, யோவான் 14:1, மத்தேயு 11:28, ரோமர் 10:9 போன்ற வசனங்களில் இரட்சிப்பின் திட்டமாக முன் வைக்கப்படுகின்றது. இது இராஜ்ஜியத்தை பற்றி இயேசு பேசியவற்றை உள்ளடக்கிய பரந்த அர்த்தத்தை கொண்டது.

## அதிகாரம் ஏழு

1. அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்.......(மத்தேயு 9:37)

2. ஏழாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளதுடன் உங்களது சுருக்கத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

3. ஒரு குறிப்பிடத்தக்க தனிப்பட்ட ரீதியிலே ஒருவரோடு ஒருவர் பொது பிணைப்புடன் காணும் பெரிய குழு. இவ்விதமான பிணைப்பானது மொழிகளையும், கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும், புவியியல் ரீதியான ஸ்தாபனங்களும் உள்ளடக்கியதாக காணப்படும்.

4. சந்திக்கப்பட்ட மக்கள் குழுவினரிடையே பல விசுவாசிகள் இருக்கின்றமையால், இவர்கள் தமது சொந்த மக்களிடையே வெளியாரின் தலையீடு இன்றி சுவிசேஷத்தை அறிவிக்க முடியும்.

5. சுவிசேஷம் சந்திக்கப்படாத மக்கள் குழுவினரிடையே பூர்வீக குடிமக்களில் இதுகாலவரையும் விசுவாசிகள் இல்லாதிருக்கின்றமையால், இவர்கள் சுவிஷேசத்தால் சந்திப்பட வெளியாரின் தொடர்பும் உதவியும் அவசியமாக இருக்கின்றது.

6. சந்திக்கப்படாத மக்கள் இனங்கள்: ஆதிவாசி (பூர்வீக குடிகள்) மக்கள், இஸ்லாமியர், இந்துக்கள், சீனர்கள், பௌத்தர்கள்

7. ஒரு தேசம் சுவிசேஷத்திற்கு அடைக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் போது, வெளிநாட்டு தூதுப்பணியாளர்கள் அங்கு செல்ல முடியாதுள்ளனர் என்பதே இதன் அர்த்தம், சில சமயங்களில் அவர்கள் மற்ற சமய மக்களையும், அவர்களின் சட்டங்களையும் தாண்டி செல்ல வேண்டும். சில நாடுகளில் தம் மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வது தடைசெய்யப்பட்டு, அரச சட்டமாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

8. கூற்றானது உண்மையாது.

## அதிகாரம் எட்டு

1. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோவான் 15:16)

2. உலக கிறிஸ்தவர்களாகிய இக்குழுவினர் பல ஜாதியினரையும், கலாச்சாரங்களையும், பாஷைகளையும், சமயங்களையும், கொண்ட நிறுவனம் ஆகும். இவர்களுக்குள்ள பொதுவான ஒரு ஒற்றுமை என்னவென்றால் அவர்களுடைய தனிப்பட்ட ஒப்புக்கொடுத்தலோடு உலக கிறிஸ்தவர்களாக இருப்பதே ஆகும்.

3. 2 தீமோத்தேயு 2:2 லுள்ள பெருக்கத்தின் படிமுறையை விபரத்தை கொண்டே ஆதிசபையானது உலகை ஆதாயப்படுத்தியது

4. இக்கேள்வி கையொப்பத்தோடு கூடிய உங்கள் ஒப்புக்கொடுத்தலை எதிர்பார்க்கின்றது.

## அதிகாரம் ஒன்பது

1. என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும். (ஏசாயா 56:7)

2. பரிந்து பேசுபவர் ஒரு மத்தியஸ்தராவார். அவர் இன்னொருவரைக்குறித்து வேண்டுதலை செய்வார். நாம் எமது ஜெபங்களில் மூலமாக தேசங்களுக்காக பரிந்து மன்றாட வேண்டும். எமது பரிந்துபேசுதலின் மூலம் தேவன் ஏனையோர் மத்தியில் செயற்படுவதை காண முடியும். நாம் உலக தேசங்களுக்கான வேண்டுகோள்களை தேவனிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

3. நீங்கள் மற்றவர்களை சர்வலோக பரிந்து மன்றாடலராகவதற்கு பயிற்சியளியுங்கள்
முதலாவதாக:வேதாகம ரீதியான உலக நோக்கத்தை காண்பிக்கவும்.
இரண்டாவதாக: சர்வலோக பரிந்து பேசும் நபராக மாற்ற இந்த அத்தியாயத்தை பாவியுங்கள்.
மூன்றாவதாக: சர்வலோக மன்றாடலுக்கு ஓர் குழுவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

4. உங்களுடைய பதில் ஆம் என்றால், இந்த அதிகாரத்தின் குறிக்கோளை நீங்கள் வெற்றியாக நிறைவேற்றியுள்ளீர்கள்.

5. உங்களுடைய பதில் ஆம் என்றால், இந்த அதிகாரத்தின் குறிக்கோளை நீங்கள் வெற்றியாக நிறைவேற்றியுள்ளீர்கள்.

6. -பரிந்து பேசுதல் வசனத்திற்குட்பட்டது.
-மற்றவர்களை தாங்கும் கிரியையாக ஜெபம் இருக்கின்றது.
-சர்வலோக பரிந்து மன்றாடலுக்கு எல்லைகள் கிடையாது.

7. பரிந்து மன்றாடலில் அடங்குபவை:.
-தேவனை துதித்தல்: (10 நிமிடம்)
-உலகிற்காக பொதுவாக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
-உலகின் குறிப்பிட்ட பகுதிக்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
-குறிப்பிட்ட மிஷனரிக்காக அல்லது மிஷன் அமைப்புக்களுக்காக பரிந்து பேசுதல்: (10 நிமிடம்)
-சந்திக்கப்படாத ஒரு மக்கள் குழுவிற்காக ஜெபித்தல்: (10 நிமிடம்)
\- -விசேட தனிப்பட்ட ஜெப தேவைகளுக்காக ஜெபித்தல்: (10 நிமிடம்)

## அதிகாரம் பத்து

1. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)

2. உண்மையுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும்

3. -தரிசனத்திற்கு மாதிரியாக இருங்கள்.
   -தரிசனத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
   -தரிசனத்தை உங்கள் ஜீவியத்தின் மையமாக வைத்துக் கொள்ளுங்கள்.
   -தரிசனத்திற்கு கீழ்ப்படியுங்கள்

4. இக்கேள்விக்கு உங்களால் மாத்திரமே பதிலளிக்க முடியும். தரிசனத்திற்கு கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்க தீர்மானிக்காதிருந்தால், தொடர்ந்தும் அதை செய்யும்வரை தேவனை தேடுங்கள். இந்த அதிகாரத்தினதும், இந்த பாடத்தினதும் உண்மையான பரீட்சை இதுவே. உலகஜாதிகளுக்கான தேவனுடைய திட்டத்தை செயல்படுத்தும் நோக்கமுண்டா?

## அதிகாரம் பதினொன்று

1. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)

2. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும்.

3. வெளிப்படுத்தல் புத்தகமும் தானியேல் புத்தகமும்

4. 1 தெசலோனிக்கேயர் 4 :13-18

5. வெளிப்படுத்தல் 21, 22ம் அதிகாரம்

6. 2 பேதுரு 3:10

7. பதினோராம் அதிகாரத்தில் நாம் சம்பாஷித்த காரியங்களுடன் உங்களது சாராம்சத்தை உப்பிட்டு பார்க்கவும்.